பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

■ சுடர்: 29 ■ கதிர்: 016 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 26, வியாழன் 12.12.2013



மப்பான வானிலை

29 C 24 C



பக்கம் 06
இனப் படுகொலையாளர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது


பக்கம் 07
கவனத்தை ஈர்த்த கைகுலுக்கல்


பக்கம் 23
இந்திய அணிக்கு தொடரும் சோகம்


# அதிரடி அறிவிப்புகள்

- ❖ உதவி ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்பு
- ❖ கலைஞர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம்
- ❖ முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மீண்டும் கொடுப்பனவு

**மாகாண கல்வி நிதி ஒதுக்கீட்டில்**

யாழ்ப்பாணம், டிசெம்பர் 12
வடமாகாண வரவு - செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சுக்கான ஒதுக்கீடுகளில் அதிரடி அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர்களாகக் கடமையாற்றிய முன்னாள் தொண்டர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் ஒரேயடியாக 4,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 10,000 ரூபாவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 462 பேர் பயனடைவர். வடக்கைச் சேர்ந்த கலைஞர்கள் 50 பேருக்கு அடுத்த ஜனவரி மாதம் முதல் மாதாந்தம் 5,000 ரூபா ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்குக் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் நிறுத்தப்பட்டிருந்த 3,000 ரூபா கொடுப்பனவு நவம்பர் மாதத்திலிருந்து மீண்டும் வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் 1,800 பேர் பயனடைவர்.



வடக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்டம் மீதான இரண்டாம் நாள் விவாதம் நேற்று நடந்தது. கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஒதுக்கீடுகள் விவாதிக்கப்பட்டன.

அலுவலர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் படிகள், எரிபொருள், மின்சாரம், தொலை பேசிக் கட்டணங்கள், போக்கு வரத்துப் படிகள் என்

21 ஆம் பக்கம் பார்க்க

## வங்கக் கடலில் தொடர்ந்தும் 'மடி'

யாழ்ப்பாணம், டிசெ.12
வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள 'மடி சூறாவளி' தற்போது யாழ்ப்பாணத்துக்கு வடகிழக்கே 750 கிலோ மீற்றர் தூரத்தில் நிலை கொண்டுள்ளது என்று வளி மண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## கல்விச் சீரமைப்பு பற்றி ஆராய 2014 மார்ச்சில் முக்கிய மாநாடு

யாழ்ப்பாணம், டிசெ. 12
வடக்கு மாகாணத்தின் கல்வி நிலை தொடர்பில் ஆராயும் நோக்கத்தோடு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் மாநாடு ஒன்றை நடத்த உள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சர் நேற்று அறிவித்தார். மாகாண சபையின் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் த.குருகுலராஜா பின்தங்கிய நிலையிலுள்ள கல்வியை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

எல்லோரும் இன்று கல்வியைப் பற்றிப் பேசுகின்றனர். வடக்கின் கல்வி நிலை ஆரம்ப காலங்களில் மிகச் சிறப்பாக இருந்தது. புகழ்பூத்த பாடசாலைகள், கல்வியியலாளர்கள் இங்கே இருந்தார்கள். இன்று நாங்கள் ஒன்பதாவது மாகாணம். கடைசி மாகாணம் என்று சொல்வது வெட்கம் என்பதால் ஒன்பதாவது என்று சொல்

21 ஆம் பக்கம் பார்க்க

## சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு போதாது

யாழ்ப்பாணம், டிசெ. 12
வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு போதாது என்று குற்றஞ்சாட்டினார் அமைச்சர் ப.சத்தியலிங்கம். இந்த நிதி ஒதுக்கீட்டில் பழுதடைந்த வைத்திய உபகரணத்தின் ஒரு பகுதியைக் கூடத் திருத்த முடியாது என்றார் அமைச்சர்.

வடக்கு மாகாண சபையின் வரவுசெலவுத் திட்டத்தில் மாகாண சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சுக்கான ஒதுக்கீடு மீதான விவாதம் நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாணத்திற்குரிய சுகாதார திட்டம் தயாரிக்கப்

21 ஆம் பக்கம் பார்க்க

## இன்றும் விவாதம்

யாழ்ப்பாணம், டிசெ. 12
வடக்கு மாகாண சபையின் முதலாவது வரவு - செலவுத் திட்ட விவாதம் இன்று மூன்றாவது நாளாகவும் தொடரவுள்ளது. கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்கள் மீதான விவாதம் நேற்று இடம்பெற்று அவை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சுக்கள் மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில், வடக்கு மாகாண சபையின் மூன்றாவது அமர்வு இடம்பெற்று வருகின்றது. வரவு - செலவுத் திட்ட அமர்வாக இடம்பெற்று வரும் இந்த அமர்வு மூன்றாவது நாளாக இன்றும் தொடரவுள்ளது.

முதலாம் நாளில் நிதியும் திட்டமிடலும், சட்டமும், ஒழுங்கும், காணி, வீதி அபிவிருத்தி, மின் சக்தி, வீடமைப்பு, நிர்மாணம், நீர் வழங்கல், கூட்டுறவு அபி

21 ஆம் பக்கம் பார்க்க

## தேசியக் கொடியில் சிங்கத்தை நீக்குக

### *விக்கிரமபாகு கோரிக்கை*

கொழும்பு,டிசெ 12
இலங்கையின் தேசியக் கொடி மாற்றியமைக்கப்படவேண்டும் என நவசமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

இலங்கையின் தேசியக் கொடியில் இருக்கும் சிங்கம் நீக்கப்படவேண்டும். அதற்குப் பதிலாக விவசாயியின் உருவமோ வேறு பொருத்தமான உருவமோ பொறிக்கப்படவேண்டும் என விக்ரமபாகு குறிப்பிட்டார்.

இலங்கையின் தேசியக் கொடி நாட்டில் வாழும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யவில்லை என வடக்கு மாகாண விவசாயம், கால்நடை மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்திருந்தார். இதன் காரணமாக மன்னாரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் தேசிய கொடியை ஏற்ற மறுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## மண்டேலாவின் முன்னுதாரணமே இலங்கைக்கு ஒரேயொரு வழி

### *பிரிட்டனின் பிரதிப் பிரதமர் வலியுறுத்தல்*

லண்டன்,டிசெ 12
போரினால் ஏற்பட்ட காயங்களில் இருந்து அனைத்து மக்களுக்கும் அமைதியையும், ஒற்றுமையையும் கொண்டு வருவதற்கு நெல்சன் மண்டேலாவின் முன்னுதாரணத்தைப் பின்பற்றுவதை விட இலங்கைக்கு வேறு நல்ல வழி கிடையாது என்று பிரிட்டனின் பிரதிப் பிரதமர் நிக் கிளெக் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தென்னாபிரிக்காவின் உண்மை



21 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை-இந்திய மீனவர் இம்மாத இறுதியில் பேச்சு

புதுடில்லி,டிசெ 12
தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பல மாதங்களாகத் தொடர்ந்து மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்ததை அடுத்து இலங்கை மற்றும் இந்திய மீனவர்களுக்கு இடையிலான பேச்சு இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

இரு நாட்டு மீனவர்களும் சந்திப்புக்கான திகதியைத் தீர்மானிப்பதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சும் தமிழக அரசும் பேச்சுக்களை நடத்துவதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் இந்தியச் சிறைகளில் மீனவர்கள் அடைக்கப்பட்டுள்ள நிலைமையில் இந்தப் பேச்சு நடைபெறவுள்ளது.

இந்தப் பிரச்சினைபற்றி தமிழக அரசிடமிருந்து அதன் கருத்தை எதிர்பார்த்திருப்பதாக

21 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர் 110 பேர் கைது

திருகோணமலை,டிசெ.12
கிழக்குக் கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்ததாகத் தெரிவித்து 110 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நேற்றுக் கைது செய்தனர். அத்துடன் அவர்கள் பயணித்த 15 றோலர்களையும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

திருகோணமலையை அண்டிய கடற் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த போதே இவர்களைக் கைது செய்ததாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்த மீனவர்களைக் கடற்படையினர், திருகோணமலைப் பொலிஸாரிடம் நேற்று மாலை ஒப்படைத்தனர். (த-400)

## இலங்கை விடயத்தில் இந்தியா மென்போக்கு


### *மத்திய அரசு மீது பா.ஜ.க பாய்ச்சல்*

சென்னை,டிசெ 12
தமிழகத்தின் எதிர்ப்பு இருக்கும் போது இந்திய மத்திய அரசு, இலங்கைப் படையினருக்குப் பயிற்சிகளை எவ்வாறு வழங்க முடியும் என்று பாரதீய ஜனதாக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது. இலங்கை விடயத்தில் இந்தியா தொடர்ச்சியாக மென்போக்கைக் கொண்டிருப்பதாகவும் அது குற்றம் சாட்டியுள்ளது.

அடல் பிஹாரி வாஜ்பாய், பிரதமராக இருந்தபோது பணத்துக்காகக் கூட இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கப்போவதில்லை என்று இந்தியா தெரிவித்திருந்தது.

எனினும் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் தொடர்ந்து கொண்டிருப்பதைத் தெரிந்துகொண்டும் கூட மன்மோகன் சிங்கின் அரசு இலங்கைப் படையினருக்குப் பயிற்சி வழங்க உறுதியளித்தமை வியப்புக்குரியது என்று பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் எல் கணேசன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சென்னையில் கூட்டத்தை நடத்திய அமைச்சர் சிதம்பரம் இலங்கைத் தமிழர்களுக்குச் சார்பாகப் பேசினார்.



இந்நிலையில் இந்தியா, இலங்கைப் படையினருக்குப் பயிற்சி வழங்கப்போவது தொடர்பில் அவர் விளக்கமளிக்க வேண்டும் என்றும் கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார். (து)

# அம்மிக்கல்லாலும் ஆட்லறியாலும் நேற்று சூடேறியது வடக்கு மாகாண சபை அமர்வு

## எதிர்க்கட்சியினரின் கருத்துகளுக்கும் ஆளும்கட்சி பதிலடி

தொகுப்பு:- தி.அமுதன்.

அம்மிக்கல்லும், ஆட்லறியும் அவையை நேற்று ஆக்கிரமித்திருந்ததுடன் பயங்கரவாதம் குறித்த பயங்கரமான விவாதமும் நடந்தேறியது. அமைச்சுக்கள் மீதான விவாதம் என்பதைத் தாண்டி மாகாண சபையில் நேற்றுச் சூடு பறந்தது. வார்த்தைப் பிரயோகங்களில் அனல் பறந்ததுடன் இடையிடையே சிரிப்பூட்டும் சம்பவங்களும் அரங்கேறத் தவறவில்லை.

ஆளுங்கட்சி உறுப்பினர்களை எதிர்ப்பதற்கு எதிரணியினருக்கு எண்ணிக்கையளவில் பலமில்லாததால் தனித்து ஒருவர் மட்டும் போராட வேண்டியிருந்தது.

வடக்கு மாகாணசபையின் மூன்றாவது கூட்டத் தொடர் கைதடியிலுள்ளவடக்குமாகாண பேரவைச் செயலகத்தில் இடம்பெற்று வருகின்றது. வரவு - செலவுத் திட்டக் கூட்டத் தொடராக இது இடம்பெற்று வருகின்றது. அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு அமர்வு தொடங்கியது.

**முதலமைச்சர் இல்லாத முதல் கூட்டம்**

கூட்டம் ஆரம்பமாகும் போது முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சபையில் சமுகமளிக்கவில்லை. இருந்தும் மாலையில் சுகாதார அமைச்சு மீதான விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது அவர் சபைக்கு வருகை தந்தார். இதே போல மற்றொரு உறுப்பினராக கேசவன் சயந்தனும் மதிய போசன இடைவேளையின் பின்னர் சபைக்கு வருகை தந்ததுடன் தர்மலிங்கம் சித்தார்த்தன் சபை முடிவுறுவதற்கு ஒரு சில மணிநேரம் முன்பாக வந்தார்.

திருமதி அனந்தி சசிதரன் நேற்றும்சபைக்கு வரவில்லை. அத்துடன் எதிரணியின் கந்தசாமி கமலேந்திரன் மற்றும் இராமநாதன் அங்கஜன் இருவரும் வருகை தரவில்லை.

சபை நடவடிக்கைகள் ஆரம்பமானதும் கல்வி அமைச்சின் வரவு செலவுத் திட்டம் அமைச்சர் குருகுலராஜாவால் சமர்பிக்கப்பட்டது.

இதன் போது அவர் பல்வேறு திட்ட முன்மொழிவுகளை முன்வைத்தார். அத்துடன் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறுவதற்கான வயதெல்லை குறைக்க வேண்டும் என்ற சீரிய ஆலோசனையையும் முன்வைத்தார்.

**அம்மியும் ஆட்டுக் கல்லும்**

மாவட்டங்கள் தோறும் நூதன சாலைகள் அமைக்கப்பட போவதாகக் குறிப்பிட்ட அமைச்சர், அதில் நாம் எதை வைக்கப் போகின்றோம் என்ற கேள்வியையும் கூடவே எழுப்பினார். எங்கள் அரும்பொருள்கள் எல்லாம் போய்விட்டன. அம்மியையும், ஆட்டுக்கல்லையும், துலாவையுமா வைக்கப் போகின்றோம் என்று கேட்டார். இதனால் சர்ச்சை எழும் என்று முன்னரே தெரிந்திருந்தால் அவர் அவ்வாறு சொல்லியிருப்பாரோ தெரியாது.

இதன் பின்னர் கல்வி அமைச்சின் மீதான விவாதம் இடம்பெறுவதற்கு முன்னர் சபை குழு நிலைக்கு மாறியது. விவாதத்தைவவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினர் இந்திரராசா தொடக்கி வைத்தார்.

கல்வி அமைச்சின் மீதான விவாதத்தில் பேசிய பெரும்பாலான உறுப்பினர்கள் அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைத்தனர்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு போதாது, ஆசிரிய வளப்பங்கீடு ஒழுங்காக இல்லை, ஆசிரியர்கள் இடமாற்றம்ஒழுங்காக இல்லை, ஆசியர்களுக்கான தங்குமிட விடுதிகள், பாசாலை மாணவர்களுக்கு போசாக்குக் குறைப்பாடுகள்,நிதி ஒதுக்கீடு போதாது என்பவற்றையே அனைவரும் கூறினர்.

**பாலியல் கல்வி**

அத்துடன் பாடசாலை மாணவர்களின் ஒழுக்க நெறிப் பிறழ்வு தொடர்பிலும் உறுப்பினர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அறநெறிப் பாடசாலைகள் இல்லாமையினாலேயே இவ்வாறான நிலை தோன்றுவதாக அவர்கள் குறிப்பிட்டனர். எனவே அதனை மீளச் செயற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

கல்வி அமைச்சர், தான் நேரடியாக ஒரு பாடசாலை மாணவர்களிடமும் பெற்றோரிடமும் இந்த ஒழுக்கப் பிறழ்வுகளுக்கு என்ன செய்யலாம் என்று கேட்டபொழுது. பாலியல் கல்வியைப் புகட்ட வேண்டும் என்று அவர்கள் கூறினர் எனச் சபையில் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அமைச்சர் செல்லும் போது அந்த மாவட்டத்தின் சகல மாகாணசபை உறுப்பினர்களையும் அழைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் மேரி கமலா குணசீலன்.

உறுப்பினர்கள் இரத்தினச் சுருக்கமாகப் பேச வேண்டும் என்று சபைத் தலைவர் திரும்பத் திரும்பச் சொன்னாலும் யாரும் அதைக்கேட்கவில்லை. செவிடன் காதில் ஊதிய சங்காகவே அது இருந்தது.

**நாடாளுமன்றம் செல்ல பேச வேண்டாம்**

கல்வி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றிய எதிர்கட்சி உறுப்பினர் ஜவாஹிர், போரினால் நாங்கள் பலவற்றை இழந்து விட்டோம். மாற்றங்களை உருவாக்க வேண்டும். அந்த மாற்றங்கள் எங்கள் மனங்களிலேயே உருவாக வேண்டும் என்று குறிப்பிட்டதுடன், வடக்கு மாகாண சபை என்பது தீர்வுத் திட்டம் அல்ல அது ஒரு படிக்கல் தான் என்று பேசிவிட்டார். எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும் அவர் மத்திய அரசின் பங்காளிக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதை மறந்து பேசி விட்டதாக உறுப்பினர்கள் பேசிக் கொண்டனர்.

அத்துடன் இங்கு சிலர் பிரதேச சபைகளிலிருந்து மாகாண சபைக்கும் மாகாணசபையிலிருந்து நாடாளுமன்றத்துக்கும் செல்வதற்காக வீராவேசப் பேச்சுக்கள் பேசுவதாக அவர் தெரிவித்தார். அதை விடுத்து அனைவரும் செயற்படவேண்டும் என்று அவர் கூற, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் புன்முறுவலுடன் இருந்தனர்.

**சரணாகதி அரசியல் வேண்டாம்**

மத்திய அரசுடன் மாகாண சபை நல்லுறவைப் பேண வேண்டும். அதன் மூலம் தான் மாகாணசபையைக் கட்டியெழுப்பலாம்.

நாங்கள் உங்களைச் சரணாகதி அரசியல் செய்யச் சொல்லவில்லை. இணக்க அரசியல் செய்ய சொல்கின்றோம்-என்றார்.

ஊடகங்கள் தமது வியாபாரத்துக்காக உண்மையை மறைத்துச் செய்திகளை வெளியிடுவதாக தனது காட்டத்தை வெளிப்படுத்தினார் ஜவாஹிர்.

**ஆட்லறியாக மாறிய அம்மிக்கல்**

இவ்வாறு வீரவசனம் பேசிக் கொண்டிருந்தால், கல்வி அமைச்சர் சொன்னதைப் போன்று நூதன சாலைகளில் அம்மிக்கல்லும், ஆட்டுக் கல்லும் வைக்க முடியாது. மாறாக ஆட்லறியும், மல்ரிபரலுமே வைக்கப்படும் நிலை வந்து விடும்-என்றார்.

நாங்கள் கடந்தகாலங்களில் ஏற்பட்டதை மறந்து மன்னித்துச் செயற்படுவோம் என்று அவர் குறிப்பிட்டார். அத்துடன் நாங்களும் உங்களுடன் சேர்ந்து அரசிடம் கேட்பதற்கு தயாராக இருக்கின்றோம். ஏனைய மாகாண சபைகளை சுயமாக இயங்க விட்டவர்கள் ஏன் எங்களை மட்டும் கட்டுப்படுத்துகின்றார்கள் என்பதைக் கேட்போம்-என்றார்.

**தண்டனை வழங்கப்படுவதில்லை**

போர் முடிந்த பின்னர் வடபகுதியில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துவிட்டதாக கூறிய ஆளுங் கட்சி உறுப்பினர் இம்மானுவல் ஆனல்ட் அதற்குக் காரணம் குற்றவாளி களுக்குத் தண்டனைவழங்காமையே என்பதையும் குறிப்பிட்டார்.

மாகாண சபையின் வர்ண இரவுகள் நிகழ்வுகளுக்கு அதிகாரிகள் வராததைக் கடிந்து கொண்ட அவர், அதிகாரிகள் எங்களுடன் ஒத்துழைத்துச் செல்லவில்லை என்றால், எங்கள் கைகளுக்கு போதிய அதிகாரங்கள் வந்த பின்னர் என்ன செய்யப் போகின்றார்கள் என்ற கேள்வியை எழுப்பினார். ஆனால் அந்த அதிகாரங்கள் அவரது கைக்கு எப்போதுவரும்என்பதைச்சொல்ல அவர் மறந்து விட்டார்.

தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்ட வரலாறைச் சொல்லி எதிரணி உறுப்பினர் ஜவாஹிருக்குப் பதிலடியும் கொடுத்தார்.

இதனைத் தொடர்ந்து சிங்கள உறுப்பினர்ஜயதிலகவின்உரை நடந்தது. அதன் பின்னர் தேநீர் இடைவேளை விடப்பட்டது.

இதன் பின்னர் விவாதம் ஆரம்பமாகும் போது சபைக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா வருகை தந்து சபை அமர்வுகளை அவதானித்துக் கொண்டிருந்தார்.

**பயங்கரவாதம்**

இதன் பின்னர் உரை நிகழ்த்திய மாகாண சபை உறுப்பினர் கஜதீபன், தமிழ் மக்களின் கல்விப் பாரம்பரியத்தைப் பற்றி ஒரு போடு போட்டார். இலங்கை நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த பிரிட்டன் மகாராணி எல்லோருக்கும் கை கொர்டுத்துக் கொண்டு வருகின்றார். அப்போது ஒருவருக்கு மட்டும் தனது கையுறையை கழற்றிக் கை கொடுக்கின்றார். அப்படி கை கொடுக்கப்பட்டவர் யாருமல்ல கணித ஆசான் சுந்தரலிங்கம் தான். இப்படிப்பட்ட கல்விப் பரம்பரையைச் சார்ந்தவர்கள் தமிழர்கள் என்பதை அவர் அங்கு தெரிவித்தார்.

இதன் பின்னர், எங்கள் போராட்டம் விடுதலைப் போராட்டம். யாரும் அதனைப் பயங்கரவாதப் போராட்டம் என்று கொச்சைப்படுத்தக் கூடாது என்று உரத்த தொனி யில் அவர் தெரிவித்தார். அத்துடன் எதிரணி உறுப்பி னர் பாவித்த அந்த வார்த் தையை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டும் என்றும் கோரினார்.

இதன் போது எழுந்த மற்றொரு எதிர்க்கட்சி உறுப்பினர் ரிப்கான், அவர் அவ்வாறு ஒரு வார்த்தையைப் பயன்படுத்தவேயில்லை என்று வாதிட்டார். இதனையடுத்து அவர் அவ்வாறு அந்த வார்த்தையைப் பாவித்திருந்தால் ஹன்சாட்டிலிருந்து நீக்குவதாக அவைத் தலைவர் தெரிவித்தார்.

**ஆட்லறி ஏற்கனவே வைக்கப்பட்டுள்ளது**

மாற்றங்கள் எங்களை அடிமைப்படுத்தும் சிந்தனையோடு வருமாக இருந்தால் சிந்திக்க வேண்டும் என்று எதிரணி உறுப்பினர் ஜவாஹிருக்குப் பதிலடி கொடுத்தார் ஆளுங்கட்சி உறுப்பினர் அஸ்மின். இதன் போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மேசையில் தட்டி ஆதரவளித்தனர்.

ஏற்கனவே முல்லைத்தீவில் ஆட்லறியும், மல்ரிபரலும் வந்துவிட்டது. சிங்கள மக்களை உசுப்பேற்றுவதற்காக அவை முல்லைத்தீவில் இராணுவத்தால் வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

**உங்கள் காசுகளை மக்களுக்கு ஒதுக்குங்கள்**

வாகனங்கள் வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் ஆளுங்கட்சி விவாதம் நடத்தவில்லை என்று முழுப் பூசணிக் காயைசோற்றில் மறைக்க முற்பட்ட ஆளுங்கட்சியின் குட்டை உடைத்தார் எதிரணி உறுப்பினர் ரிப்கான். இதற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை எடுத்து, உங்களுக்கு வாக்களித்து இங்கு கொண்டு வந்து விட்ட மக்களுக்குக் கொடுப்பதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றார்.இதன்போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் முகத்தில் பேயறைந்தது போலமுழித்துக் கொண்டிருந்தனர்.

**ஏந்தக் கொம்பனாலும் ஒன்றும் செய்யமுடியாது**

இறுதியில் அவர், ஆளுநர் எந்த விதத்தில் தடங்கலாக இருக்கின்றார் என்று சொன்னால் நாங்களும் உங்களுடன் சேர்ந்து ஒத்துழைத்து கேட்கத்தயார்என்றுகுறிப்பிட்டார்.

இதன்போது எழுந்த மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், ஆளுநரின் நடவடிக்கை பற்றி முழுநாள் விவாதத்துக்கு நாங்கள்தயாராக இருக்கின்றோம் என்றார். அதற்கு தாங்களும் தயாராக இருப்பதாக ரிப்கான் பதிலளிக்க விவாதம் சூடேறியது.

கடந்த காலங்களைப் பற்றிக் கதைக்கவில்லை. தற்போதைய நிலை பற்றித்தான் கதைத்துக் கொண்டிருக்கின்றோம் என்று விவாதம் சூடாக விடாமல் பதிலளித்துக் கொண்டிருந்தார் ரிப்கான். அதற்கு, எங்களை எந்தக் கொம்பனாலும் ஒன்றும் செய்ய முடியாது என்று தக்க பதிலடி கொடுத்தார் சிவாஜிலிங்கம்.

**எஸ்.எம்.எஸ்**

இந்தச் சூடான விவாதத்தின் பின்னர்உரையாற்றிய அமைச்சர் டெனீஸ்வரன், பாடசாலைகளில் தொலைபேசிப் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட் டார். பின்வாங்கிலிருந்து முன்வாங்குக்கு மாணவர்கள் எஸ்.எம்.எஸ். அனுப்புவதாக அவர் குறிப்பிட்டார். அதுதான் தொழில்நுட்ப வளர்ச்சி என்று அங்கிருந்தவர்கள்முணுமுணுத்தனர்.

**நூதனமான பேச்சு**

இதன் பின்பு உரையாற்றினார் விரிவுரையாளரும் மாகாணசபை உறுப்பினருமான சர்வேஸ்வரன். கல்வி ஏன் சீரழிகின்றது என்பதை அவர் விலாவாரியாகச் சபையில் எடுத்துப் போட்டார். பிள்ளைகளின் வெளிநாட்டு மோகமும் எங்கள் கல்வியைச் சீரழிக்கின்றது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் தற்போது பாடசாலைகளிலுள்ள வரலாற்றுப் பாடம், ஒரு பக்கச் சார்பானதாகவும் திரித்து எழுதப்பட்டதாகவுமே உள்ளது.

இதனை மாற்றி உண்மையான வரலாறுகள் வடக்கு மாணவர்களுக்குப் படிக்க மாகாணசபை சந்தர்ப்பம் ஏற்படுத்த வேண்டும் என்றார்.

இதன் பின்னர் கல்வி அமைச்சரின் பதிலுரையுடன் விவாதம் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் குழுநிலையிலிருந்து சபைநிலைக்கு அவை மாறியது. வாக்கெடுப்பின்றி கல்வி அமைச்சின் ஒதுக்கீடு ஏகமனதாக நிறைவேறியது.

## நெல்சன் மண்டேலாவின் நினைவஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

மறைந்த கறுப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலாவின் நினைவஞ்சலிக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் 'பழி வாங்குவதற்கான நேரம் இதுவல்ல நாட்டின் எதிர்காலமே முக்கியமானது' என்ற நெல்சன் மண்டேலாவின் சிந்தனைகள் பற்றிய கருத்துரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள்சிரேஷ்ட பதிவாளர் இ.கிருஸ்ணகுமார் நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து மண்டேலாவின் இனங்களுக்கிடையில் மீள் இணக்கப்பாட்டு செயன்முறையை விபரிக்கும் 'இன்விக்ரஸ்' என்ற திரைப்படமும் திரையிடப்படவுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (கு-400)

## அம்புலன்ஸ் - மோ. சைக்கிள் விபத்தில் இளைஞர் காயம்

கிளிநொச்சி வைத்தியசாலை அம்புலன்ஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச்சம்பவம் நேற்று மாலை 4.00 மணியளவில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு அம்புலன்ஸ்சென்று கொண்டிருந்த வேளையில் எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிள் திடீரென வீதியைக் கடக்க முற்பட்ட போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.அம்புலன்ஸ் வாகனத்துக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த மகேந்திரலிங்கம் கஜன் (வயது -25) என்னும் இளைஞருக்கு காலில் காயமேற்பட்ட நிலையில் அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (கு-9)

# சுதந்திரபுரத்தில் இன்று காணி தொடர்பில் கூட்டம்

*கிராம அலுவலர் காரியாலயத்தில் நடைபெறும்*

சுதந்திரபுரத்தில் மீள் குடியமர்ந்த மக்களின் காணிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு காணி ஆணை யாளர் நாயகத்தின் சுற்றறிக்கைக்கு அமைய பகுதி நாள் கூட்டம் இன்று காலை சுதந்திரபுரம் கிராம அலுவலர் காரியாலயத்தில் இடம் பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மீளக் குடியமர்ந்த மக்களில் பெரும்பாலானோர் தமது காணிகளுக்குரிய ஆவணங்களை போரின் போது தவறவிட்டுள்ளனர்.

ஆவணங்களைத் தவறவிட்டவர்கள் தமது காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் திண்டாடுவதுடன் வழங்கப்படும்பலஅபிவிருத்திவேலைத் திட்டங்களை இழக்க வேண்டிய நிலைக்கும்தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்குத் தீர்வு காண முன்வந்துள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலர், காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைக்கு அமைய கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பகுதி நாள் கூட்டங்களை நடத்தி காணிப் பிணக்குகளுக்குத் தீர்வு கண்டு வருகிறார். இந்த வகையில் சுதந்திரபுரம் கிராம அலுவலர் காரியாலயத்தில் பிரதேசசெயலர் தலைமை யில் இன்று காலை பகுதிநாள் கூட்டம் நடைபெறும்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இடம்பெற்ற பகுதிநாள் கூட்டங்கள் மூலமாக இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான காணிப் பிணக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-115)

## அனுமதியின்றி வெட்டப்பட்ட மாட்டிறைச்சி சிக்கியது



யாழ்ப்பாணம்.டிசெ.12

யாழ்.மாநகரசபையின் அனுமதியின்றி வெட்டப்பட்ட ஒரு தொகுதி மாட்டிறைச்சி நேற்று முன்தினம் காலை சுகாதாரப் பகுதியினரிடம் சிக்கியது.

குருநகர் பிரதேச பொதுசுகாதாரப் பரிசோதகர் ஜே.ராஜா, அரியாலை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். கிஷோக் குமார் ஆகியோர் தலைமையில் சென்ற சுகாதார பகுதியினர் சின்னக் கடை பகுதியில் உள்ள மாட்டிறைச்சிக் கடையில் இருந்து அனுமதியின்றி வெட்டப்பட்ட மாட்டிறைச்சியைக் கைப்பற்றினர்.

இவ்வாறு அனுமதியின்றி சட்ட விரோதமாக மாட்டை வெட்டி அதன் இறைச்சியை விற்பனை செய்த விற்பனை நிலைய உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (வ-17)



யாழ்.போதனா மருத்துவமனை விடுதிகளில் உள்ள நோயாளர்களைப் பார்வை யிட வரும் உறவினர்களின் உயிர்களை காவுகொள்ளக் காத்திருக்கும் நுழைவாயில் மதில். (வ-21)

## இடம் மாறியது உபதபாலகம்

கொழும்புத்துறை. டிசெ.12

பாஷையூர் உப தபாலகம் இட மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகிறது.

பாஷையூர் செபஸ்தியன் வீதியில் இதுவரை செயற்பட்டு வந்த உபதபாலகம் தற்போது சென்.அன்ரனீஸ் வீதியிலிருந்து பிரிந்து செல்லும் காட்டு வளவு வீதியில் இயங்கி வருகிறது. (வ-135)

## கடன் சுமையால் மனமுடைந்தவர் உயிரை மாய்த்தார்

யாழ்ப்பாணம். டிசெ.12

கடன் சுமையால் மனமுடைந்த இளைஞன் அதிலிருந்து தப்புவதற்காக தனது உயிரை மாய்த்துக்கொண்ட பரிதாபச் சம்பவம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியைச் சேர்ந்த 29 வயதான இவர். குடும்பத்தாருக்குத் தெரியாமல் சிலரிடம் பணத்தைக் கடனாகப் பெற்றுள்ளார்.

இது தொடர்பாக குடும்பத்தார் அறிந்து குறித்த இளைஞனுடன் வாக்குவாதப்பட்டதை அடுத்து மனமுடைந்த அவர் உயிரைத் துறந்தார் என்று கூறப்படுகிறது. (வ-14)

## பொருள்கள் வாங்குவதாக நடித்து பணப்பை அபகரிப்பு

தென்மராட்சி, டிசெ.12

வியாபாரத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்த வேளையில் பொருள்கள் வாங்குவது போல் நடித்த நபரொருவர் அங்கிருந்த வியாபாரி யின் பணப் பையை அப கரித்துக் கொண்டு சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி மீன் சந்தையில் இடம்பெற்றது.

சந்தையில் சனக்கூட்டம் அதிகமாகக் காணப்பட்டதால் வியாபாரத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்த வேளையில் அங்கு வைக்கப்பட்டிருந்த பணப் பையை எடுத்துக் கொண்டு இலாவகமாக மாறியுள்ளார் அவர்.

சன நடமாட்டம் குறைந்த பின்னர் பார்த்தபோது 20 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட வியாபாரப் பணத்துடன் வைக்கப்பட்டிருந்த பணப்பை காணாமற் போனமை தெரிய வந்தது.

இந்த விடயம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## புதன்கிழமையில் கண் கிளினிக்

*சாவகச்சேரி மருத்துவமனையில்*

தென்மராட்சி, டிசெ.12

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பிரதி புதன் கிழமைதோறும் யாழ். போதனா மருத்துவமனை கண் சிகிச்சை நிபுணர் செல்வி ம.சரவணமுத்துவால் கண் சிகிச்சை கிளினிக் நடத்தப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் இதுவரை காலமும் போதனா வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவில் பயிற்சி பெற்ற மருத்துவர்களால் கண் சிகிச்சை கிளினிக் நடத்தப்பட்டு வந்தது.

இந்த நிலையில் மீள் நியமனம் பெற்ற கண் சிகிச்சை நிபுணரை வாரத்தில் நான்கு நாள்கள் சாவகச்சேரி, மந்திகை, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை ஆகிய மருத்துவமனைகளிலும் கடமையாற்றப் பணிக்கப்பட்டது. அதை அடுத்து பிரதி புதன்கிழமைகளில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கண்சிகிச்சை கிளினிக் நடத்தப்பட்டு வருவதாகவும்தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## பருத்தித்துறை நவீன சந்தையை திறந்து வைக்கிறார் முதலமைச்சர்

வடமராட்சி, டிசெ.12

பருத்தித்துறை நகரில் 545 இலட்சத்து 45 ஆயிரத்து 667 ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன சந்தையை வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நாளை வெள்ளிக்கிழமை திறந்து வைப்பார்.

அத்தோடு,பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச சபைகளின் உள்ளூராட்சி வார விழாக்களிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நாளை காலை 9 மணிக்கு கரவெட்டி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையிலும் அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு புலோலிபொதுநூல்நிலையத்தில் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர்பூ.சஞ்சீவன்தலைமையிலும்உள்ளூராட்சிவார விழாக்கள் இடம்பெற வுள்ளன.

இதேவேளை பிற்பகல் 1.40 மணிக்கு பருத்தித்துறைநகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன சந்தை மாடிக் கட்டடத் திறப்பு விழா சபைத் தலைவர் சட்டத்தரணி சபா.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும். இந்தநிகழ்வில்பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளும் முதலமைச்சர் சந்தைக் கட்டடத்தைத் திறந்து வைப்பார். (வ-8)

## வீதியில் கண்டெடுத்த கைபேசியை உரியவரிடம் கையளித்த மாணவன்

*தென்மராட்சி. டிசெ.12*

*வீதியில் கண்டெடுத்த 80 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசியை உரியவரிடம் சேர்ப்பித்தார் 9 வயதுடைய பாடசாலை மாணவன்.*

*தனியார் கல்வி நிறுவனத்துக்குச் சென்று விட்டு சாவகச்சேரி சப்பச்சி மாவடி வீதியில் நடந்து வந்த மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் தரம் - 4 வகுப்பில் கற்கும் சுரேஸ் லோரன்ஸ் என்னும் மாணவன் வீதியோரத்தில் பெறுமதியான கையடக்கத் தொலைபேசியொன்றைக் கண்டெடுத்துள்ளார்.*

*வீதியில் தெரிந்தவர்கள் ஒருவரையும் காணாததால் வீட்டுக்குச் சென்று தொலைபேசியில் உள்ள இலக்கமொன்றுடன் தொடர்பு கொண்டு தொலைபேசிக்கு உரியவரை இனங்கண்டார். அதனையடுத்து தாமோதரம்பிள்ளை வீதியில் உள்ள அவரது வீட்டுக்குக் கொண்டு சென்று கையளித்து விட்டு பிரதியுபகாரம் பெறாமல் வீடு திரும்பினார். (வ-9)*

# பொன்தீவுக் கண்டல் விவகாரம் சுமுகத் தீர்வுக்குச் சந்தர்ப்பம்

***மன்னார் ஆயர் தலையீட்டால் என்கிறார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின்***

யாழ்ப்பாணம், டிசெ.12

பொன்தீவுக் கண்டல் பகுதியில் இடம்பெற்று வரும் இஸ்லாமிய, கிறிஸ்தவ சமூகங்களுக்கு இடையேயான பிரச்சினையை மன்னார் ஆயர் ஜோசப் இராயப்பு முன்னின்று கையாள முன்வந்திருப்பதால் இரு சமூகங்களும் சுமுகமாக ஏற்றுக் கொள்ளக் கூடியதான ஒரு முடிவு விரைவில் கிட்டும் என்று வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அய்யுப் தெரிவித்தார்.

குறித்த பிரதேசத்தின் காணிப் பிரச்சினை தொடர்பில் கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்:-

மன்னார் மாவட்ட நானாட்டான் பொன்தீவுக் கண்டல், பூவரசம் குளம் மக்களுக்கு காணியை பகிர்ந்தளிப்பது தொடர்பில்பல்வேறுபிரச்சினைகள் நிலவி வருகின்றன. அவற்றைத் தீர்க்கும் முகமாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் களும், வட மாகாண சபை உறுப்பினர்களும் பல சுற்றுப் பேச்சுகளை நடத்தினர். அதன் படி இரு சமூகங்களுக்கும் இடை யிலும் காணி சமமாக பங்கிடப் பட வேண்டும் என்றும், இரு சமூகங்களின் நல் லிணக்கம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அதை ஒரு சில கிறிஸ்தவர்கள் எதிர்த்தனர்.

இது விடயம் தொடர்பில் திங்கட்கிழமை நானாட்டன் பிரதேச செயலகத்தில் பேச்சு ஏற்பாடுசெய்யப்பட்டதை அறிந்த மக்கள் அந்த இடத்துக்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் பிரதேச செயலக உடைமைகளுக்கும் சேதம் ஏற்படுத்தியுள்ளனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்த மன்னார் ஆயர் ஜோசப் இராயப்புவை அந்த இடத்துக்கு அழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அரசு காணி விடயம் தொடர்பில் எடுத்த தீர்மானத்தை மாற்ற முடியாது என்ற வகையில் குறிப்பிட்ட அதிகாரங்களுடன் கூடிய உயர் குழுவொன்றை உருவாக்கி கிறிஸ்தவ மக்களின் ஆர்ப்பாட்டத்துக்கான காரணத்தை கண்டறிவதோடு எதிர் காலத்தில் இது தொடர்பில் ஏற்படவுள்ள பிரச்சினைகளையும் கண்டறிய வேண்டும். இந்தக் குழுவில் மன்னார் மாவட்ட அரச அதிபர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், இரு சமூகப் பிரதிநிதிகள் உட்பட தானும் இருப்பேன்-என்றார் அவர். (வ-10)

# கைத்தொழிலாளரை ஊக்குவிக்க மக்கள் வங்கி உதவி வழங்கும்

## வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நிலைய முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.12
உள்நாட்டு மூலதனத்தைப் பயன்படுத்தி பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பங்காளிகளாக இருக்கும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களது தொழில் முயற்சியை வலுப்படுத்துவதற்கு தேவையான நிதி உதவியை மக்கள் வங்கி வழங்க முன்வந்துள்ளது என்று மக்கள் வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நிலையத்தின் முகாமையாளர் என்.தனேஸ் தெரிவித்தார்.
மக்கள் வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நிலையத் திறப்பு விழா கடந்த 9 ஆம் திகதி பிராந்தியக் கிளையில் இடம்பெற்றது.
இந்தநிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களது பங்களிப்பு அதிகமாகவுள்ளது. அத்துடன் பிரதேச மட்டத்தில் வேலை வாய்ப்புக்கும் இந்தத்துறை கைகொடுக்கிறது. எனினும் தொழில் துறை சார்ந்த அபிவிருத்தியைக் காண்பதற்கு நிதி தடையாக உள்ளது. இத்தகைய குறைபாட்டை இனங்கண்டு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் மக்கள் வங்கி சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிலைய 11 ஆவது கிளையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளது. இக்கிளை மூலம் தொழில் முயற்சியாளர்களுக்கு உரிய கடன் உதவிகளை தேவைக்கு ஏற்ப வழங்கக் கூடியதாக இருக்கும்- என்றார். (வ-14)

# கலாசார விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வவுனியா மாவட்டத்தில் கலாசார விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதனை வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தம் ஏற்பாடு செய்திருந்தார்.
வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்டத்திலுள்ள பல கிராமங்களைச் சேர்ந்த கிராமிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.
வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தம், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, உளநல மருத்துவர் எஸ்.சுதாகரன் உள்ளிட்ட பலர் இங்கு விரிவுரைகளை நடத்தினர். (க-402)

# இந்து ஆலய அழிப்பைத் தடுக்க கட்சி பேதமின்றி குரல் கொடுக்குக

## அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.12
தமிழ் மக்களது வழிபாட்டுத் தலங்கள் மீது அரச ஆதரவுடன் தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் இராணுவத்தால் நிகழ்த்தப்படும் அநியாயங்களைத் தடுத்து நிறுத்த சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி வேறுபாடின்றி குரல்கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.
அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள இந்து ஆலயங்களில் பூசை வழிபாடுகள் நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அதற்கான தகுந்த பதில் கிடைக்கவில்லை. எனினும் ஆலயங்களில் பூசை வழிபாடுகள் நடத்தாமல் விடும் பட்சத்தில் ஏற்படக் கூடிய விளைவுகள் தொடர்பாக இந்து சமய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
இந்த நிலையில் விடுவிக்கப் படாத, பூசைகள் நடைபெறாத ஆலயங்கள் தொடர்பான விவரங்களை அகில இலங்கை இந்து மாமன்றம் பொது மக்களிடம் இருந்து பகிரங்கமாகக் கோரிய போதும் இராணுவத்தினரின் அச்சம் காரணமாக தகவல்களைப் பொது மக்கள் வழங்கவில்லை.
இந்த நிலையில் அண்மையில் வலி.வடக்கில் 3 இந்து ஆலயங்கள் இடித்து அழிக்கப்பட்டன. இது தொடர்பாக பார்வையிடச் சென்ற வடமாகாண முதலமைச்சருக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.
எனவே தொடர்ந்தும் இத்தகைய அழிப்புச் செயற்பாடுகளை அரச ஆதரவுடன் இராணுவத்தினர் மேற்கொள்வதால் இந்து மக்கள் மத்தியில் விரக்தி நிலையை எதிர்கொள்ள நேரிடலாம். இத்தகைய செயலுக்கு இடமளிக்காது சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி வேறுபாடின்றி ஒன்றிணைந்து ஆலயங்களை பாதுகாத்து பூசை வழிபாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றுள்ளது. (வ-14)

# பிரதேச செயலகம் மீது தாக்குதல்

## 18 பேருக்கு விளக்கமறியலில்

மன்னார் நானாட்டான் பிரதேசச் செயலகம் மீது கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் பொன்தீவுக் கண்டலைச் சேர்ந்த 65 பேர் கைதுசெய்யப்பட்டு அவர்களில் 18 பேரை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட பதில் நீதிவான் இ.கயஸ் பல்டானோ நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார்.
நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட பொன்தீவு கண்டல் காணி விவகாரம் தொடர்பில் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை நானாட்டான் பிரதேச செயலகம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர். சம்பவம் தொடர்பில் பிரதேச செயலகத்தினர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். இந்த நிலையில் பொலிஸார் பொன்தீவுக் கண்டலைச் சேர்ந்த 65 பேரை பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டு அவர்களைக் கைதுசெய்தனர். இவர்கள் அனைவரும் நேற்று மன்னார் நீதிமன்றில் உட்படுத்தப்பட்டனர்.
இதன் போது விசாரனைகளை மேற்கொண்ட பதில் நீதிவான் குறித்த 65 பேரில் 18 பேரை எதிர் வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு ஏனைய 47 பேரையும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார்.
அத்துடன் குறித்த 47 பேரையும் மீண்டும் எதிர் வரும் 18 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் முற்படுமாறு உத்தரவிட்டார்.
எனினும், நீதிமன்ற செயற்பாடுகள் தாமதமாக முடிவடைந்தமையினால் அவர்களை உறவினர்கள் பிணையில் அழைத்துச் செல்ல முடியாதநிலையில் அவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
தற்போது குறித்த 65 பேரும் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஜ-12)

# கொங்கிறீற் பாதை சேதம் பயணிகள் சிரமங்கள்

முல்லைத்தீவு.டிசெ.12
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள குறுகிய உள்ளூர்ப் பாதைகளுக்கு இடப்பட்ட கொங்கிறீற் சேதமடைந்து காணப்படுவதால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சிவமோகனிடம் தெரிவித் துள்ளனர்.
மழை வெள்ளம் காரணமாக பாதைகளில் இடப்பட்ட கொங்கிறீற் இடிந்தும், இறங்கியும் காணப்படுவதாகவும் தெரிய வருகின்றது.
மேலும் இந்தப் பாதைகளில் ஓரமாகக் குவிக்கப்பட்டுள்ள கிரவல் மண் பரவப்படாத நிலையில் உள்ளதாலும் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.
கொங்கிறீற் இடும் பணிகள் தரமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டதால் இந்த நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-500)

# அடிப்படை வசதிகள் கிட்டாத குடும்பங்கள்

முல்லைத்தீவு,டிசெ.12
முல்லைத்தீவு உப்புமாவெளி கிராம அலுவலர் பிரிவில் வசிக் கும் 17 முஸ்லிம் குடும்பங்கள் தமக்கு அடிப்படை வசதிகள் எவையும் வழங்கப்படவில்லையெனத் தெரிவித்துள்ளனர்.
இவர்கள் வசிக்கும் பகுதி கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குள் அமைந்துள்ளது.
ஆனால் தமக்குத் தற்காலிக வீடுகள் கூடக் கிடைக்காத நிலையில் தாம் வாழ்ந்து வருவதாகவும் இவர்கள் தெரிவித்துள் ளனர்.
17 குடும்பங்களைச் சேர்ந்த 100 பேர் 2010 ஆம் ஆண்டில் இங்கு மீளக் குடிய மர்ந்ததாகவும் ஆனால் தமக்குரிய அடிப்படை வசதிகள் எவையும் இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லையெனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். (க-500)

# பொதுக் கிணறுகளுக்கு குளோரின் இடும் பணி

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பொதுக் கிணறுகளுக்கு குளோரின் இடும் பணி இடம்பெற்று வருகிறது.
அண்மையில் மழை பெய்ததை அடுத்து குடிதண்ணீரால் தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்காக சபையின் சுகாதாரக் குழுத் தலைவர் த.சுதர்சனின் ஏற்பாட்டில் குளோரின் கொள்வனவு செய்யப்பட்டு பொதுக் கிணறுகளுக்கு இடும் பணிகள் இடம் பெறுகின்றன.
இதேவேளை, சபை எல்லைக்குட்பட்ட அனைத்து குடியிருப்புகளில் உள்ள கிணறுகளுக்கும் குளோரின் போடுவதற்கு வசதியாக சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் அலுவலகத்தில் குளோரின் விநியோகிக்கப்பட்டு வருகிறது.
எனவே குடியிருப்பாளர்கள் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (வ-9)

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

# வரவு- செலவு திட்டம் பற்றி விளக்க மாநாடு

அடுத்த ஆண்டுக்கான அரசின் வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் மாநாடு எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு வவுனியா நகர சபையின் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இதில் நிதியமைச்சின் செயலாளர் டி.பி.ஜெயசுந்தர, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் டி.பி.அபயகோன் மற்றும் 25 மாவட்டங்களின் அரச அதிபர்கள், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், அநுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட் டங்களைச் சேர்ந்த பிரதேச செயலர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் உட்பட 700 அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (க-402)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### பொன்னையா சுப்பிரமணியம் (பெரிய பாலு)

(ஓய்வுபெற்ற ஓவசியர், யாழ். மாநகர சபை )



நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த பொன்னையா சுப்பிரமணியம் (பெரிய பாலு) நேற்று (11.12. 2013) புதன் கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற பொன்னையா (பத்தர்) அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலகிருஸ்ணனின் (சின்னப்பாலு) அன்பு அண்ணனும், கிருபாஹரி காலஞ்சென்ற கருணாஹரி மற்றும் கல்யாணி, காலஞ் சென்ற ராஜிதா மற்றும் தர்மேந்திரா, பிரியசாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயகுமார், புஸ்பராசா, அருள்ராசா, கவிதா ஆகியோரின் அன்பு மாமனும், ஜனனி, ரேனுஷா, சாயினி, பபிசா, கிசோனியா, தேனுகன், அபிநாத், அருஷ்னி, ஜனமிகா, பியந்தன், சஸ்வினா, சஹானா ஆகியோரின் அன்புப் பேரனும் அவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2013) வியாழக் கிழமை பி.ப. 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1032, K.K.S. ROAD, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம், தொலைபேசி:- 077 9216463, 077 3643286

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி சறோஜினிதேவி தம்பிராசா

தொட்டிலடி சண்டிலிப்பாயைப் பிறப்பிட மாகவும் கறாச்சடி சண்டிலிப்பாயை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி (தேவி) தம்பிராசா கடந்த (09.12. 2013) திங் கட்கிழமை காலமாகி விட்டார்.
அன்னார் அண்ணாமலை -சீதை தம்பதி யரின் அன்பு மகளும், வேலன் -இலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், தம்பிராசா வின் அன்பு மனைவியும், சத்தியசீலன் (லண் டன்), சத்தியரூபன் (லண்டன்), சுவிதரன் (லண்டன்), அஜிந்தா (லண்டன்), லெனி கரன் (லண்டன்), சசிதா (கனடா), சுஜீவன் (ஆஸ்தி ரேலியா), தினோஜா ஆகியோரின் அன்புத் தாயும், அருந்ததி (லண்டன்), சுஜிவினி (லண்டன்), ஜெயரூபி (லண்டன்), லிங்ககுமார் (லண்டன்), நகுலேஸ்வரன் (கனடா), தர்சினி (பிரான்ஸ்), ரமேஸ்கரன் ஆகி யோரின் மாமியும், கிதுர்ஸ் (லண்டன்), கிதுசினி (லண்டன்), அபிஸ்(லண்டன்), ஆருசா (லண்டன்), கரிஸ்(லண்டன்), அபிரா (லண்டன்), ஐவிதா (லண்டன்), ஆருசன் (லண்டன்), கனிஸ்கா (கனடா), ஆத்மிகன்(கனடா) , கைங்னி (லண்டன்), ஆத்மிகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நடராசா, சிவகுருநாதன், இந்திரா, சந்திரா, சாரதாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2013) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவ ரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக மானிப்பாய் இந்து மாயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

# விவசாயக் கடன் வழங்க இலங்கை வங்கி தயார்

*இலங்கை வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்,டிசெ.12
குடாநாட்டின் மிகப்பெரும் பொருளாதாரமான விவசாயத் துறையை மேம்படுத்தும் நோக்கில் விவசாயிகளுக்கான கடன்களை வழங்க இலங்கை வங்கி தயாராகஉள்ளதுஎன்று இலங்கை வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் எஸ்.மாணிக்க சிங்கி தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதற்கு விவசாயிகள் திண்டாடிவரும் நிலையில், வழங்கிய கடன்களை மீளப்பெறுவதற்கு வங்கிகள் பல முரண்பட்டு வருகின்றபோதும், ஒவ்வொரு வங்கிகளும் தமது கொள்கைகளின் அடிப்படையில் கடன்களை வழங்கி வருகின்றன.
இலங்கை வங்கியிடம் கடன் பெற்ற விவசாயிகள் தமது கடன் நிலுவைகளை மீளச் செலுத்தாத நிலையில் இருந்தாலும், புதிய கடனுக்காக விண்ணப்பிக்கும் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதை வங்கி நிறுத்தவில்லை.
கடன் தேவைப்படும் விவசாயிகள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துக் கடனைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்தார். (வ-14)

# கோழி இறைச்சி கடை

*எழுதுமட்டுவாழில்*

தென்மராட்சி,டிசெ.12
சாவகச்சேரி பிரதேச சபையினால் எழுதுமட்டுவாழ் சந்தைப் பகுதியில் முதன்முறையாக கோழி இறைச்சி விற்பனைநிலையமொன்று அமைக்கப்படவுள்ளது.
பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை விடுத்த வேண்டுகோளை அடுத்து சபை நிதியிலிருந்து தற்காலிகமாக கோழி இறைச்சி விற்பனை நிலையமொன்றை அமைக்க 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
பளையிலிருந்து கொடிகாமம் வரையிலான 10 கிலோ மீற்றர் தூரத்துக்கு கோழி இறைச்சிக் கடைகள் எதுவும் இல்லாததால், எழுதுமட்டுவாழ் சந்தியில் கோழி இறைச்சி விற்பனை நிலையமொன்றை அமைக்குமாறு முகமாலை, கிளாலி, எழுதுமட்டுவாழ் தெற்கு, வடக்கு, கரம்பகம், ஒட்டுவெளி ஆகிய பிரிவுகளின் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.
அதனை பிரதேச சபை உறுப்பினர், பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் பிரேரணையாகமுன்மொழிந்தார். அதனை ஏற்ற சபையினர் 50 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# ஒலிபெருக்கிப் பாவனையை குறைத்த ஆலய நிர்வாகம்

*மாணவர்களின் நலன் கருதி*

தென்மராட்சி, டிசெ.12
சாவகச்சேரி நகரசபை விடுத்த வேண்டுகோளை ஏற்று ஒலிபெருக்கிப் பாவனை யைக் கட்டுப்படுத்தி முன் மாதிரியாகச் செயற்பட்டுள்ளது. சாவகச்சேரி வடக்கு இருவம் பிள்ளையார் ஆலய நிர்வாகம்.
ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி இந்து ஆலயங்களில் நடை பெறும் திருவெம்பாவை விழாக் காலத்தில் ஒலிபெருக்கிப் பாவனையை மட்டுப்படுத்துமாறு ஆலயங்களுக்கு அறிவிப்பதென நகரசபையால் கடந்த கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டு அனைத்து இந்து ஆலயங்களுக்கும் அது குறித்து அறிவிக்கப்பட்டது.
நகரசபையின் அறிவித்தலையடுத்து ஆலய பரிபாலனசபையினர் உயரத்தில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கியைக் கழற்றி ஆலய மண்டபத்தினுள் பொருத்தியதுடன் அதன் ஒலியை யும் குறைத்துப் பயன்படுத்தி வருகின்றனர்.

"_"
ஒலிபெருக்கிப் பாவனையை மட்டுப்படுத்துமாறு ஆலயங்களுக்கு அறிவிப்பதென நகர சபையால் கடந்த கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டு அனைத்து இந்து ஆலயங்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்திற் கொண்டு முன் மாதிரியாகச் செயற்பட்ட ஆலய நிர்வாகனத்தினருக்கு நகர சபையினர் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர். (வ-9)



# வடக்கு பிரதி பொலிஸ்மா அதிபர் பதவியேற்பு

யாழ்ப்பாணம், டிசெ.12
வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர நேற்று உத்தியோகபூர்வமாக தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
யாழ்.பொது நூலகத்துக்கு முன்பாக அணி வகுப்பு மரியாதை நிகழ்வு இடம்பெற்றதைத் தொடர்ந்து அவர் தனது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
வடமாகாணத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிய காமினி டி சில்வா சேவையில் இருந்து ஓய்வு பெற்றதை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றி வந்த பூஜித ஜயசுந்தர வடமாகாண பிரதிப் பொலிஸ் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது. (வ-14)

# கனடாவில் வேலைவாய்ப்பு; மோசடி செய்தார் குருக்கள்

*குற்றத்தடுப்பு பொலிஸில் முறைப்பாடு*

யாழ்ப்பாணம்,டிசெ.12
கனடாவுக்கு அனுப்பி வேலை பெற்று தருவதாகக்கூறி 10 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாவைப் பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் குருக்கள் ஒருவருக்கு எதிராக விசேட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
அந்தக் குருக்கள் இதேபோன்று மற்றொரு வழக்கில் மோசடி செய்த பணத்தை உரியவரிடம் திருப்பிக்கொடுக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டதன் பேரில் அந்தப் பணத்தை உரியவரிடம் திருப்பிக் கொடுத்திருந்த நிலையில் அந்தக் குருக்களுக்கு எதிராகக் கடந்த 4ஆம் திகதி மற்றொரு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கனடாவுக்கு அனுப்புவதாகக்கூறி 2011ஆம் ஆண்டு குறித்த நபர் பணத்தைப் பெற்றிருந்தார்.
இன்று வரை கனடாவுக்கு அனுப் பவுமில்லை. உரியவரிடம் பணத்தை மீள ஒப்படைக்கவும் இல்லை. பொலிகண்டியைச் சேர்ந்த இந்தக் குருக்களுக்கு எதிராகவே இவ்வாறு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (வ-4)

# பேரீச்சை மரங்களைப் பாதுகாப்போம்

*வடமராட்சி மக்கள் வேண்டுகோள்*

பருத்தித்துறை, டிசெ.12
வடமராட்சி முள்ளிவெளிப் பகுதியில் உள்ள பேரீச்சை மரங்களைப் பாதுகாக்குமாறு வடமராட்சி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
வல்லிபுரக் கோயிலிருந்து கொடிகாமம் செல்லும் முள்ளிவெளிப்பகுதியில் அதிகளவான பேரீச்சை மரங்கள் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றன.
அதன் அருமை பெருமை தெரியாத சிலர் ஆலயங்களில்நடைபெறும் திருவிழாக் காலங்களில் அந்த மரங்களைத் அடியோடு புரட்டி எடுத்துச் சென்று ஆலயத்தை அலங்கரிக்கின்றனர்.
ஆனால் பேரீச்சை மரத்தை தென்பகுதி மக்கள் வீதியோரங்களில்கூட நட்டுப்பயனடைகின்றனர்.
வெளிநாடுகளிலிருந்து வரும் பருவகால பறவைகளினாலேயே இப்பேரீச்சை மரங்கள் உருவாகியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.
எனவே பிரதேச சபையினரும், வன பாலன அதிகாரிகளும் இவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-42)

# கழிவுகளை அகற்ற கடனுக்கு வாகனம்



தென்மராட்சி,டிசெ.12
உள்ளூராட்சிச் சபைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் குப்பைகள் அகற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டத்தை மேம்படுத்தும் முகமாக கடன் அடிப்படையில் அவை "டிமோ பட்டா" வாகனங்களை கொள்வனவு செய்ய வசதி மேற்கொள்ளப்பட்டுள்ளன.
உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு உள்ளூர் மற்றும் கடன் அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக டிமோபட்டா வாகனங்களைக் கொள்வனவு செய்ய கடன் வழங்கப்படவுள்ளது.
உள்ளூராட்சி மன்றங்களின் குப்பை கூளங்களை அகற்றும் முகாமைத்துவத்தை மேலும் மேம்படுத்தும் நோக்கில் பிரதேசத்தில் சேரும் மீள் சுழற்சி பொருள்களை சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கு வாகனங்கள் கொள்வனவு செய்ய முடியும்.
வாகனத்தைக் கொள்வனவு செய்ய விரும்பும் உள்ளூராட்சி சபைகள் தத்தமது பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஊடாக விண்ணப்பிக்குமாறு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் மேலதிக செயலாளர்பீ.ஸ்ரீ.எம்.பீ.விக்கிரம சிங்க அறிவித்துள்ளார். (வ-9)

# விடுமுறை தினங்களில் கடைகளை திறக்க அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ.12
நத்தார் மற்றும் புதுவருடப் பிறப்பு தினங்களை முன்னிட்டு எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஜனவரி முதலாம் திகதி புதன் கிழமை வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபாரம் செய்வதற்கு யாழ்.வணிகர்கழகம் வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.
எனினும் விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டுமென்றும் யாழ். வணிகர்கழகம் கேட்டுள்ளது. (ஒ)

# செல்வாக்கைப் பயன்படுத்தி நியமனம்: தபால் தரம் பிரிப்பாளர் இடமாற்றம்

## மனித உரிமை ஆணைக்குழுவால் கிடைத்தது நீதி

யாழ்ப்பாணம், டிசெ.12
பணி வெற்றிடம் இல்லாமல் அதிகாரிகளது செல்வாக்கைப் பயன்படுத்தி தபால் தரம் பிரிப்பாளராக நியமிக்கப்பட்ட நபரொருவர் மீளவும் தென்னிலங்கைப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
கொடிகாமம் தபாலகத்தில் தபால் தரப் பிரிப்பாளர் பதவிக்கு தனியான ஒரு வெற்றிடம் இருக்கவில்லை. ஏற்கெனவே கடமையில் 6 தபால் பணியாளர்கள் உள்ள நிலையில் தென்னிலங்கைப் பகுதியில் கடமையாற்றிய நபர் ஒருவர் தபால் திணைக்களத்தில் உள்ள அதிகாரிகளது ஆதரவுடன் கொடிகாமம் தபாலகத்துக்கு தபால் தரம் பிரிப்பாளராக நியமிக்கப்பட்டார். எனினும் கொடிகாமம் தபாலகத்தில் ஏற்கெனவே மூப்பின் அடிப்படையில் உத் தியோகத்தர்கள் கடமையில் இருக்கும் போது நியமனக் கொள்கைகளுக்கு மாறாக உத்தியோகத்தர் புதிதாக நியமிக்கப்பட்டமை தொடர்பாக கொடிகாமம் தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.
இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு உரிய அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொண்டதை அடுத்து நியமனக் கொள்கை மீறப்பட்டதால் தபால் தரப் பிரிப்பாளராக நியமிக்கப்பட்ட குறிப்பிட்டநபர் மீண்டும் தென்னிலங்கைப் பகுதிக்கு இடமாற்றப்பட்டுள்ளார். 6 மாத காலமாக அதிகாரிகளது செல் வாக்குடன் குறித்த நபர் கடமையில் இருந்துள்ளார். தற்போது கொடிகாமம் தபாலகத்தில் அவ்வாறானதொரு பணி வெற்றிடம் இல்லை.

"_"
புதிதாக நியமிக்கப்பட்டமை தொடர்பாக கொடிகாமம் தபால் திணைக்கள உத்தி யோகத்தர்கள் மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பாக கொடிகாமம் தபால் அதிபர் றஜிகரனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,
கொடிகாமம் தபாலகத்தில் தபால் பிரிப்பாளர்களுக்கான பணிவெற்றிடம் இருக்கவில்லை. எனினும் தேவையற்ற விதத்தில் நியமனம் வழங்கப்பட்டது. இந்தப் பணியில் இருந்தவர் மீளவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். உரிய அதிகாரிகளுக்கு குறித்த பதவிக்கு ஆளணி தேவையில்லை என்று தொலைபேசி வாயிலாகத் தகவல் வழங்கியுள்ளோம் என்று தெரிவித்தார். (வ-14)

# இனப் படுகொலையாளர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது

## *ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவிப்பு*

சென்னை, டிசெ.12

தமிழினப் படுகொலையை நடத்தியவர்கள் ஒருபோதும் தப்பித்துக் கொள்ள முடியாது. ஜேர்மனியின் மக்கள் தீர்ப்பாயம் வெளியிட்டுள்ள தீர்ப்பு அதனையே சுட்டிக்காட்டுகின்றது என்று தெரிவித்துள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

ஜேர்மனியில் கூடிய மக்கள் தீர்ப்பாயம் தமிழர்கள் மீது இலங்கை அரசு நடத்தியது இனப் படுகொலையே என்று அறிவித்துள்ளது. அதுகுறித் துக் கருத்து வெளியிடும் போதே வைகோ இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:



"இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது நடத்திய போர் நடவடிக்கைகள் குறித்து மக்களுக்கான நிரந்தரத் தீர்ப்பாயம் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அயர்லாந்தில் முதற்தடவையாக ஆய்வுகளை மேற்கொண்டது. அந்த அமர்வில் தமிழர்களுக்கு எதிரான இனப்படு கொலைக் குற்றச்சாட்டு அடுத்த அமர்வில் விசாரணைக்கு உட்படுத்தப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

அதனடிப்படையில் இம்மாதம் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மக்கள் நிரந்தரத் தீர்ப்பாயத்தின் இரண்டாவது அமர்வு விசாரணைகளில் இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்டது இனப்படுகொலையே என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது ரணமாகியுள்ள தமிழ் மக்களுக்கு மருந்து போடுவது போன்று அமைந்துள்ளது. தீர்வு அறிவிக்கப்பட்டுள்ள நாள் ஐ.நா. உலக மனித உரிமை நாளான டிசெம்பர் 10ஆம் திகதி. துன்ப இருளில் தவித்திருக்கும் தமிழர்களுக்கு இனி மேல் விடிவு கிடைக்கும் என்பதற்கான முதல் அறிகுறி இது" என்று தெரிவித்துள்ளார் வைகோ. (ற)

# ஓரினச் சேர்க்கை குற்றமே

புதுடில்லி, டிசெ.12

இந்தியாவில் ஓரினச் சேர்க்கை குற்றமே என்று அதிரடியாகத் தீர்ப்பு அளித்துள்ளது உயர்நீதிமன்றம்.

ஓரினச் சேர்க்கை சட்ட விரோதம் அல்ல என்று 2009ஆம் ஆண்டு புதுடில்லி உயர் நீதிமன்றம் அளித்திருந்த தீர்ப்புக்கு எதிராக பா.ஜ.க. செய்திருந்த மேன் முறையீடு தொடர்பான வழக்கிலேயே இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

"இந்திய தண்டனைச் சட்டம் 377ஆவது பிரிவு அரசியல் சாசனத்திற்கு எதிரானது. ஓரினச் சேர்க்கை குற்றமல்ல என்று புதுடில்லி உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு செல்லாது. மத்திய அரசு சட்டப்புத்தகத்தில் இருந்து 377ஆவது சட்டப் பிரிவை நீக்கலாம்" என்றும் உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது. (ற)

# 'மங்கள்யானின்' வேகத்தை குறைத்தனர் விஞ்ஞானிகள்

ஸ்ரீஹரிகோட்டா, டிசெ.12

செவ்வாய்க் கிரகத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ள மங்கள்யான் விண்கலத்தின் வேகத்தை இஸ்ரோ விஞ்ஞானிகள் சீரமைத்துள்ளனர்.

இந்திய நேரப்படி நேற்று அதிகாலை 6.30 மணிக்கு இந்த சீரமைப்பை அவர்கள் வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர். புவி மண்டலத்தை கடந்து சூரிய மண்டலத்துக்குள் பயணம் மேற்கொண்டுள்ள மங்கள்யான் தற்போது 29 லட்சம் கி.மீ. தொலைவில் உள் ளது.

மங்கள்யான் எதிர்வரும் செப்ரெம்பர் 24ஆம் திகதி செவ்வாய்க் கிரகத்தை சென்றடையும். (ற)

# காங்கிரஸ் தோல்விக்கு ராகுல் காரணமல்ல

## *திக் விஜய்சிங் கூறுகின்றார்*

புதுடில்லி, டிசெ.12

நடைபெற்று முடிந்த சட்ட சபைத் தேர்தல்களில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்திருப்பதற்கு ராகுல் காந்தியைக் குறை கூற முடியாது என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் திக் விஜய் சிங்.

புதுடில்லி, சத்தீஸ்கர், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநில சட்ட சபை தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்துள்ளது.

காங்கிரஸ் கட்சியின் தோல்விக்கு பல காரணங்கள் கூறப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள திக் விஜய்சிங், "காங்கிரஸ் கட்சி யின் மோசமான தோல்விக்கு ராகுல் காந்தியைக் குறை கூற முடியாது. மத்திய காங்கிரஸ் அரசின் செயற்பாடுகளில் குறைபாடு இருக்கலாம். ஆனால் ராகுல் இந்தத் தோல்விகளுக்குப் பொறுப்பாக மாட்டார்." என்று கூறியுள்ளார். (ற)

# அரசு அமைக்கும் பொறுப்பை தட்டிக் கழிக்கிறது ஆம் ஆத்மி

## *பா.ஜ.க., காங்கிரஸ் கட்சிகள் குற்றச்சாட்டு*

புதுடில்லி, டிசெ.12

புதுடில்லியில் அரசு அமைப்பதில் தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் வகையில் ஆம் ஆத்மி கட்சி செயற்படுகிறது என்று குற்றஞ்சாட்டியுள்ளன பாரதீய ஜனதா மற்றும் காங் கிரஸ் கட்சிகள்.

புதுடில்லியில் நடைபெற்ற சட்ட சபைத் தேர்தலுக்கான முடிவுகள் கடந்த 8ஆம் திகதி அறிவிக்கப்பட்டன. அதில் அந்த மாநிலத்தை ஆட்சி செய்து வந்த காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்தது.

அந்தக் கட்சியை 3ஆவது இடத்திற்கு தள்ளி விட்டு பாரதிய ஜனதா அதிக இடங்களையும், தேர்தலில் போட்டியிட்ட அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சி 2ஆவது இடத்தையும் பெற் றுக் கொண்டன. எனினும் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மைப் பலம் கிடைக்கவில்லை.

இந்தநிலையில் அரசு அமைப்பதில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து பாரதிய ஜனதா மற்றும் காங்கிரஸ் கட்சி கள் ஆம் ஆத்மி கட்சியை குற் றஞ்சாட்டியுள்ளன. ஏனைய கட்சிகளுடன் கூட்டணி வைக்காமல் பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் செயலில் ஆம் ஆத்மி கட்சி செயற்படுகிறது என்றும் அவை கூறியுள்ளன. (ற)


# சச்சினை முந்தினார் மோடி

புதுடில்லி, டிசெ.12

பேஸ்புக்கில் அதிகம் பேசப்படுபவராக குஜராத் முதல்வர் நரேந்திர மோடி மாறியுள்ளார்.

சிறியவர்கள் முதல் பெரியவர் கள் வரை தங்களுக்கு தோன்றுவதை எல்லாம் பேஸ்புக்கில் தெரிவித்து விடுகின்றனர்.

அதன்படி பேஸ்புக்கில் குஜராத் முதல்வரும், பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளருமான நரேந்திர மோடியை பற்றித்தான் மக்கள் அதிகம் பேசியுள்ளனர்.



மோடியை அடுத்து கிரிக்கெட்டில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற சச்சின் டெண்டுல்கரைப் பற்றி மக்கள் பேசியுள்ளனர்.

சச்சினை அடுத்து ஐபோன் 5 எஸ், செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட மங்கள் யான் விண்கலம் பற்றி மக்கள் பேஸ்புக்கில் அதிக அளவில் பேசியுள்ளனர். (ற)


## மாதர் அபிவிருத்தி சங்கங்களுக்கு ஓர் வருமான வாய்ப்பு

நல்லதொரு குடும்பம்

★ உங்கள் சங்க எல்லைக்குட்பட்ட குடும்பங்களின் தாய்மாரினதும் பிள்ளைகளினதும் அறிவையும், ஆற்றலையும் மேம்படுத்தி '' நல்லதோர் குடும்பம்'' என்ற இலக்கை நோக்கி உங்கள் கிராமத்தை நகர்த்த ஒரு வாய்ப்பு.

★ ஒவ்வொரு மாதர் சங்கமும் 2000/= க்கு மேல் மாதாந்தம் வருமானம் பெறும் வாய்ப்பு.

★ மாதர் சங்கத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளையும், எழுத்தாற்றல் உள்ளவர்களின் ஆக்கங்களையும் தேசிய சஞ்சிகை ஒன்றில் பிரசுரம் செய்து உங்கள் சங்கத்தை முன்னேற்றும் வாய்ப்பு.

★ உங்கள் சங்க எல்லைக்குட்பட்ட எழுத்தாற்றல் உள்ளவர்கள் தமது அறிவையும் வளர்த்து மாதம் 15000/=க்கு மேல் பரிசு பெறக்கூடிய 6 வகையான போட்டிகளில் பங்கு பற்ற ஓர் அரிய வாய்ப்பு. அதேபோல் வருடாந்தம் 100000/= க்கு மேல் அதிர்ஷ்ட அடிப்படையில் பரிசு பெறக் கூடிய வாய்ப்பு.

★ உங்கள் அங்கத்துவத்துடன் இணைந்துள்ள பாலர் பாடசாலை பிள்ளைகள், தரம் 1 பிள்ளைகளுக்குரிய பாலர் கல்வி பயிற்சிகளை திறம் பட வழங்கக் கூடிய வாய்ப்பு.

மேற்படி வசதிகளை பெற்று உங்கள் கிராமத்தை' நல்லதோர் குடும்பம்' என்ற இலக்கை நோக்கி நகர்த்த விரும்பும் மாதர் சங்க தலைவர்/ செயலாளர்/ பொருளாளர் கீழ் வரும் விவரங்களுடன் நேரில் வரவும்.

1. மாதர் சங்கத்தின் பெயர்: ..........
முகவரி: ..........

2. மாதர் சங்கத்தின் தலைவி /செயலாளர்/பொருளாளர் பெயர்: ..........
தொலைபேசி இலக்கம்: ..........

3. மாதர் சங்கம் சனசமூக நிலையத்திற்கு உட்பட்டதாயின் அந்த சன சமூக நிலையத்தின் பெயர்: ..........

4. சன சமூக நிலையத்தின் தலைவர்/ செயலாளர் பெயர் விவரம் :
தலைவர்: .......... தொ. இ: ..........
செயலாளர் :.......... தொ. இ : ..........

5. மாதர்சங்கத்தில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை : ..........

6. மாதர் சங்கத்தின் இவ்வருட செயற்பாடுகள் தொடர்பான ஏதாவது புகைப்படங்கள் அல்லது அங்கத்தவர்களின் புகைப்படங்கள் இருப்பின் அவற்றுடனும் கீழ் வரும் இடங்களுக்கு நேரில் வரவும்.

**யாழ்ப்பாணத்தில் :**
'ஒளிஅரசி' கரும பீடம்
நியூ உதயன் பப்ளிகேஷன் இல: 361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: தொ.இ: 0215677222/ 0776569617

**கிளிநொச்சி, முல்லைத்தீவில்:**
'ஒளி அரசி' கரும பீடம், உதயன் இணைக்காரியாலயம்
A9 வீதி,கரடி போக்குச் சந்தி (சென். திரேசா பெண்கள் பாடசாலைக்கு (முன்பாக)
தொடர்புகளுக்கு: தொ.இ: 0212280065

வவுனியா, மன்னாரில் :
'ஒளி அரசி' கரும பீடம், உதயன் இணைக்காரியாலயம்
இல. 104, 1ம் மாடி பஸ் நிலைய கட்டிடத் தொகுதி ,
தொடர்புகளுக்கு: தொ.இ: 0215672248/0773742554

(C/14198)

# தேர்தலுக்கு முன்னர் பதவி விலக மாட்டேன்

## *தாய்லாந்துப் பிரதமர் திட்டவட்டம்*

பாங்ஹொக், டிசெ.12

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னதாகப் பதவி விலகுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் தாய்லாந்துப் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா.



**ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் அதனை நிறுத்தி விட்டு, நடைபெறவுள்ள தேர்தலைப்பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.**

2011ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற யிங்லக் ஷினவத்ரா, அந்த நாட்டின் பிரதமராகப் பொறுப்பேற்றார்.

எனினும் தற்போதும் அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதியும், யிங்லக் ஷினவத்ராவின் சகோதரருமான தக்சின் ஷினவத்ராவின் ஆட்சியே நடைபெறுகின்றது. யிங்லக் ஷினவத்ராவின் ஆட்சியில் ஊழல் மலிந்துவிட்டது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

அதையடுத்து எதிர்க்கட்சிகள் பொதுமக்களை இணைத்துக் கொண்டு யிங்லக் ஷினவத்ரா உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டத்தில் இறங்கின. சிறிது சிறிதாக வலுவடைந்த ஆர்ப்பாட்டங்கள், தற்போது அந்நாட்டு அரச அலுவலங்களைப் பொதுமக்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் அளவுக்கு வளர்ந்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் அந்த நாட்டுத் தலைநகர் பாங்ஹொக்கில் கூடி அரசுக்கெதிரான போராட்டங்களை மேற்கொண்டனர்.

போராட்டங்கள் தீவிரமடைந்ததை அடுத்து, நாடாளுமன்றத்தைக் கலைத்து, அடுத்து வரும் 60 நாள்களுக்குள் புதிய தேர்தலை நடத்துவதற்கு இணங்குவதாகப் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா அறிவித்தார்.

பிரதமரின் இந்த அறிவிப்பை ஏற்றுக்கொள்ளாத எதிர்க்கட்சிகள், பிரதமரை உடனடியாகப் பதவி விலகக் கோரித் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தநிலையிலேயே தேர்தலுக்கு முன்னதாகப் பதவி விலகுவது என்ற பேச்சுக் கே இடமில்லை என்று யிங்லக் ஷினவத்ரா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

"பெப்ரவரி 2ஆம் திகதி தேர்தல் நடைபெறும் வரை பிரதமர் பதவியில் நானே நீடிப்பேன். எனவே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் அதனை நிறுத்தி விட்டு, நடைபெறவுள்ள தேர்தலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.



பிரதமரின் இந்த அறிவிப்பால் தாய்லாந்தில் மேலும் பதற்றம் அதிகரித்துள்ளது. (ற)

# இனப் படுகொலையைத் தடுக்க விழிப்புடன் செயற்பட வேண்டும்

## *ஐ.நா. துணைப் பொதுச்செயலாளர் கூறுகின்றார்*

நியூயோர்க், டிசெ.12

உலகில் இனப்படுகொலைகள் அதிகரித்து வருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு நாம் துணிச்சலுடனும், விழிப்புடனும், உறுதியுடனும் செயற்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார் ஐ.நா. துணைப் பொதுச் செயலாளர் யான் எலியாசன்.

"இரண்டாம் உலகப் போரின் போது யூதர்களுக்கும் மற்றும் பிற சிறுபான்மை குழுக்களுக்கும் எதிராக நாசிக் கொள்கையாளர்கள் மனித சமுதாயத்துக்கு இழைத்த குற்றங்களின் எதிரொலியாக 1948ஆம் ஆண்டு டிசெம்பர் 9ஆம் திகதி நடந்த ஐ.நா. பொது சபையின் முதல் கூட்டத்தில் உலக ஒப்பந்தம் ஒன்று கொண்டுவரப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் இனப்படுகொலை, அனைத்துலகச் சட்டத்தின் கீழ் குற்றம் எனக் கூறப்பட்டது.

**"–"**

**இனப்படுகொலையைச் செய்வோர், அதற்குத் தூண்டு கோலாய் இருப்போர், திட்டம் தீட்டுவோர் என அனைவருமே குற்றவாளிகள் ஆகின்றனர்.**

அந்த உலக ஒப்பந்தத்தை உலகில் 140க்கும் மேற்பட்ட நாடுகள் நடைமுறைப்படுத்துகின்றன. இனப்படுகொலையைச் செய்வோர், அதற்குத் தூண்டு கோலாய் இருப்போர், அதற்குத் திட்டம் தீட்டுவோர் ஆகிய அனைவரும் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் ஆகின்றனர்" என்று தெரிவித்துள்ளார் எலியாசன். (ற)



தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதியும், ஜனநாயகப் போராளியுமான மறைந்த நெல்சன் மண்டேலாவின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் சுமார் 100 உலகத் தலைவர்கள் பங்கேற்று அஞ்சலி செலுத்தினார்கள். நிற வெறியை எதிர்த்துப் போராடிய தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா கடந்த 5ஆம் திகதி உடல் நலக்குறைவு காரணமாக சாவடைந்தார். அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் கூட்டம் ஜோகன்னஸ்பேர்க் நகரில் சொவெட்டோ பகுதியில் உள்ள எஃப்என்பி உதைபந்தாட்ட மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் 80,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் திரண்டிருந்தனர். ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்ட மண்டேலாவின் உடலுக்கு அவர்கள் அஞ்சலி செலுத்தினர். நினைவஞ்சலிக் கூட்டத்தில் நெல்சன் மண்டேலாவின் மனைவி கிரகா மாஷெல், முன்னாள் மனைவி வின்னி மண்டேலா, அவரது குழந்தைகள், பேரக் குழந்தைகள் கலந்து கொண்டனர். நெல்சன் மண்டேலாவின் இறுதிச் சடங்கு எதிர்வரும் 15 ஆம் திகதி அவரது சொந்த ஊரான க்யுனுவில் நடைபெறவுள்ளது. (ற)

# ஐரோப்பிய நாடுகளை உளவு பார்த்ததா சீனா?

## *கிளம்பியது புதிய சர்ச்சை*


நியூயோர்க், டிசெ.12

உலக நாடுகளை அமெரிக்கா உளவு பார்த்தது என்ற தகவல்களை அமெரிக்க உளவு அமைப்பின் முன்னாள் பணியாளர் எட்வேர்ட் ஸ்நோடன் பகிரங்கப்படுத்தியிருந்தார். அதனால் ஏற்பட்ட சர்ச்சைகள் இன்னும் ஓயாத நிலையில் ஐரோப்பிய நாடுகளை சீனா உளவு பார்த்தது என்ற தகவல்கள் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த செப்ரெம்பர் மாதம் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் ஜி-20 உச்சி மாநாடு நடப்பதற்கு முன்பாக சீனாவைச் சேர்ந்த சிலர், ஐரோப்பிய நாடுகளில் இருந்தவாறே, ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் அமைச்சகங்களின் கணினிகளிலிருந்து ரகசியமாக உளவுத் தகவல்களை திரட்டினர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தகவலை அமெரிக்காவைச் சேர்ந்த 'பயர் ஐ இன்க்' என்ற கணினி வைரஸ் எதிர்ப்பு தொழில்நுட்ப விற்பனை நிறுவனம் வெளியிட்டுள்ளது. எந்தெந்த ஐரோப்பிய நாடுகளில் இருந்து உளவுத் தகவல்களை சீன இணையத்திருடர்கள் பெற்றனர் என்பதைத் தெரிவிக்க அந்த நிறுவனம் மறுத்து விட்டது. (ற)

## கவனத்தை ஈர்த்த கைகுலுக்கல்



தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் அஞ்சலி நிகழ்வு நேற்றுமுன்தினம் தென்னாபிரிக்கத் தலைநகர் ஜொகன்னர்ஸ்பேர்க்கில் நடைபெற்றது. அதில் உலகத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர். அந்த நிகழ்வில் கலந்துகொண்ட அமெரிக்க ஜனாதிபதியும், கியூபா ஜனாதிபதியும் கைலாகு செய்து கொண்டமை பெரும் அதிர்ச்சிகரமான நிகழ்வாகக் கருதப்படுகிறது. அமெரிக்காவும் கியூபாவும் அருகில் இருந்தாலும், பல ஆண்டுகாலமாக இருநாடுகளுக்கிடையே பனிப்போர் நிலவுகிறது. மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் மேடை ஏறிப் பேசுவதற்கு முன்பாக ஒபாமா தாமாகவே முன்வந்து கியூபா ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோவுடன் கைகுலுக்கினார். எனினும் அந்த நிகழ்வு திட்டமிட்ட ஒன்றல்ல என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ற)

# சீனாவில் தீ விபத்து: 16 பேர் சாவு

பீஜிங், டிசெ.12

சீனாவின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள கோங்மிங் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சந்தைத் தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.



சுமார் ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் அமைந்துள்ள அந்தச் சந்தைத் தொகுதியின் பெரும்பாலான பகுதிகள் தீயால்சேதடைந்துள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தீ விபத்து இடம்பெற்றிருந்த போது சந்தையில் வர்த்தக நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

தீ பரவியதும் உடனடியாக அங்கு விரைந்த தீயணைப்புப் படைவீரர்கள் சுமார் இரண்டு மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தற்போது அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# போதைப் பொருள் சந்தைக்கு ஒப்புதல் வழங்கியது உருகுவே

லண்டன், டிசெ.12

உலகில் முதலாவது போதைப் பொருள் தேசிய சந்தை அமைப்பது குறித்த வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் உருகுவே நாட்டின் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. செனட் சபையில் நடத்தப்பட்ட இந்த வாக்கெடுப்பில் 13 வாக்குகள் எதிராகவும், 16 வாக்குகள் ஒன்றுபட்ட ஆளும் பிராட் முன்னணிக்கு ஆதரவாகவும் கிடைத்தன.

உலகமெங்கும் சட்டவிரோதமானதாகக் கருதப்படும் போதை மருந்துப் பொருளை சட்டரீதியாக விற்பனை செய்ய முடிவெடுப்பதன் மூலம் உருகுவே அரசு ஓர் ஆபத்தான திட்டத்தைக் கையில் எடுத்துள்ளதாகக் கருதப்படுகின்றது.

அடுத்த ஆண்டு இதன் விற்பனைச் சந்தையைத் தொடங்கும் எண்ணத்துடன் உள்ள ஜனாதிபதி ஜோஸ் முஜிகாவின் ஒப்புதலுக்காக குறித்த சட்ட மூலம் தற்போது காத்திருக்கின்றது. (ற)

# வடக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்காவிட்டால் மீண்டும் மோதல்

## அநுரகுமார எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு.டிசெ.12

காணிப் பிரச்சினை உட்பட வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்காமல், அப்பகுதியில் புதிய குடியேற்றங்களை ஏற்படுத்தினால் அது மீண்டுமொரு மோதலுக்குத்தான் வழிவகுக்கும்.

இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவசாயம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சீனி, தோடம்பழம் போன்றவற்றை இறக்குமதி செய்வதை நிறுத்தவேண்டும் எனப் பிரதமர் கூறுகின்றார். அப்படியானால், போதைப்பொருள்கள் வருவதையும் தடைசெய்ய வேண்டும்.

பாடசாலை விட்டதும் விவசாயிகளின் பிள்ளைகள் வயலுக்குச் செல்லவேண்டும் எனவும் அவர் கூறுகின்றார். ஆனால், அவரது மகன் மாகாணசபைக்குச் சென்றுள்ளார். நிலைமை இப்படியிருக்கையில் அவர் இவ்வாறு கூறுவது நியாயமா? - என்றார்.

10 ஆவது பிறந்ததின வாழ்த்துக்களும் பாராட்டி வாழ்த்துதலும்

செல்வி ப.ஆர்த்திகா

2013இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த பரமதாசன் மேனகா தம்பதியரின் புதல்வியும் யா/கரணவாய் தாமோதரம் வித்தியாலய மாணவியுமான செல்வி ப.ஆர்த்திகா அவர்கள் குச்சம் ஞானவைரவர், வராகி அம்மன் திருவருளால் மேலும் கல்வியில் சாதனைகள் படைத்து வளமாக வாழ வாழ்த்துகின்றோம்.

அவரின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா,
அப்பப்பா, அப்பம்மா,
பெரியப்பாமார், சித்திமார், அத்தைமார்,
மாமாமார், சகோதரர்கள், மச்சான்மார், மச்சாள்மார்,
[illegible] (இராசதுரை) குடும்பத்தினர்
'பிருந்தாவனம்', அல்வாய் வடக்கு, அல்வாய்.




இதோ!
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல்,சளி,இளைப்பு மற்றும் நுரையீரல்,சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை இருமல் பாணி**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பாமஸிகளிலும்,கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*Manufactured By:*
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567
(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அண்மையில்) (சி/14237)(7.6.3)



**கிருஷ்ணா அடகு சேவை**

பதிவு இல: J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2012 ஆம் ஆண்டு (31.11.2012) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2014) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும்.

புதுப்பிக்கத் தவறின் 15.01.2014 ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0214900311

உரிமையாளர்.

இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046

(C/14325)(10.6.3)

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக Evergreen Clinicஇக்கு அருகில் உள்ள வினாசித்தம்பி வீதியில் (A9வீதியில் இருந்து 150m உள்ளே) உள்ள 1¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 990 4045 (33037)(7.6)

**காணி விற்பனைக்கு**

சுற்றுலா விடுதி அமைக்கக்கூடிய கடற்கரைக்கு அண்மையில் உள்ள நல்லதண்ணீர் உடன் கூடிய காணி விற்பனைக்குண்டு
(41099)(12.6) தொடர்பு:077 311 2324

**காணிவிற்பனைக்கு**

அச்செழு மத்தி மெயின் றோட்டில் 8 பரப்புக்காணியில் புது வீடும் அதற்கு முன்னால் 8 பரப்பு வெறும் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 4701901 (41070)(4.6.3)

**காணி விற்பனைக்கு**

சுதுமலை தெற்கில் மாப்பியன் மில்லுக்கு அருகில் வீட்டுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: (41098)(12.6) 021 225 0201/077 413 8500

**வீடு வாடகைக்கு**

கச்சேரிக்கு அண்மையில் இல.55, சோமசுந்தரம் லேனில் 7 அறைகொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: (41067)(10.6.3)
021 222 6438,077 5573140

**தவறிவிட்டது**

NPHB 7462 இலக்க வாகன பதிவுப் புத்தகம் யாழ்ப்பாணம்-கல்லுண்டாய்-சித்தன்கேணிக்கு இடையில் 07.12.2013 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 358 0989 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (சி/14352)(7.6)

**மலிவு விற்பனை**

SALE SALE

தம்ரோ




இன்று (12.12.2013) முதல்
நத்தார் மற்றும்
புதுவருடத்தை முன்னிட்டு

தம்ரோ, பியெஸ்ரா பொருள்களின் ஏக விநியோகஸ்தர்களான எம்மிடம் அலுமாரி வகைகள், கொம்பியூட்டர் ரேபிள்கள், பிளாஸ்ரிக் கதிரை வகைகளை 5% - 10% வரையிலான விற்பனைக் கழிவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இங்கு Stand fan, Rice cooker, Gas Cooker, Innovex TV போன்றவைகளும் பெற்றுக்கொள்ளலாம்.




* நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடன் 8500/= பெறுமதியான Coffee table (Glass) ஒன்று இலவசம்.
* விசேட விற்பனைக் கழிவுகளுடன் Damro Washing Machine களும் பெற்றுக்கொள்ளலாம். (5 Year's Warranty)



* நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு மெத்தைகளுடன் ஒரு பிளாஸ்ரிக் Teapow OR Pillow இலவசம்.

25000/= பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்தால் இலவச விநியோக சேவை.

(C/14354)(2.6)

**ஜமுனா பர்னிச்சர், 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 2829**

**ஜமுனா பர்னிச்சர், 181,நாவலர் வீதி,யாழ்ப்பாணம். 021 222 1092**

## மன்னாரில் நல்லிணக்கச் செயலமர்வு

மன்னாரில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பான ஆரம்பச் செயலமர்வொன்று இடம்பெற்றுள்ளது.

மன்னார் சமாதானத்துக்கும் மீள்இணக்கத்துக்குமான வளங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சர்வமத மற்றும் இன பன்மைத்துவத்தினூடாக நல்லிணக்கத்தை கட்டியெழுப்புதல் தொடர்பான இந்த ஆரம்பச் செயலமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மன்னார் ஆகாஸ்விடுதியில் இடம்பெற்றது.

குறித்த செயலமர்வுக்கு தேசிய சமாதானப் பேரவை அனுசரணை வழங்கியது.

இந்த செயலமர்வுக்கு தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா, உதவி நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் சமன் செனவிரட்ன, ஆர்.பி.ஆர். அமைப்பின் தலைவர் சட்டத்தரணி எம்.எம்.சபூறுதீன், ஆர்.பி.ஆர். அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் செல்வானந்த ராஜன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

குறித்த செயலமர்வில் மன்னார் மாவட்ட சர்வமத பேரவைக்கான இணைத் தலைவர்களாக அருட்பணி தமிழ் நேசன் அடிகளார், சிவஸ்ரீ தர்ம குமார குருக்கள், மௌலவி அஸ் சொய்க் எஸ்.ஏ. அசீம், வண. விமலரத்ன தேரர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-12)

## மனித உரிமைகள் தினம் டிசெ.15 இல் மன்னாரில்

மன்னார், டிசெ.12

1948ஆம்ஆண்டுடிசெம்பர்10ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபை கூடி சர்வதேச மனித உரிமைச் சாசனங்களைபிரகடனப்படுத்தியது. நேற்றுமுன்தினம் இந்த சர்வதேச பிரகடனம் 65 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. இதனை நினைவு கூர்ந்தும், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கமாகவும் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டத்தில் மக்கள் பேரணியும், செயலமர்வும் மன்னார் அரச அதிபரின் ஜெய்க்கா மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வுகள் மேலதிக அரச அதிபர் திருமதிஸ்ரான்லி டி மெல் தலைமையில் நடைபெறும். மன்னார் சமாதான அமைப்பின் ஏற்பாட்டில் பல அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இந்த நிகழ்வுநடைபெறவுள்ளது.

மனித உரிமை ஆர்வலர்கள், கல்வி கற்க விரும்பும் மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் இந்த விழாவில் கலந்து கொண்டு அனைத்துலக மனித உரிமை சாசனத்துக்கு மதிப்பளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## மன்னார் மாவட்டத்தில் வீட்டுத் தோட்டப் போட்டி

மன்னார், டிசெ.12

மன்னார் மாவட்டத்தில் சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளரைத் தெரிவு செய்து பரிசு வழங்கும் திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த வீட்டுத்தோட்டப் போட்டியானது விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியான போட்டியில் பங்குபற்றுவர்.

இதில் முதலாம் இடத்தைப் பெறும் போட்டியாளர்களிடையே மாவட்ட மட்ட மதிப்பீடு நடைபெற்று இறுதியாக மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவ்வாறு மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் போட்டியாளருக்கு முதலாவது பரிசாக 15 ஆயிரம் ரூபாவும், இரண்டாவது பரிசாக 12ஆயிரம் ரூபாவும், மூன்றாவது பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் போட்டி விதிமுறைகள் பற்றிய முழுமையான விவரங்களை பார்வையிட்டு போட்டிக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விவசாயப் போதனாசிரியருக்கு அல்லது பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கல்) அலுவலகம், மன்னார் என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை நேரடியாகவும் மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் கையளிக்க முடியும்.

கடித உறையின் இடது மேற்பக்கத்தில் சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளருக்கான போட்டி-2013 எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர் களுக்கு தைப்பொங்கல் தினத்தை ஒட்டியதாக இடம்பெறும் உழவர் விழாவில் வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனினால் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

சகல வீட்டுத்தோட்டச் செய்கையாளர்களும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியும் எனவும், மேலதிக விவரங்களுக்கு அருகில் உள்ள விவசாயப் போதனாசிரியரை நாடுமாறும் மன்னார் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-12)



காணாமற் போனவர்களின் உறவுகள் ஜனாதிபதிக்கு மனுவொன்றைக் கையளிப்பதற்கு ஊர்வலமாகச் செல்கின்றனர்.

# காணாமற் போனவர்களை எம்மிடம் மீட்டுத்தாருங்கள்

### கிளிநொச்சியில் கண்ணீர் மல்க உறவினர்கள் ஜனாதிபதிக்கு மனு

கிளிநொச்சி,டிசெ.12

சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று காணாமற் போனவர்களது உறவுகள் தமது உறவுகளைக் கண்டு பிடித்து மீட்டுத் தருமாறு கோரி ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இதன்போது காணாமற்போனவர்களது உறவுகள் கதறி அழுது கண்ணீர்விட்டு தமது உறவுகளின் நிலை தொடர்பாகக் கலங்கி நின்றதையும் காணமுடிந்தது.

குறித்த தினத்தன்று கிளிநொச்சி மாவட்ட மனித உரிமைகளுக்கான மக்கள் அமைப்பினால் கரைச்சிப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் மனித உரிமைகள் பற்றிய கருத்துரைகள் இடம்பெற்றன.

பின்னர் கிளிநொச்சி மாவட்ட காணாமற் போனவர்களது உறவுகளின் அமைப்பினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைப்பதற்கென மனுவொன்றைக் கையளித்துள்ளனர். ஏ-9 வீதியூடாக ஊர்வலமாகச் சென்ற இவர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஒன்றுகூடினர். அதன்பின் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.ஸ்ரீனிவாசனிடம் குறித்த மனுவையும் கையளித்தார்கள். (க-426)

## நானாட்டான் சம்பவத்துக்கு எதிராக மன்னாரில் சாத்வீக ஆர்ப்பாட்டம்




மன்னார், டிசெ.12

நானாட்டான் பிரதேச செயலகம் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களைச் சேர்ந்த ஊழியர்கள் அமைதி ஆர்ப்பாட்டத்திலும் பணிப் புறக்கணிப்பிலும் ஈடுபட்டனர்.

நானாட்டான் பிரதேச செயலகம் பொன்தீவுகண்டல் மக்களால் கடந்த திங்கட்கிழமை முற்றுகையிடப்பட்டதுடன் அலுவலகப் பணிகள் முடக்கப்பட்டு, தாக்குதலுக்குள்ளானது இந்த தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் பிரதேச செயலகத்தில் ஒரு மணித்தியால பணிப் புறக்கணிப்பில் பிரதேச செயலக ஊழியர்கள் ஈடுபட்டனர்.

இதன் போது அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மன்னார் பிரதேச செயலக ஊழியர்கள் பதாகைகளை ஏந்திய வாறு காணப்பட்டனர்.

இதில் மன்னார் பிரதேச செயலர் எஸ்.தயானந்தா,மன்னார் பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர் களின் நிர்வாக உத்தியோகத்தர் ராதா பெர்ணாண்டோ உள்ளிட்ட பிரதேச செயலக ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதே வேளை மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் அமைதியான முறையில் இடம்பெற்றுள்ளன.

நானாட்டான் பிரதேச செயலகத்தில் அன்றைய தினம் காலை முதல் மாலை வரை அமைதி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதே போன்று மன்னார், முசலி, மாந்தை மேற்கு,மடு ஆகிய 4 பிரதேச செயலக ஊழியர்களும் முற்பகல் 10 மணிமுதல் 11மணி வரையான ஒரு மணித்தியால பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

குறித்த பணிப்புறக்கணிப்பில் கலந்து கொண்ட அரச ஊழியர்கள் நானாட்டான் பிரதேச செயலகம் தாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டித்ததோடு இவ்வா றான சம்பவம் எதிர்காலத்தில் நடைபெறக் கூடாது எனவும் தெரிவித்தனர். (க-12)

LOLC
மாபெரும் வாகனச்சந்தை கிளிநொச்சியில்
LANKA ORIX FINANCE
LOLC மைக்ரோ கிறெடிட்
உங்களுக்கு உகந்த வகையில் உபயோகிக்கப்பட்ட அநேகவிதமான மோட்டார்சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், உழவு இயந்திரங்கள் டிமோபட்டா உள்ளடங்கலாக 50 வாகனங்கள்,அவ்விடத்திலேயே கொள்வனவு செய்யக்கூடியதொரு அரிய சந்தர்ப்பம்.
2013 டிசெம்பர் மாதம் 09ம் திகதியிலிருந்து
2013 டிசெம்பர் மாதம் 20ம் திகதி வரை.
A-9 ,கண்டி வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள வாகன தரிப்பிடத்தில்
தொடர்புகளுக்கு
மஜூரன் - 0776 50 68 39
சந்திமா - 0665 11 80 80
(C/14196)

# சுனாமி விழிப்புணர்வு இன்று கிண்ணியாவில்

திருகோணமலை,டிசெ.12
சுனாமி விழிப்புணர்வு நிகழ்வு இன்று வியாழக்கிழமை கிண்ணியா அண்ணல் நகரில் நடைபெறவுள்ளது.

கிண்ணியா பிரதேச செயலர் சி.கிருஷ்ணேந்திரன் தலைமையின் கீழ் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கடலோரம் வாழும் மக்கள் மீனவர் சங்கங்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

"–"

**கடலோரம் வாழும் மக்கள் மீனவர் சங்கங்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.**

சுனாமியால் ஏற்படும் விளைவுகள். சுனாமியின் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், சுனாமி எச்சரிக்கையைப் பின்பற்றுதல், சுனாமி ஏற்படுத்துவதற்கு முன்னர் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வது சம்பந்தமாக இந்த விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் மூலம் தெளிவு படுத்தப்படவுள்ளன. (ச)




கிழக்கு மாகாணத்தின் 2013ஆம்,2014ஆம் ஆண்டுகளுக்கான அபிவிருத்தியின் குறை ,நிறைவு குறித்து ஆராயும் மாநாடு செவ்வாய்க்கிழமை கிழக்கு மாகாண பிரதம செயலர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜிப்ஏமஜித்,கிழக்குமாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை உட்பட பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## முதலுதவி பயிற்சி இன்று

திருகோணமலை,டிசெ.12
திருகோணமலை மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம சேவை அதிகாரிகளுக்கான முதலுதவி சம்பந்தமான விழிப்புணர்வுப் பயிற்சிச் செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திருகோணமலை குளக் கோட்டன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் இடர் ஏற்படும்காலங்களில் கிராமசேவை அதிகாரிகள் முதலுதவியை எவ்வாறு வழங்குவது, பொது மக்களின் நலனில் அக்கறை காட்டுவது. ஆபத்துக்களிலிருந்து மக்களை பாதுகாப்பது சம்பந்தமான பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன. (ச)

## உப உணவு பயிர்ச்செய்கை திருமலையில் மும்முரம்

திருகோணமலை,டிசெ.12
திருகோணமலை மாவட்டத்தில் உபஉணவுப் பயிர்ச் செய்கைகள் தற்பொழுது மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்று வாரங்களாகப் பெய்த தொடர்ச்சியான மழையை அடுத்து விவசாயிகள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மரவள்ளி, வற்றாளை, சோளம் முதலான பயிர்களுடன்கச்சான், கத்தரி, வெண்டி, புடோல் போன்ற மரக்கறி வகைகளைப் பயிரிடுவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# கிழக்கு மாகாண பட்ஜெட்; 7 வீதமே அபிவிருத்திக்கு

## தமிழர் பகுதிகள் திட்டமிட்டுப் புறக்கணிப்பு குற்றஞ்சாட்டுகிறார் துரைரெட்ணம்

மட்டக்களப்பு,டிசெ.12
வறுமையில் முதலாம் இடத்தில் உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தையும் உள்ளடக்கி அபிவிருத்திக்கென கிழக்கு மாகாண வரவு- செலவுத்திட்டத்தில் 7 வீத நிதி மட்டுமே அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.


இந்த ஒதுக்கீட்டில் தமிழ் பேசும் மக்களின் பகுதி என்பதற்காகவே திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கத்தோன்றுகிறது.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட் ணம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட பிரேரணை தொடர்பில் மாகாண சபையில் நடைபெற்ற விவாதத் தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய ரீதியாக வறுமையில் கிழக்கு மாகாணம் 6 ஆவதாகவும் மாவட்ட ரீதியில் மட்டக்களப்பு மாவட்டம் வறுமையில் முதலாவதாவும் உள்ளது. கிழக்கு மாகாணத்தில் உள்ள 45 பிரதேச செயலகங்களின் தரவுகளின் அடிப்படையில் வறுமையில் முறையே வாகரை முதலாம் இடத்தையும், பட்டிப்பளை இரண்டாம்,



வவுணதீவு மூன்றாம் இடத்தையும் உள்ளடக்கி உள்ளன என்று அரசின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தை உள்ளடக்கி அபிவிருத்திக்கென மாகாண வரவு -செலவுத் திட்டத்தில் 7வீத நிதி மட்டுமே அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீட்டில் தமிழ் பேசும் மக்களின் பகுதி என்பதற்காகவே திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளதாக நான் சந்தேகிக்கின்றேன். அரசின் இந்தப் போக்கை வன்மையாக கண்டிப்பதோடு தமிழினத்துக்கு எவ்விதத்திலும் பயனளிக்காத வரவு-செலவுத்திட்டதை ஆதரித்துநாம்ஏன் வாக்களிக்க வேண்டும் .

13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண ஆளுகைக்கு உட்பட்ட அதிகாரங்களை அபிவிருத்தி என்னும் போர்வையில் அரசிடம் ஒப்படைப்பதற்குப் பதிலாக அதற்குரிய வளங்களை அரசிடம்பெற்று மாகாண அரசு முன்னெடுப்பதுதான் நியாயமானதாகும்.

அதற்கு மாறான செயற்பாட்டில் திருகோணமலை வைத்தியசாலையை மத்திய அரசுக்குதாரை வார்த்துக் கொடுப்பதற்காக நாங்கள் வாக்களிப்பதா? எனவே நாங்கள் வாக்களிக்க மாட்டோம்.

தேசிய ரீதியான கொள்கையாக கிழக்கு மாகாணத்தில் 45 உள்ளூராட்சிச் சபைகள், மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 உள்ளூராட்சி சபைகள், 14 பிரதேச செயலகங்கள் இருக்கவேண்டும்.

ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்திற்குரிய உள்ளூராட்சி சபை இரண்டை வேறு மாவட்டத்துக்கு மாற்றி கிரான் பிரதேசத்துக்கு தனியான பிரதேசசபை இல்லாமல் செய்தது எந்தவிதத்தில் நியாயமாகும்? கிழக்கு மாகாணத்தில் உள்ள வளமான காணிகளை அபிவிருத்தி என்னும் போர்வையில் எமது மக்களுக்கு வழங்காமல் பிற ருக்கு வழங்கி எமது வளங் களை எம்மிடம் இருந்து பறிப் பதற்கு நாங்கள் வாக்களிக்கமுடியாது. -என்றார். (ச)


# திருட்டுக்கள் குறித்து எச்சரிக்கை வேண்டும்

## பொலிஸார் அறிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் திருட்டு, கொள்ளை, சிறுவர் துஷ்பிரயோகம், விபத்து போன்றவற்றைத் தடுப்பதற்கு தமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொதுமக்களுக்கு கிராமங்கள் தோறும் ஒலிபெருக்கி மூலம் மாவட்ட தலைமையகப் பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் திருடர்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும் பொதுமக்களை பொலிஸார் கோரியுள்ளனர்.

அறிமுகமில்லாதவர்கள், சந்தேகத்திற்கிடமான ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள்களைக் கண்டால் உடன் பொலிஸாருக்குத் தகவல் தருமாறு கோரியுள்ளனர். வீதி விபத்துக்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதனால் பாதசாரிகளும் சாரதிகளும் போக்குவரத்து நடைமுறைகளைச் சரியாக பின்பற்ற வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# அம்பாறை மாவட்டத்தில் தென்னைகளுக்கு நோய்



அம்பாறை மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள தென்னை மரங்கள் ஒருவகை நோயால் பீடிக்கப்பட்டுள்ளன.

அதனால், அந்த மரங்களில் காய்க்கும் தேங்காய்கள், செவ்விளநீர் தேங்காய்கள் என்பன பாதிப்படைந்துள்ளன என்று தெங்குச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

செவ்விளநீர்த்தேங்காய்களிலும், இளநீர் பருவத்திலுள்ள தேங்காய்களின் மேற்பகுதியிலும் கபில நிறத்திலான வளையம் ஏற்பட்டு வருகின்றது என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெங்குச் செய்கையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

# நிரூபித்தால் விலகுவேன் பதவி

## ஊழல் குற்றச்சாட்டுக்கு சவால் விடுக்கிறார் கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பதில்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நான் இப்பதவியைப் பொறுப்பேற்றதிலிருந்து பத்து ரூபாவேனும் ஊழல் மோசடி செய்திருப்பதாக நிரூபிக்கப்பட்டால் எனது துணைவேந்தர் பதவியில்இருந்து உடனடியாக விலகுவேன் என்று கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கிட்னண் கோபிந்தராஜா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தாவது:-

நான் இந்தப் பல்கலைக்கழகத்துக்கு வந்தபோது பல்வேறுபட்ட பிரச்சினைகள் இருந்தன.



அவற்றையெல்லாம் படிப்படியாக நிவர்த்தி செய்து மாணவர்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் கற்றுக் கொள்வதற்கான சூழலை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

சுமார் 2000 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான நிதியை இந்தப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கு செலவு செய்து அபிவி ருத்திகளை மேற்கொண்டு வரு கின்றோம்.

எதிர்காலத்தில் சுமார் 5000 மில்லியன் ரூபா நிதியைப் பெற்று பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்காகப் பயன் படுத்த திட்டங்களை வரைந்து கொண்டிருக்கின்றோம்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இதுவரை இருந்த பல கட்டமைப்புகளில் மாற்றம் செய்திருக்கின்றோம்.

கல்வி நடவடிக்கைகள், பௌதிக வளங்கள் போன்றவை மாற்றம் பெற்றிருக்கின்றன. பல்கலைக்கழகத்துக்குள் மோசடி செய்து வாழ்க்கை நடத்த வேண்டிய தேவை எனக்கு ஒருபோதும் ஏற்பட்ட தில்லை.

கடந்த 30 வருடகாலப் போரால் மோசமாகப் பாதிக்கப்பட்டு பின் தங்கியிருந்த இந்தப் பல்கலைக்கழகம் கடந்த சில வருடங்களாக எமது நிர்வாகத்தின் கீழ் மிகவும் சிறப்பான முறையில் அபிவிருத்தியடைந்து வருகிறது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடந்த காலங்களில் நடைபெற்றுவந்த ஊழல்கள் அனைத்தும் எமது நிர்வாகத்தின் கீழ் முற்று முழுதாக ஒழிக்கப்பட்டு கல்வி சார் நடவடிக்கைகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருவது இன்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். கிழக்குப் பல்கலைக்கழகம் உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகமாக விரைவில் மாற்றப்படும். -என்றார். (ச)

# வெள்ளை வானில் நாய்களும் கடத்தல்



கொழும்பு,டிசெ.12
வெள்ளை வான் கலாசாரத்தினால் மனிதர்கள் மாத்திரமன்றி நாய்களும் காணாமற் போயுள்ளன என்று ஜனநாயக கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவ தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அத்துருகிரிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-


நாய்களுக்குத் திருமணம் நடத்தினார்கள் நாய்களின் உணவுகளுக்கான வரி குறைக்கப்பட்டாலும் பொதுநலவாய காலப் பகுதியில் நாட்டில் இருந்த நாய்களையும் பிடித்துச் சென்றார்கள்.

தற்போது நாட்டில் மனிதர்கள் மாத்திரம் காணாமற் போவதில்லை. நாய்களையும்வெள்ளை வானில் கொண்டு சென்றார்கள்.

அந்த நாய்கள் தற்போது காணாமற்போயுள்ளன.அவற்றை உரிமையாளர்கள் இன்னமும் தேடுகின்றனர் - என்றார். (த-எ)

# தமிழரைப் போராட வருமாறு அழைக்கிறது ஹெல உறுமய

## பல்தேசிய நிறுவனங்களுக்கு எதிராக



கொழும்பு,டிசெ.12
பல்தேசிய கம்பனிகளுக்கு எதிராகப் போராடுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் மக்களும் தம்முடன் இணைய வேண்டும் என்று நேற்று முன்தினம் அழைப்பு விடுத்தார் ஜாதிக ஹெல உறுமயவின் தவிசாளரும், அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வண. அத்து ரலிய ரத்தின தேரர்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற விவசாய, நீர்ப்பாசன அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் 109 கோடிக்கு விவசாய விதைகள் இறக்குமதிசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன், விவசாய விதைகள் தொடர்பில் புதிய சட்டவரை பொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது பிரச்சினைகளை ஏற்படுத்தும். இதற்கு உத்தர விட்டது யார் என்பதற்கான பதிலை அமைச்சர் வழங்க வேண்டும்.

எனினும், இதுவரை இதற்கு அமைச்சர் ஒப்புதல் வழ்ங்காமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

விவசாய நெல் விதை பிரச்சினை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் இறுதிப் பிரதிபலனாகவே இந்திரா காந்தி கொல்லப்பட்டார். பஞ்சாப் மாநிலத்திலேயே இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. வடக்கில் இன்று கிளிநொச்சியில் சிறுநீரக நோய் அதிகரிதுள்ளது.

யாழில் கிணற்றுநீர் மாசடைகின்றது. இது தொடர்பில் கூட்டமைப்பு பேசுவதில்லை. இதையும் அவர்கள் சிங்களவர் பிரச்சினையாகவே பார்க்கின்றனர். இதனை விடுத்து பல் தேசிய நிறுவனங்களுக்கு எதிராகப் போராட அவர்கள் முன்வர வேண்டும் - என்றார். (ச-சி)

# மேல் மாகாண சபைக்கு 162 கோடி ரூபா கடன்

கொழும்பு,டிசெ.12
கொழும்பு மாநகரசபைக்கு மேல்மாகாணசபை இதுவரை 162 கோடி ரூபாவைக் கடனாகச் செலுத்தவேண்டியுள்ளதாக மாநகரசபையின் நிதிப் பிரிவு தெரிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டு முதல் கொழும்பு நகரிலுள்ள நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட அபராதப் பணமாக 40 கோடி ரூபாவும், முத்திரைக் கட்டணமாக 122 கோடி ரூபாவும் நிலுவையில் உள்ளதாக மாநகரசபை நிதிப்பிரிவு தெரிவித்துள்ளது.

மாநகர சபையில் நிலவும் நிதி நெருக்கடியைச் சமாளிக்க மேல்மாகாண சபை செலுத்த வேண்டிய கடன் தொகையை அறவிட்டால் பேருதவியாக இருக்கும் என்று மாநகரசபை நிதிப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச)




மனித உரிமை ஆர்வலர்களான லலித் மற்றும் குகன் ஆகியோர் கடத்தப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ளது.
இந்த நிலையில் அவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி சோஷலிச முன்னிலைக் கட்சியினர் மனித உரிமைகள் தினமான நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# பதில் பொலிஸ் மா அதிபராக காமினி நவரத்ன

கொழும்பு,டிசெ.12
சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரான காமினி நவரத்ன, பதில் பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மாஅதிபர் என்.கே இலங்கக்கோன், மலேசியா பயணமாகியதை அடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள் ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் நேற்றுமுன்தினம் முற்பகல் மலேசியாவிற்கு புறப்பட்டுச் சென்றார். மலேஷிய பொலிஸ் சேவை



யின் பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து, இலங்கையின் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்குவது, மற்றும் பொலிஸ் சேவை தொடர்பில் இருநாடுகளுக்கும் இடையிலான உறவைக்கட்டியெழுப்புதல் என்பனவே அவரது இந்தப் பயணத்தின் நோக்கமாகும். (த-எ)

# சீனித் தொழிற்சாலைகளால் 1.5 பில்லியன் வருமானம்

கொழும்பு,டிசெ.12
செவனகல சீனித் தொழிற்சாலைகள் இரண்டில் மட்டும் 1.5 பில்லியன் வருமானம் கிடைத்துள்ளது என்று சீனித் தொழிற்சாலை அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார். "திறைசேரிக்கும் 122 மில் லியன் ரூபா வழங்கியுள்ளோம். இலங்கை வங்கியில் 151.99 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைகளில் நட்டம் ஏற்படவில்லை" என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (த-எ)

# போக்குவரத்தை மாற்ற நகல் வரைவுத் திட்டம்

## தினமும் 20 லட்சம் பேர் கொழும்பு வருகை

கொழும்பு,டிசெ.12
கொழும்பு நகர் மற்றும் அதன் சுற்றுப் புறங்களின் போக்குவரத்து முறைமையை நவீனமயமாக மாற்றியமைக்கும் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்ட நகல் வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வலிமை அளிக்கக் கூடியதான நகர்புறப் போக்குவரத்து முறைமையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்தநகல் தொடர்பான இடைக் கால குழுவின் அறிக்கை நேற்றுமுன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிபுணர்கள் அடங்கிய குழுவினரால் மக்களின் கருத்துக்களும் கருத்தில் எடுக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ள இடைக் கால குழுவின் நகல் அறிக்கை தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் மாநாடு கொழும்பு ஹலதாரி ஹோட்டலில் நேற்று முன்தினம் போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கமவின் தலைமையில் நடைபெற்றது.

இப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறந்த போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தும் வகையில் 25 ஆண்டு கால திட்டமொன்று தயாரிக்கப்படும் என்று மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டது.

அதனை அடிப்படையாகக் கொண்டுபோக்குவரத்து அமைச்சு ஜப்பான் சர்வதேசக் கூட்டுறவு முகவர் ஜக்காவின் 5 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் நகல் திட்டத்தை வகுக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்தது 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட நகல் தயாரிக்கும் நடவடிக்கை 2014 ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிறைவு செய்யப்பட்டு அரசிடம் கையளிக்கப்படவுள்ளது.

கொழும்பைப் பொறுத்த மட்டில் போக்குவரத்து வசதி மிகவும் முக்கியமானதாகும்.

கொழும்பு நகருக்குள் நுழைவதற்கு ஏழு பிரவேச வாயில்கள் உள்ளன.

இதன் மூலம் நாளொன்றுக்குக்கு 10 லட்சம் மக்கள் பிரவேசிக்கின்றனர்- என்றார். (ச)

# தொழிற்சாலையை உடனடியாக இடமாற்றுக

## ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு,டிசெ.12
"கம்பஹா, ரத்துபஸ்வெல கையுறைத் தொழிற்சாலையை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜோன் அமர துங்க வலியுறுத்தினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக இலவச குடிதண்ணீரை வழங்க அரசு முன்வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ரத்துபஸ்வல பிரதேசத்தில் இயங்கி வந்த கையுறை தொழிற்சாலையினால் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களின் குடிநீரில் இரசாயனம் கலந்து காணப்படுகிறது என்று நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் நீர்வளச் சபையால் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வினவிய போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

"ரத் துபஸ்வல பிரதேசத்திலுள்ள தொழிற்சாலையினாலேயே மக்கள் பயன்படுத்தும் நீரில் இரசாயனம் கலந்துள்ளதாக நாம் பல முறை தெரிவித்தோம். தற்போது நாம் கூறியதைப் போன்றே அது நிரூபிக்கப்பட்டுள்ளது" என்று அவர் கூறினார். (ச)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அனைத்துலக மனித உரிமைகள் நாளில் மனித தர்மமும் நீதியும் திருமலையில் கடாசல்!

அனைத்துலக மனித உரிமைகள் நாளன்று திருகோணமலையில் நடத்தப்பட்ட அராஜகம், தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் ஜனநாயகத்தின் பாற்பட்ட எந்த ஓர் உரிமையும் கிடையாது–வழங்கப்படவில்லை– என்பதற்கான ஆகப் பிந்திய உதாரண சம்பவமாகும்.

காணாமற்போன தமது உறவுகள் தொடர்பான கோரிக்கைகளை வலியுறுத்தியும், அவர்கள் சார்பில் நீதி கேட்டும் ஜனநாயக வழியில், அகிம்சை முறையில் போராட்டம் நடத்தியவர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான முறையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

அவர்களில் இருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மற்றும் பலரும் காயமுற்றனர். ஆனால் நிகழ்வில் பிரசன்னமாக இருந்த காவல்துறையினர் தாக்குதலைத் தடுப்பதில் அக்கறை காட்டவில்லை. இது துல்லியமாகத் தென் படுகிறது.

காணாமற்போன–காணாமற்போகச் செய்யப்பட்ட தமது பிள்ளைகளின்–நிழற் படங்களை வைத்திருந்த தாய்மார்களிடம் இருந்து அவற்றைப் பிடுங்கி எடுத்த தாக்குதலாளிகள், பல வருட காலமாக மனநோவுடன் வாழும் அவர்களையும் தாக்கிச் சென்றுள்ளனர்.

சாத்வீகமான முறையில் நடைபெற்ற கவனவீர்ப்புப் போராட்டம், காடைத்தனம் புரிந்தவர்களால், ஜனநாயக விரோத சக்திகளால் வெற்றிகரமாகக் குழப்பப்பட்டிருக்கிறது. தாக்குதலை வழிநடத்தியவர்கள் என்று கருதப்படும், சந்தேகிக்கப்படும் தரப்பினர், இனவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனை உற்சாகப்படுத்தும், தூண்டிவிடும் வழித்தடத்திலேயே அரச அங்கங்கள் செயற்படுகின்றன என்பதற்கு திருகோணமலைச் சம்பவம் ஆகப் பிந்திய நிகழ்கால உதாரணம்.

இலங்கையில் மனித உரிமைகள் அச்சொட்டாகப் பேணப்படுகின்றன என்று அனைத்துலக நாடுகளுக்குத் தம்பட்டம் அடிக்கும் அரசாங்கம், திருமலைத் தாக்குதல் குறித்து எந்தவகை நின்று விளக்கமும் வியாக்கியானமும் வழங்கப் போகின்றது?

வழமைப் பிரகாரம், அத்தகைய அராஜக, காடைத்தனச் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று, தனது வாய்ப்பாட்டை முழங்கி ஒலிக்கும், ஓதும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

மனித உரிமை மீறல்கள் குறித்து அனைத்துலக அரசுகளும் அவற்றின் சார்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் வெளிப்படுத்தி வரும் குற்றச்சாட்டுகளை மறுதலிப்பதில் தனது "கெட்டித்தனத்தைக்" காட்டிவரும் கொழும்பு அரசுக்கும், அதன் பிரதானிகளுக்கும், திருகோணமலைத் தாக்குதல் விவகாரம் ஒரு பொருட்டாக அமையுமா என்பது சந்தேகத்திலும் சந்தேகமே.

எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க அரசு நிறைவேற்றிய தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து 1956 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஐந்தாம் திகதி, கொழும்புத் தலைநகரின் காலிமுகத் திடலில், தந்தை செல்வா தலைமையில் நடத்தப்பட்ட சாத்வீக வழிப் போராட்டத்தை–

அப்போதைய அரச பிரதானிகள் ஏவிவிட்ட காடையர்கள், சத்தியாக்கிரகிகள் மீது, தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் மீது, தாக்குதல் நடத்தி வன் செயலில் ஈடுபட்ட சம்பவத்தை–

அகரமாகக் கொண்டு, தமிழ் மக்கள் தங்களிடம் இருந்து பிரிக்க முடியாத உரிமைகளுக்காகச் சாத்வீக வழியில் நடத்தப்படும் போராட்டங்களை நசுக்கும் செயற்பாடுகளைப் பின்னிருந்து நடத்துவிக்கும் போக்குத் தொடர்கிறது.

அனைத்துலக மனித உரிமைகள் நாளில் நேற்று முன் தினம் திருகோணமலையில் நடத்தப்பட்ட சாத்வீகப் போராட்டத்தில் பங்குபற்றியவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அதன் ஓர் அங்கம் எனின் தப்பன்று.

தமிழ் மக்களிடம் இருந்து பிரிக்க முடியாத அவர்களின் அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளை மட்டும் அன்றி– மனித உரிமைகளையும் தட்டிப் பறித்து வரும் போக்கு மேலோங்கி வருகிறது.

பெரும்பான்மை இன அரசியல் தலைவர்கள், முன்னர் இவற்றுக்குத் தூபம் இட்டுத் தமது பதவிகளை தக்க வைத்தனர். இப்போதும் அதுவே கனகச்சித மாக அவர்களால், இனவாதிகள் ஊடாக ஒப்பேற்றப்படுகிறது.

இந்த நடத்தையைப் போக்குவதற்கு அல்லது தணிப்பதற்கேனும், பாவம் அனைத்துலகத்தால் கூட இயலாது என்பதனை பிரசித்தப்படுத்தும் ஒரு வகைக் குறியீடு என்று நேற்று முன்தினம் நடத்தப்பட்ட திருகோணமலைச் சம்பவத்தைக் கொள்ளலாம்.

மனித தர்மமும் நீதியும் இலங்கையில் செல்லாக் காசுகளாக மாற்றப்படுகின்றன என்பதனை உணர்ந்தும் அறிந்தும், அவற்றால் என்ன தான் ஆகப் போகிறது?

# அஸ்தமனத்தை நோக்கிய சோனியாவின் பயணம்

ராஜராஜன்



இந்தியாவில் இடம்பெற்ற ஐந்து மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களின் மத்தியில் ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் கட்சி படுதோல்வியைச் சந்தித்துள்ளது. இது காங்கிரஸ் கட்சியின் தோல்வி என்பதைவிட காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு ஏற்பட்ட தனிப்பட்ட தோல்வி என்று கூறுவதே பொருத்தமானது. ஏனென்றால் மத்தியில் ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் கட்சியை முற்று முழுதாக வழிநடத்திச் செல்பவர் சோனியாவேதான்.

அடுத்த ஆண்டு இந்திய நாடாளுமன்றத் தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில் இந்தத் தேர்தல் முடிவுகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை பூடகமாக உணர்த்தும் வகையிலும் குறித்த மாநில சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன.

இந்திய நாட்டின் பிரதமராக சீக்கிய இனத்தைச் சேர்ந்த பொருளாதார நிபுணரான மன்மோகன் சிங் பதவி வகிக்கின்றார். ஆனால் சோனியா காந்தியின் ஏவலை நிறைவேற்றும் ஒருவராக இவர் காணப்படுகின்றார். பொருளாதார நிபுணர், நேர்மையானவர், மென்மையானவர் என்ற பதங்கள் இவருக்குப் பெருமையை வழங்கிய போதிலும், துணிச்சலானவர், துணிச்சலான முடிவுகளை மேற்கொள்பவர் என இவர் ஒரு போதுமே பாராட்டப்படவில்லை. சோனியாவின் 'டம்மி' என இவரை அழைப்பதே சாலப் பொருத்தமுடையதாகும்.

இதனால்தான் தேர்தல் முடிவுகளின் தோல்விக்கு இவரை நோக்கி சுட்டு விரல் காட்டப்படவில்லை. சோனியா குடும்பத்தையே அது சுட்டி நிற்கின்றது.

இத்தாலியில் பிறந்த சோனியா ராஜீவ் காந்தியை மணந்ததால் இந்தியாவில் வசித்து வருகின்றார். நேரு குடும்பம் என்ற கௌரவம் அவருக்குண்டு. ஆனால் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பில் அவர் இலகுவில் அமர்ந்துவிட முடியாத வகையில் முட்டுக் கட்டைகள் போடப்பட்டுள்ளன. இதனால் பின்னால் இருந்து ஆட்சியை இயக்கும் கைங் கரியத்தில் அவர் ஈடுபட்டு வருகின்றார்.

சரளமாக ஹிந்தி மொழியில் பேசும் ஆற்றல் படைத்த சோனியா தம்மை ஓர் எளியவராகவே மக்கள் மத்தியில் காண்பித்து வருகின்றார். மேலும் இந்தியாவின் சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்களை அரவணைத்துச் செல்வது போன்றதொரு தோற்றத்தையும் இவர் கொண்டிருக்கின்றார். ஆனால் இவருக்குப் பகையாளியாக விளங்கும் பாரதிய ஜனதாக் கட்சி முற்று முழுதாக பெரும்பான்மை இந்துக்களின் வாக்குகளை நம்பியே களத்தில் இறங்கியுள்ளது. அதன் பிரதமர் வேட்பாளராக நியமிக்கப்பட்ட குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடியின் அலையில் சோனியா உட்பட காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் அடித்துச் செல்லப்படும் நிலையே தற்போது காணப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் தமிழ்மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களுக்கு சோனியா காந்தி நிச்சயம் பதில் கூறியே ஆக வேண்டும். தமது கணவரான முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் எனக் கூறப்பட்ட நிலையில் புலிகள் மீது அவர் மாறாத வஞ்சத்தைக் கொண்டிருந்தார். பாண்டவர் மனைவியாகிய திரௌபதி சபதம் இட்டுக் காத்திருந்தது போன்றதொரு நிலையிலேயே சோனியாவும் தருணத்துக்காகக் காத்திருந்தார். இலங்கையின் இறுதிப்போர் அவருக்கு வாய்ப்பாக அமைந்தது. இலங்கை கேட்பதையெல்லாம் உடனடியாக வழங்கியுதவுமாறு இந்திய மத்திய அரசுக்கு அவர் ஆணைகளை வழங்கினார். இலங்கை அரசுக்கு இது பெரும் வரப் பிரசாதமாக அமைந்த தால் முழு அளவில் போரை நடத்திச் செல்லக்கூடிய துணிவும், வலிமையும் அதற்குக் கிடைத்தன.

இந்தப் போரில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டமை ஒருபுறமிருக்க பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழர்கள் வரலாறு காணாத இழப்புக் களை எதிர்கொண்டமை எவராலும் தாங்கிக் கொள்ள முடியாத சோக நிகழ்வாகும்.

ஆனால் இந்திய அரசோ அல்லது சோனியா குடும்பமோ இவற்றை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. எமது நாட்டின் தென் பகுதியில் பாற்சோறு வழங்கப்பட்டு எவ்வாறு கொண்டாட்டங்கள் இடம்பெற்றனவோ அதைவிட ஒருபடி மேலாக இந்திய மத்திய ஆட்சியாளர்கள் குதூகலித்து மகிழ்ந்தனர்.

ராஜீவ் காந்தியின் கொலை சோனியாவையும் அவரது குடும்பத்தினரையும் எவ்வாறு மோசமாகப் பாதித்திருக்கும் என்பதை உணர முடிகின்றது. ஆனால் அகிம்சையைப் போதித்த காந்தி பிறந்த நாட்டில் இருந்து கொண்டு கொலைக்குக் கொலை, பழிக்குப் பழியென கொலைவெறியுடன் அலைந்து திரிந்தமைதான் மனதை நெருடுகின்றது.

சுவீடனில் இருந்து இந்திய இராணுவத்துக்கு பீரங்கிகளைக் கொள்வனவு செய்தபோது மறைந்த ராஜீவ் காந்தி ஊழல் புரிந்ததாக அவர் உயிருடன் இருக்கும் போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இதற்கு ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டன. இதில் சோனியாவின் உறவினர் ஒருவருக் கும் தொடர்பு இருந்ததாகப் பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. ஆனால் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்ததால் இவையாவும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இதே ராஜீவ் காந்திதான் இந்தியப் படையை இலங்கையில் தமிழர்களுக்கெதிராக ஏவிவிட்டு சுமார் 12 ஆயிரம் தமிழர்களின் சாவுக்குக் காரணமாக இருந்துள்ளார். பல தமிழ்ப் பெண்கள் இந்தியப் படையினரால் பாலியல் வன்முறைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். ஆனால் கொலைகளைப் புரிந்ததை விட வேறு எதையுமே சாதிக்க முடியாத நிலையில் படுதோல்வியைத் தாங்கிய வண்ணம் இந்தியப் படைகள் அவ மானத்தால் தலைகளைத் தொங்கப் போட்டவாறு தமது தாயகம் திரும்பின. சீன, பாகிஸ்தான் போரில் கொல்லப்பட்டவர்களிலும் பார்க்க அதிகளவு இந்திய இராணுவத்தினர் இலங்கையில் இடம் பெற்ற விடுதலைப் புலிகளுடனான போரில் கொல்லப்பட்டனர்.

இறுதிப் போரின்போது சோனியாவும் அவர் சார்ந்த மத்திய இந்திய அரசும் ஈழத்தமிழர்களை நன்றாகவே பழிதீர்த்துக் கொண்டதை அனைவரும் அறிவர். இங்கு அநியாயமாகக் கொல்லப் பட்ட அப்பாவித் தமிழர்களின் ஆவிகள் சோனியா குடும்பத்தை நிம்மதியாக இருக்கவிடாதென்ற எதிர்பார்ப்பு நிறையவே இருந்தது. அது நனவாகும் நிலை தற்போது உருவாகியுள்ளது.

இந்தியாவின் மத்திய ஆட்சியில் பாரதிய ஜனதாக் கட்சி அடுத்த ஆண்டு அமரப் போவது நிச்சயமாகிவிட்டது. இதன் பின்னர் சோனியா காந்தியின் சாதகமும் கணிக்கப்படப் போகின்றது.

ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம் எனப் பல புகார்கள் சோனியா மீது சுமத்தப்படுவதற்கான சாதக நிலைகள் நிறையவே உள்ளன. மேலும் இத்தாலியப் பெண்ணாகிய இவர் இந்திய நாட்டவரை ஆட்டிப் படைப்பதா என்ற குற்றச்சாட்டு வேறு இவர் மீது உள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக இறுதிப் போரின் போது தமிழர்கள் உகுத்த கண்ணீர் இவரைச் சூழ்ந்து வீழ்த்தப் போகின்றது.

போர்க்குற்ற விசாரணைகள் இடம் பெறும் போது சோனியாவும் குற்றவாளிகளில் ஒருவராக நிறுத்தப்படுவதற்கான சாத்தியங்களும் உள்ளன.

எனவே இனிவரும் காலம் சோனியாவின் அஸ்தமனத்தைக் கூறுவதாகவே அமையப் போகின்றது.

*

*இந்தப் போரில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டமை ஒருபுறமிருக்க பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழர்கள் வரலாறு காணாத இழப்புக் களை எதிர்கொண்டமை எவராலும் தாங்கிக் கொள்ள முடியாத சோக நிகழ்வாகும். ஆனால் இந்திய அரசோ அல்லது சோனியா குடும்பமோ இதனை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. எமது நாட்டின் தென் பகுதியில் பாற்சோறு வழங்கப்பட்டு எவ்வாறு கொண்டாட் டங்கள் இடம்பெற்றனவோ அதைவிட ஒரு படி மேலாக இந்திய மத்திய ஆட்சியாளர்கள் குதூகலித்து மகிழ்ந்தனர்.*

# அலுவலக அரசியலைக் கற்றுக் கொள்ளுங்கள்

சு.சாரங்கி



அரசியல்வாதிகள் மட்டும் தான் அரசியல் செய்ய வேண்டும் என்பதில்லை. அரசியல் என்பது எங்கும் உண்டு. அலுவலகத்தில் அனைத்துத் தரப்பு பணியாளர்களும் ஏதாவது ஒரு விதத்தில் அரசியலைச் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. ஏனெனில் அலுவலக அரசியல் என்பது ஒவ்வொருவரின் உத்தியோக வளர்ச்சியோடு கலந்திருக்கிறது. இருப்பினும் அந்த அரசியலை சாதுரியமாகக் கையாண்டால் எங்கும், எதிலும் வெற்றிதான்.

**நா காக்க**

நம்மிடம் இருந்தே வார்த்தைகளைப் பெற்று அதையே நம்மை நோக்கித் திருப்பிவிடும் அஸ்திரத்தை கற்றுக் கொண்ட வர்கள் அதிகம் பேர் உள்ளனர். எனவே யாரைப் பற்றி எங்கு எப்போது பேசுகிறோம் என்பது முக்கியம். வீடோ, அலுவலகமோ, யாராக இருந்தாலும் நாவை அடக்கிப் பேசுவது அவசியம். இல்லையெனில் நாம் பயன்படுத்திய வார்த்தைகள் நமக்கே எதிராகத் திரும்பிவிடும்

**வேண்டாம் விவாதம்**

உங்களுக்கு, நீங்கள் செய்வது அல்லது உங்கள் தரப்பில் சொல்வது மிகச் சரி என்று பட்டாலும், அதுவே உண்மையாக இருந்தாலும் கூட, கண்டிப்பாக நீங்கள் அனைத்துத் தரப்பில் அல்லது அனைவர் சொல்வதையும் கவனமாக கவனிப்பதன் மூலம், நீங்கள் சரியான இடத்தில் சரியான வார்த்தைகளை மட்டுமே பயன்படுத்துகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேவை இல்லாத வார்த்தை விவாதங்களைத் தவிர்த்து, அந்தப் பிரச்சினையை சரியான முறையில் வடிவமைத்து வரிசைப்படுத்தி கட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம், நீங்கள் உங்கள் கூடுதல் திறமையை அல்லது வழி காட்டித் தலைமை தாங்கும் தன்மையை மற்றவர்களுக்கு உணர்த்த முடியும்.

**சிறப்பான செயற்பாடு அவசியம்**

அலுவலக அரசியலுக்கு பதில் கொடுக்க, மிகச் சிறந்த வழி என்பது, உங்களால் எவ்வளவு சிறப்பாக செயற்பட முடியுமோ, அவ்வளவு சிறப்பாக செயற்படுவது மட்டுமே. உங்களை நீங்களே நல்ல முறையில் வழிநடத்தி துணிவாகவும், அதே நேரத்தில் உறுதியாகவும் செல்வது என்பது எதிரிகளையும் பொறாமைகளையும் வளர்ப்பதற்குப் பதிலாக, எளிதாக மற்றவர்களைக் கவர்ந்து, உங்கள் வழியைப் பின் பற்ற வைக்கும்.

அலுவலக அரசியல் எவ்வளவு மோசமாக அல்லது கீழ்த்தரமாக இருக்கப்போவது என்பது, நீங்கள் எவ்வளவு மோசமாக அல்லது கீழ்த்தரமாக அதில் கலந்து கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்துதான் அமைகிறது. ஆகவே, எப்போதும் மனதில் வைத்திருங்கள், எது வேண்டுமானாலும் வரலாம், போகலாம். ஆனால் கண்டிப்பாக நாம் என்ன செய்தோமோ, அது நமக்கே ஒரு நாள் திரும்பக் கிடைக்கும்.

**நிழல் விசயங்களில் கவனம்**

அலுவலக அரசியலில் மிகச் சவாலான விசயம் என்னவெனில் நம்மைப் பற்றிப் புகழ்ந்து கொண்டே நமக்கு எதிராகச் செயல்படுபவர்கள் அதிகம் இருப்பதுதான். இதுதான் பெரும் சவாலான விடயம். எனவே உங்களுடைய அனைத்து நடவடிக்கைகளும் சரியானதாக இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அப்பொழுதான் அலுவலகத்தில் நமக்கெதிராக செயல்படும் நிழல்களிடம் இருந்து தப்பிக்கமுடியும்.

**நேருக்கு நேராக சந்தியுங்கள்**

எப்போதும் அலுவலக அரசியலை நேரடியாக எவ்வித தயக்கமும் இல்லாமல் சந்திக்கப் பழகுங்கள், மேலும் அதைச் சரியான முறையில் பயன்

> அலுவலக அரசியலில் மிகச் சவாலான விசயம் என்னவெனில், நம்மைப் பற்றிப் புகழ்ந்து கொண்டே நமக்கு எதிராகச் செயல்படுபவர்கள் அதிகம் பேர் இருப்பதுதான்.

படுத்திஉங்கள்வழிநடத்தும்திறமையைக் காட்டும் சந்தர்ப்பமாக மாற்றிக்கொள்ளுங்கள், இது உங்கள் அலுவலக வேலையில் அடுத்த நிலைக்கு செல்ல அல்லது வளர்ச்சிக்கு உதவும்.

என்னதான் ஒருவர் அல்லது ஓர் அணி செய்வது சரி என்று உங்களுக்குப் பட்டாலும், நீங்கள் அவ்வளவு எளிதாக அதற்கு சாதகமாகி, எதிர் அணி செய்வது தவறென்றோ அல் லது அவர்கள் அதை உணர வேண் டும் என்று முறையிடவோ விவாதிக்கவோ வேண்டாம். உங்களை நீங்களே ஒரு நடுநிலைமையாக்கிக்கொள்வது நல்லது, சம்பந்தபட்ட இருவர் அல்லது இரு அணிகள் பேசிக் கொள்ளட்டும் அல்லது விவாதித்துக் கொள்ளட்டும்.

**நெருக்கடியில் உதவுங்கள்**

பிற துறையைச் சார்ந்தவர்கள் ஒரு வேலையை முடிக்க முடியாமல் திணறும் போது நமக்கென்ன என்று ஒதுங்கிப் போகாமல், உதவி செய்வது அவசியம். வேலை இடங்களில் நல்ல ஒரு நட்புறவை வளர்க்க இது மிகச் சிறந்த ஒரு வழிவகுப்பதோடு, உங்கள் உதவிக்கு நன்றியுடன் இருப்ப தோடு, அவர் மனதில் நல்ல ஓர் இடத்தை உங்களுக்காக ஒதுக்குவதற்கும் இது உதவும். சக அலுவலக நண்பர், பிரச்சனைகளைச் சந்திக்கும் போது, நீங்களாகவே முன் வந்து உங்களால் முடிந்த வரை உதவுவது என்பது, உங்களுக்கு அல்லது உங்கள் துறைக்கு சம்பந்தமில்லாதவராக இருந்தாலும், உங்களுக்குள் இருக்கும் ஓர் இடைவெளியை உடைத்து நெருக்கமாக்க வழிவகுக்கும்.

**வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி**

வருட ஊதிய உயர்வு நேரத்தில் ஒருவரை ஒருவர் முன் விட்டு பின் பேசுவது என்பது பொதுவாக நடக்கக் கூடிய ஒன்று தான் என்றாலும், சில நேரங்களில் உங்களுடன் அல்லது உங்களின் கீழ் வேலைபார்ப்பவர்களே உங்களுக்கு எதிராகத் திசை திரும்பிப் பல மனிதாபிமானமற்ற வதந்திகளைப் பரப்பி உங்கள் பெயரைக் கெடுக்க முயற்சிக்கலாம். அந்தச் சமயத்தில் நீங்கள் உறுதியோடு இருக்க வேண்டும். உங்கள் பொறுமையை இழக்காமல் அந்தப் பிரச்சனையின் சிக்கலைத் தீர்க்க வேண்டும்.

புதிய நல்ல எண்ணங்களோடு சிறந்த யோசனைகளையும் சொல்லக் கற்றுக் கொள்ளுங்கள். வதந்திகளைக் கையாளும்போது, குறிப்பாக மேல் அதிகாரிகளை பற்றி யாரிடமும் மோசமாகப் பேசுவதைத் தவிருங்கள். உங்களுக்கான சரியான நேரம் அமையும் போது, துணிவாக மற்றும் தெளிவாக உங்கள் மனதில் உள்ள சிந்தனைகளை நடக்கும் ஆலோசனையுடன் ஒப்பிட்டு, சரியான மற்றும் தேவையான கருத்துக்களைச் சொல்லுங்கள்.

எவ்வளவு சரியாகச் செய்கிறோம் என்பதை விட, அதை எந்த நேரத்தில் செய்கிறோம் என்பதுதான் மிக முக்கியம். எனவே குறைவாகப் பேசி அதிகம் கேட்கவேண்டும். எதையும், கேட்கவோ, சொல்லவோ மிகப் பொறுமையான தருணத்துக்காகக் காத்திருங்கள். அனைவரையும் சமமாகக் கருதுங்கள்

எல்லா இடங்களிலும் நேரங்களிலும் கனிவாக இருக்கப் பழகுங்கள், உங்களின் கீழ் வேலை பார்ப்பதால், அவர்களை மட்டமாகப் பார்க்கவோ மறைமுகமாக இம்சைப்படுத்தவோ வேண்டாம். எதுவுமே நிரந்தரமில்லாத இந்த உலகில், ஒரு நாள் உங்களின் கீழ் வேலை பார்த்தவர் கூட உங்களுக்கு அதிகாரியாக வரக் கூடும் இல்லையா? எனவே எப்போதும் மற்றவர்களைச் சமமாக அல்லது உங்களை விடச் சிறந்தவராக நினைப்பதே சாலச்சிறந்தது.

ஒரு போதும் வளைந்து கொடுக்காமல் எல்லாச் சூழ்நிலைகளிலும் மிகத் துல்லியமாக இருப்பது என்பது, உங்களுக்கு நீங்களே மறைமுக எதிரிகளை வளர்த்துக் கொள்வதாகும். உங்களுக்குத் தெரிந்ததைக் கற்றுக் கொடுங்கள், தெரியாததைக் கற்றுக் கொள்ளத் தயங்காதீர்கள்.

# சிறுவர், முதியோர் பற்றிய சில சிந்தனைச் சிதறல்கள்

பே.அமிர்தநாதன்

இன்றைய காலகட்டத்தில் செய்திப் பத்திரிகைகளை வாசித்தாலோ, ஒலி, ஒளி பண்பலைகள் செய்யும் வானொலிகளையோ, தொலைக்காட்சிகளையோ கேட்டாலும், பார்த்தாலும் கூட சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த செய்திகளையே கேட்க, வாசிக்க முடிகிறது. அத்தகைய தவறுகள் வெளிக் கொணரப்படுவதை நாமும் வரவேற்கவே செய்கிறோம். ஆனால் அதே வேளை முதியோர்களின் உணர்வுகள் மதிப்பளிக்கப்படாமை, அவர்களது கருத்துக்கள், அனுபவங்கள், அறிவுரைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாமை குறித்து மனது வெதும்புகிறோம். சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம் குறித்து குரலெழுப்ப எத்தனையோ மனிதநேய அமைப்புக்கள் செயற்படுகின்றன. ஆனால் தமது பிள்ளைகள் அவர்களூடாகத் தமது பேரன் பேர்த்திகள் என ஒரு பெரும் குடும்ப வட்டத்தையே உருவாக்கி வைத்துள்ள முதியவர்கள், அறுபது வயதைத் தாண்டி இயலாமையின்பாற்படும் வேளையில் அவர்கள் தாமாகவே ஒரு புறம் ஒதுங்கிக் கொள்கிறார்கள் என்றல்லாமல் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள் என்பதே கசப்பான உண்மை.

சுதந்திரமாகக் கருத்து வெளிப்படுத்தவோ, தமது மன ஆதங்கங்களை வெளிப்படுத்தவோ, இல்லையேல் தமது விருப்பப்படி ஏதாவதொன்றைச் செய் யவோ முடியாத விதத்தில் இந்த முதியோர்கள் தமது பிள்ளைகளால், தாம் தங்கியிருப்போரால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள்; மட்டுப்படுத்தப்படுகிறார்கள். இது ஒரு வகையில் செயற்பாட்டுச் சுதந்திரம் , கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் என்பவை மீது அடக்குமுறை பிரயோகிக்கப் படுமொன்றாகவே கருதத்தக்கது. இவர்களது விருப்பு வெறுப்புக்கள் அத்தனையும் கட்டுப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறது. அந்த இடத்தில் இவர்களது அத்தனை உரிமைகளும் மறுக்கப்பட்டு இவர்கள் தொடர்பான அத்தனை செயற்பாடுகளும் இவர்களது பிள்ளைகளால் தீர்மானிக்கப்படுகிறது. சிறுவர்களின் விருப்பமின்றி, அவர்களது ஒப்புதலின்றி அவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம் உட்பட பலதரப்பட்ட துன்புறுத்தல்களைப் பிரயோகிப்பது, அடிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவது சிறுவர் துஷ்பிரயோகத்துக்குள் அடங்குவதாகக் கொள்ளப்பட்டால், முதியோர்களது மன ஒப்புதலின்றி, அவர்களது விருப்புக்களுக்கு மாறாக அவர்களது வாழ்வியலில் குறுக்கீடுகள் செய்வதை முதியோர் துஷ்பிரயோகம் என்றல்லவா அடையாளப்படுத்த வேண்டும்.

சிறுவர் மீதான துஷ்பிரயோகமும், முதியோர் மீதான துஷ்பிரயோகமும் வேறுபட்டவை எனக் கொண்டால் ஐப்பசி மாதம் முதலாம் நாளை சிறுவர், முதியோர் தினம் என ஒன்றாகப் பிரகடனப்படுத்தியிருக்க வேண்டாமல்லவா? சிறுவர் தினம் எனப் பிரகடனப்படுத்தி பெரும் எடுப்பில் அதனைக் கொண்டாடுவதைக் காண்கிறோம். ஆனால் அந்த அளவுக்கு அதே நாளில் முதியோர்களின் உரிமைகள், தேவைகள் குறித்து அக்கறை காட்டவோ அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளிக்கவோ தவறிவிடுகிறோம்.

ஏன் இந்தப் பாரபட்சம்? முதியோர்கள், இளைஞர்களாகி, குடும்பஸ்தர்களாகி எத்தனையோ அறிவாளிகளையும், புத்திசாலிகளையும் ஏன் நீதிவான்களைக் கூட உலகுக்குப் பெற்றுக்கொடுத்து விட்டு, வயதாகிய நிலையில் மூலையில் முடங்கிக் கிடக்க வைப்பதேன்? இவர்களுக்குள்ள அறிவையும் அனுபவங்களையும் யாரால் அறிந்து கொள்ள முடியும்? இவர்களையும் அவர்களது கடந்தகால வாழ்க்கையையும் தற்போதைய சந்ததியினரின் வாழ்க்கையையும் சீர்தூக்கிப் பாருங்கள். யாருக்காவது பதில் தெரிந்தால் முன்வந்து துணிந்து சொல்லுங்கள். அன்றவர்கள் பன்மடங்காகப் பிள்ளைகளைப் பெற்றார்கள்; வளர்த்தார்கள்; படிப்பித்தார்கள்; கல்வி மான்களாகவும் ஆக்கினார்கள். அது அந்தக் காலத்துப் பிரச்சினை என்று ஒதுக்கி வைத்து விட வேண்டாம். இன்றைய சந்ததியினர் இரண்டு குழந்தைகளைப் பெற்றுவிட்டு வாழ்க்கைச் சிரமம் குறித்துப் புலம்புகின்றனர். இதற்கு தற்காலத்துப் பொருளாதாரச் சீர்கேடும் சிறிது காரணமாயிருந்தாலும் முதியோர்களுக்குள்ள அறிவும் அனுபவமும் யாருக்கும் இல்லை என்றுதான் கூறமுடிகின்றது. அப்படியானால் ஏன்தான் இந்த முதியோர்கள் பிள்ளைகளின் வீட்டுச் சிறைகளில் அடைக்கப்பட வேண்டும். இவர்களுக்காக சில அரச, பொது இல்லங்கள் பராமரிப்புக்காக இயங்கினாலும், இவர்களின் விருப்பங்கள், தேவைகள் எல்லாம் அங்கு பூரணமாகக் கிட்டுவதில்லை. ஆனால் இவர்களை வீட்டுச் சிறைகளிலிருந்து கொஞ்ச நேரமாவது பிணையில் எடுத்து (அதாவது, சிறைச்சாலையில் வோக்கிங்ரைம் மாதிரி) வெளியில் வைத்து

> சிறுவர் மீதான துஷ்பிரயோகமும், முதியோர் மீதான துஷ்பிரயோகமும் வேறுபட்டவை எனக் கொண்டால் ஐப்பசி மாதம் முதலாம் நாளை சிறு வர், முதியோர் தினம் என ஒன்றாகப் பிரகடனப்படுத்தியிருக்க வேண்டா மல்லவா? சிறுவர் தினம் எனப் பிரகடனப்படுத்தி பெரும் எடுப்பில் அத னைக் கொண்டாடுவதைக் காண்கிறோம்.

சமூகமயப்படுத்திச் சந்தோஷப்படுத்த யார் முன் வருவது? எவரும் முன் வராதவிடத்து முதியோர் துஷ்பிரயோகத்தை விட சிறுவர் துஷ்பிரயோகம் பெரிதாக ஒன்றும் பேரிடம் பிடித்துத் தாக்கம் புரியப் போவதில்லை. அகில உலகமும் ஒருமுறை தத்தம் கண்களைத் திறக்கட்டும். அதில் சிறுவர் துஷ்பிரயோகமா? முதியோர் துஷ்பிரயோகமா அதிக வலியைத் தருவது என்று அறிந்து முதியோர் பக்கம் தம் பார்வையை ஒரு கணம் திருப்பட்டும்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் ஏற்படும்.

**இடபம்:** மனச்சாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள்.

**மிதுனம்:** உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்** : வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**சிங்கம்:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**கன்னி:** புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**துலாம்:** வெளிவட்டாரத்தில் கௌரவம் கிட்டும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**தனுசு:** இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். பிரபலங்களின் நட்புக் கிட்டும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.

**மகரம்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர் களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**மீனம்:** வேலைச்சுமையால் பதற்றமடைவீர்கள். யாரும் உங்களைப் புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படு வீர்கள். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விடயங்களில் தலையிட வேண்டாம்.

# நாம் ஏன் ஒத்துப் போவதில்லை?



விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

"நாம் ஒருவரையொருவர் வசை பாடுவதை நிறுத்த வேண்டும்" என்று இப்பொழுது பேசி முடித்த நாவன்மை படைத்த பேச்சாளர் கூறியதைக் கேட்டீர்கள். நமக்குள் இவ்வளவு மாறுபாடு இருப்பதைப் பற்றி அவர் வருத்தப்பட்டார். இந்த மாறுபாடுகளுக்குக் காரணம் என்ன என்பதை விளக்க, ஒரு கதை சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன்.

தவளை ஒன்று, ஒரு கிணற்றில், பல நாள்களாக வசித்து வந்தது. அந்தக் கிணற்றிலேயே பிறந்து, அங்கேயே வளர்ந்தது அந்தச் சின்னஞ் சிறிய தவளை. அந்தத் தவளை கண்களை இழந்துவிட்டதா, இல்லையா என்று சொல்வதற்கு நல்ல வேளையாக, அங்கே பரிணாம வாதிகள் யாவும் இல்லை. ஆனால் எமது கதையைப் பொறுத்தவரையில், அதற்குக் கண்கள் இருந்தன என்றே வைத்துக் கொள்வோம். அத் தவளை நாள் தோறும் நீரிலிருந்த புழு பூச்சிகளையும், கிருமிகளையும் வெகு சுறுசுறுப்பாக அகற்றிச் சுத்தப்படுத்தியது. அந்தச் சுறுசுறுப்பு, தற்காலக் கிருமி ஆராய்ச்சியாளர்களுக்கு இருந்தால் அது அவர்களுக்குப் பெருமை தரும் விடயமாகும். அவ்வாறே வாழ்ந்ததால் அந்தத் தவளை சிறிது பருத்தும் விட்டது.

ஒரு நாள் கடலில் வாழ்ந்து வந்த தவளையொன்று அங்கு வந்து, அந்தக் கிணற்றில் விழுந்து விட்டது.

"நீ எங்கிருந்து வந்திருக்கிறாய்?"

"கடலிலிருந்து"

"கடலா? அது எவ்வளவு பெரியது? எனது கிணற்றளவு பெரிதாயிருக்குமா?" என்று கேட்டு, ஒரு பக்கத்திலிருந்து, எதிர்ப்பக்கத்துக்குத் தாவிக் குதித்தது கிணற்றுத் தவளை.

"நண்பா! இந்தச் சின்னக் கிணற்றோடு எப்படிக் கடலை ஒப்பிட முடியும்?" என்று கேட்டது கடல் தவளை.

கிணற்றுத் தவளை மறுபடியும் ஒரு தாண்டுத் தாண்டி, "நீ சொல்லு! கடல் இவ்வளவு பெரிதாயிருக்குமா?" என்று கேட்டது.

"சேச்சே! என்ன முட்டாள்தனம்! கடலை உன் கிணற்றோடு ஒப்பிடுவதா?"

"சரி, சரி, என் கிணற்றைவிட எதுவும் பெரிதாக இருக்க முடியாது. கண்டிப்பாக, இதைவிடப் பெரிதாக இருக்க முடியாது. இவன் சொல்வது அப்பட்டமான பொய்; இவனை வெளியே விரட்டி விட வேண்டும்" என்று தீர்மானித்தது அந்தக் கிணற்றுத் தவளை. இத்தனை காலமாக இருந்துள்ள கஷ்டம் இதுதான்.

நான் ஓர் இந்து. நான் என் சிறிய கிணற்றுக்குள் இருந்து கொண்டு, உலகம் முழுவதும் என் சிறு கிணறுதான் என்று நினைக்கிறேன். கிறிஸ்தவன் தன் சமயமாகிய சிறு கிணற்றுக்குள் உட்கார்ந்து கொண்டு, உலகம் முழுவதும் தன் கிணறுதான் என்று நினைக்கிறான். அவ்வாறே முகம்மதியனும் தன் சமயமாகிய சிறு கிணற்றில் உட்கார்ந்து கொண்டு, அது தான் முழு உலகம் என்று நினைக்கிறான். நம்முடைய இந்தச் சிறிய உலகின் வேலிகளைத் தகர்த்தெறிய, அமெரிக்கர்களாகிய நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பெரிய முயற்சிக்காக, நான் உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். வருங் காலத்தில், உங்கள் விருப்பம் நிறைவேற இறைவன் அருள் புரிவான் என்று நம்புகிறேன்.

# செவ்வாய்க் கிரகத்தில் வறண்ட ஏரி

'மைக்ரோப்'கள் எனப்படும் நுண்ணுயிர்கள் ஒரு வேளை செவ்வாய்க் கிரகத்தில் வாழ்ந்திருந்தால் அவை வாழ்வதற்கு வேண்டிய சூழ்நிலையைத் தந்திருக்கக் கூடிய ஒரு வறண்ட ஏரியை செவ்வாய்க் கிரகத்தில் தற்போது ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வரும் நாசா நிறுவனத்தின் 'கியூரியோசிட்டி உலாவி' அனுப்பிய புகைப்படங்களும் தகவல்களும் காட்டுகின்றன.


'கிமோலித்தோ ஓட்டோட்ரோப்ஸ்' என்ற இந்த நுண்ணுயிர்கள் வாழ வெளிச்சம் தேவைப்பட்டிருக்காது என்று கூறும் விஞ்ஞானிகள், அவை பாறைகளையும் கனிமங்களையும் உடைத்துத் தாம் வாழத் தேவையான சக்தியைப் பெற்றிருக்கும் என்று கூறுகின்றனர்.

பூமியில் இதுபோன்ற நுண்ணுயிர்கள் பூமிக்கடியிலும் குகைகளிலும் கடல்களின் ஆழ்பரப்பிலும் காணப்படுகின்றன.

'கேல் க்ரேட்டர்' எனப்படும் இந்தப் பண்டைய ஏரி பூமியில் இருந்திருக்கக் கூடியதைப் போன்ற ஓர் ஏரிதான் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

செவ்வாய்க் கிரகத்தின் பாறைகளை பூமிக்குக் கொண்டு வந்து ஆராயாமலேயே முதன் முறையாக அங்கு வைத்தே அவற்றின் வயதையும் அவர்கள் கணித்துள்ளனர்.

இப்போது கண்டுபிடிக்கப்பட்ட பாறைகளின் வயது நான்கு பில்லியன் ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும் என்று அவர்கள் கூறுகின்றார்கள்.



## நாளை

கார்த்திகை-27 வெள்ளிக்கிழமை

13.12.2013

திதி: ஏகாதசி மு.ப.11.19 வரை

நட்சத்திரம்: அச்சுவினி

மு.இ.07.04 வரை

சுபநேரம்:

06.20- 07.50 வரை

இராகுகாலம்:10.50 -12.20 வரை

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 3 | | | 4 | 2 | | |
| 4 | | 5 | | | | 8 | | 7 |
| 2 | | | | 1 | | | 5 | 6 |
| 5 | | 8 | | 3 | | | | |
| 3 | 6 | | 9 | | 7 | | 8 | 2 |
| | | | | 4 | | 5 | | 3 |
| 1 | 4 | | | 6 | | | | 5 |
| 9 | | 2 | | | | 6 | | 8 |
| | | 6 | 3 | | | 9 | | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டாங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 6 | 3 | 8 | 4 | 9 | 5 | 2 |
| 8 | 5 | 2 | 7 | 9 | 6 | 1 | 4 | 3 |
| 9 | 3 | 4 | 2 | 1 | 5 | 8 | 6 | 7 |
| 7 | 9 | 5 | 4 | 2 | 1 | 3 | 8 | 6 |
| 3 | 6 | 1 | 8 | 7 | 9 | 5 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 6 | 5 | 3 | 7 | 9 | 1 |
| 6 | 1 | 9 | 5 | 4 | 7 | 2 | 3 | 8 |
| 5 | 8 | 3 | 1 | 6 | 2 | 4 | 7 | 9 |
| 2 | 4 | 7 | 9 | 3 | 8 | 6 | 1 | 5 |


*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible] நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் [illegible] தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன [illegible]காலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

facebook




முகப்புத்தகம் தனி மனிதனது திறமைகளுக்குச் சிறந்த அரங்காகத் திகழ்கின்றது.




# நன்மை தரும் முகப்புத்தக பாவனை

நன்மையும், தீமையும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. எந்த ஒரு விடயமாக இருப்பினும் ஆழமாக போதை நிலைக்குச் சென்றுவிட்டால் தீமையின் முகமே திருமுகமாகிவிடும். நன்மை, தீமை என்பன ஒரு தனிப்பட்டவரைச் சார்ந்தது. எவ்வாறிருப்பினும், எந்தவொரு சாதனமும் நன்மை கருதியே ஆக்கப்படுகிறது. அவ்வாறு உருவாக்கப்பட்ட ஒன்றே முகப் புத்தகம் ஆகும்.

விஞ்ஞானத்தின் சிரேஷ்ட குழந்தைகளான நவீன தொடர்பாடல் சாதனங்களின் வருகையால், தபால் சேவையின் தேவை அருகி வந்ததன் விளைவாக பேனா நண்பர்கள் விட்டுச் சென்ற இடத்தை இன்றைய முகப்புத்தக நண்பர்கள் தொட்டுத் தொடர்கின்றனர். எமது சமூக சுகாதாரத்தை மேம்படுத்தவும், பிற இடங்களின் கலாசாரத்தை அறிந்து கொள்ளவும், இந்த முகப்புத்தகம் பெரிதும் உறுதுணையாகவுள்ளது. நாட்டினுள், சிறு கூட்டினுள் என்று கிணற்றுத் தவளைகளாக இருந்த எம்மை இப்படியும் ஓர் உலகம் உள்ளது என்று காட்டி துருவ உச்சிக்கு எடுத்து வந்துள்ளது இந்த முகப்புத்தகம். வெவ்வேறு நாட்டவர்களின் தொடர்பினால் எமது அறிவு பரந்து விரிந்து அனுபவம் என்ற உளி கொண்டு செதுக்கப்பட்ட அழகிய சிற்பமாக மாறுகிறது.

இணைய மாளிகையின் ஒரு வாயிலாகப் பரிணமித்த முகப்புத்தகம், பிறரது நட்பைப் பெற உதவுவது மட்டுமன்றி, பிரிந்த பல சொந்தங்கள் மீண்டும் இணைய வழிவகுக்கும் ஓர் ஆழ்கடல் முத்து என்றால் அது மிகையாகாது. அண்மையில் இலங்கைத் தாய் ஒருவர் தன் மூன்று பிள்ளைகளுடனும் 17 ஆண்டுகளின் பின் இணைந்து மகிழ்ந்த உருக்கமான சம்பவத்துக்கு 'அட்ரா' என்ற சமூக சேவை நிறுவனத்தால் இணையத்தில் இடப்பட்ட புகைப்படங்களே முக்கிய பின்னணியாக அமைந்தது என்பது யாவரும் அறிந்த ஒன்று.

முகப்புத்தகம் தனிமனிதனது திறமைகளுக்குச் சிறந்த அரங்காகத் திகழ்கின்றது. இதனால் எமது திறன்களை வளர்க்கவும் உலகளாவிய ரீதியில் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பு அமைகிறது. சிறந்த தகவல் பரிமாற்ற ஊடகமாகவும் முகப் புத்தகம் தனது பக்கங்களை விரிக்கின்றது என்றால் அதில் வியப்பில்லை.

உலக அரங்கில் அரங்கேறிடும் பல்வேறு அநீதிகளை அறிவதன் மூலம், எமது தற்காப்பை உறுதி செய்து கொள்ள முகப் புத்தகம் உதவுகின்றது. உண்மையான முகங்களுடன் முகப்புத்தகப் பக்கங்களை அலங்கரிப்பதன் மூலம் வாழ்வில் பல வசந்தங்களைப் பெறலாம் என்பது திண்ணம்.

*தமிழ்த் தோழி, இரா.ஜெயறா*

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

முகப்புத்தகப் (பேஸ்புக்) பாவனை

**நன்மையா?**
**தீமையா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## பார் பூத்த தமிழ்

தாயுடன் தொடங்கிய பாசம்- என்
தமிழோடும் தொடர்ந்திட வேண்டும்

வீரியம் பொங்கிய வேகம் - என் தமிழை
விண்ணோடு சேர்த்திட வேண்டும்

உலகம் முழுதும் வலமாய் - என்
தமிழே நடந்திட வேண்டும்

என் தமிழின் செம்மை கண்டு- இந்த
உலகே வெறித்திட வேண்டும்

வெறிப்பின் திளைப்பில் மக்கள்- தம்
மொழிகளை மறந்திட வேண்டும்

பரப்புரை இன்றியே- என் தமிழை
உலகெல்லாம் பரப்பிடும் வழி செய்திடுவேன்




ப.ஸோபி, வவுனியா

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.....................................................

முகவரி :- ...................................................

..............................................................

.......................... ..........................
திகதி ஸ்சுயொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## உலகம் சிரிக்கிறது......

உலகம் சிரிக்கிறது
உன்னைப் பார்த்து - மானிடா
உலகம் சிரிக்கிறது
உன்னைப் பார்த்து
பாரினிலே நீ பிறந்துவிட்டபோதும்
பகுத்தறிவுள்ள மனிதனாக
பண்புடன் நடப்பாயென்று
பார்த்திருந்தது உலகு
பருவத்தே பயிர் செய்து
பல விந்தைகள்தான் புரிந்து
பார்க்க முடியாத அளவுக்கு
சாதனைகள் புரிந்தபோதும்
பண்பற்றவனாய் நீ
வாழ்வதனால்
பாரினிலே கொலை, கொள்ளையோடு
அநியாயங்களும் அட்டூழியங்களும்
ஆல்போல் தழைத்து - இன்று
அறுகுபோல் வேரூன்றுகிறன
குற்றமில்லா வேதமகன்
உனக்காக பிறந்து
உனக்காகவே மரித்தாரே
அதன் பின்னும் நீ
திருந்தவில்லை இன்றும் கூட
ஆதலால் உலகம் சிரிக்கிறது
உன்னைப் பார்த்து
உன்னழிவை நீயே
தேடுவதால்....

*நிஜாத், அல்வாய்.*

## வாழ்க்கைப் பாதை



இளமையில் நான்
சிறகு உடைந்த பறவையாக
அடைபட்டு
கற்கும் வயதில் காதலை
அறிந்தேன்
எத்தனை
இரவில் தனிமையில்
யோசித்திருப்பேன்
அப்படி இருந்தும்
விழிகள் கண்ணீர் வடிக்கின்றன
கற்பனை ஆசை வெள்ளத்தில்
தவழ்கின்றது
இருட்டறையில்
அறிவற்று தள்ளாடுகிறேன்
என் இரு விழிகள் கண்ணீர் வடிக்கும்
காலம் இதுவா?
உயிரின் உணர்ச்சியையும்
அன்பின் அரவணைப்பையும்
நீ அறிவாயா.....!

*கு.மதுர்சிகா, புத்தூர், மேற்கு மருதடி.*

## சுஜீவா வைத்தியசாலை

சுஜீவா தாய்மைப் பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை

### அறிவித்தல்

எதிர்வரும் 15.12.2013 ஞாயிற்றுக்கிழமை மட்டும்

காலை 8.00 மணி முதல் மு.ப. 10.30 மணி வரையும்

மாலை 4.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையும்

வைத்தியசாலை திறக்கப்பட்டிருக்கும். மீண்டும் வழமை போல் இயங்கும்.

வழமையான சேவை நேரம்

காலை 7.30 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை

மாலை 3.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

வெள்ளிக்கிழமை விடுமுறையாகும்.

(42520) (12.6)

சுதேச வைத்தியர் ஜெ.ஜெயபாலன்,

சுஜீவா வைத்தியசாலை, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பணம்.0775594147



## கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி

## ஏல விற்பனை அறிவித்தல்

பாவித்த பொருள்கள் வெற்றுத்தார் பரல்கள் விற்பனை

விற்பனைத் திகதி – 18.12.2013

கரைச்சி பிரதேச சபையில் 18.12.2013ஆம் திகதி நடைபெறவுள்ள ஏல விற்பனையின் போது பின்வரும் பொருள்களை கொள்வனவு செய்ய விரும்புவோர்கள் கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் மு.ப 10.00 மணிக்கு வருகை தந்து ஏலப் பொருள்களை கொள்வனவு செய்யலாம். அத்துடன் பி.ப 3.00 மணிக்கு முன்னர் அதற்குரிய கொடுப்பனவினைச் சபைக்குச் செலுத்தி தமது ஏலப் பொருள்களை குறித்த திகதியிலேயே வெளியேற்றல் வேண்டும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1. வெற்றுத் தார் பரல்கள்
2. பழைய ஓடுகள்
3. விளம்பரப் பலகைகள்
4. விறகுகள்
5. பாவித்த வளை மரங்கள், சிலாகைகள்

நா.வை.குகராசா,
தவிசாளர், கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(சி/14356) (7.6)


# கும்பாபிஷேகம்

துன்னாலை வடக்கு திருவருள் மிகு வீட்டம்மன் (புவனேஸ்வரி அம்மன்) ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 7.49 மணி முதல் 8.43 மணி வரையான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

புனருத்தாரணம் செய்யப்பட்ட விநாயகர், முருகப் பெருமான் உள்ளிட்ட வீட்டம்மன் ஆகியவற்றுக்குமான கும்பாபிஷேகத்தை நயினை நாகபூசணி அம்மன் ஆலய குருவான சிவப்பிரம்ம ஸ்ரீ கைலாசநாத வாமதேவக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பார். கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் நேற்று புதன்கிழமை ஆரம்பமாகின. (வ-8)

♦♦♦

புலோலி மத்தி, தொப்பிளாவத்தை நரசிங்கர் வைரவர் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 7.49 மணி முதல் 8.43 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது. கடந்த 30 ஆண்டு கால இடைவெளிக்குப் பின்னர் இக் கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது. (வ-8)

### திருவெம்பா

### கார்த்திகைப் பூசை

வரலாற்றுப் புகழ் மிக்க மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலயத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை திருவெம்பாவை கார்த்திகைப் பூசை விசேடமாக இடம்பெறவுள்ளது. காலை 6.30 மணிக்கு திருப்பள்ளியெழுச்சியுடன் ஆரம்பமாகி 7.15 மணிக்கு உஷக் கால பூசையும் 7.45மணிக்குதிருவெம்பாவைப் பூசையும் இடம்பெறும். (வ-86)


## வடஇலங்கை சுதேச வைத்தியசபை

### அறிவித்தல்

1. வடஇலங்கை சுதேச வைத்திய சபை பணிப்பாளர் சபைக் கூட்டம்

காலம் : 15.12.2013 ஞாயிறு மு.ப. 11.00 மணி
இடம் : சபை மண்டபம், 1883, மானிப்பாய் வீதி, (வைத்தீஸ்வரா சந்தி) யாழ்ப்பாணம்.
விடயம் : சுதேச மருத்துவம், லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி.

2. லங்கா சித்த ஆயுள்வேதக்கல்லூரி அபிவிருத்திக்குழு பாடத்திட்டக் குழு உறுப்பினர்களுக்கு கூட்டம்

காலம் : 15.12.2013 ஞாயிறு மதியம் 12.00 மணி
இடம் : சபை மண்டபம்
விடயம் : லங்காசித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி அபிவிருத்தி

3. சுதேச வைத்தியர்களுக்கான கலந்துரையாடல் (BSMS,BAMS, DAM, DAMS, LIM, DAC பரம்பரை சுதேச மருத்துவர்கள்)

காலம் : 15.12.2013 ஞாயிறு பி.ப 2.00 மணி
இடம் : சபை மண்டபம்
விடயம் : சுதேச வைத்தியர்கள், சுதேச வைத்தியசாலைகள் எதிர் நோக்கும் சகல பிரச்சினைகளையும் ஆராய்தல்.

ஒவ்வொரு சுதேச வைத்தியர்களினதும் கௌரவத்தை பாதுகாக்க தேவை யான சட்ட உதவி புதிய சட்ட வரைவில் சேர்க்க வேண்டிய வட மாகாண சுதேச வைத்தியர்கள் கருத்தும் பிரேரணைகளும்.

சுதேச வைத்தியர்களுக்குத் தேவையான அரச உதவிகள் நடவடிக்கைக்குழு அமைத்தல்.

மேலே குறிப்பிட்டவாறு கௌரவ உறுப்பினர்களும், கௌரவ சுதேச வைத்தியர்களும் தவறாது குறிப்பிடப்பட்ட நேரத்துக்கு கலந்து கொள்ளுமாறும் சுதேச வைத்திய அமைச்சுக்கும், சம்பந்தப்பட்டவர்களுக்கும் அறிக்கை சமர்ப்பிக்க வசதியாக ஆவணங்களை (முறைப்பாடுகள், கோரிக்கைகள், வெளியாகிய ஊடக செய்திகள் கடிதங்கள்) தந்துதவும்படி வேண்டுகின்றேன்.

205, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(42521) (10.6)

சுதேச மருத்துவர் ஜெ.ஜெயபலன்
(செயலாளர்),
வடஇலங்கை சுதேச வைத்திய சபை.



BRITISH COUNCIL

DMI is the IELTS Registration center for the BRITISH COUNCIL

DMI COMPUTER EDUCATION

Next Exam in :
Jaffna : 9 th January
Colombo :18 th January
:25 th January

IELTS

☒ Latest training materials.
☒ Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
☒ Skills development in all four categories.

British Council - IELTS பரீட்சைக்கு நீங்கள் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் தோற்ற விரும்பின் பதிவுகளை DMI இன் எந்தகிளையிலும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கிலமொழி மூலம் பட்டக்கல்வியை பூர்த்தி செய்தவர்களுக்கு 50 % கட்டணக்கழிவு

(C/14358)

International English for Speakers of other Language (ESOL) Diploma

City & Guilds Approved Center

A1, A2, B1 B2

திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.

Spoken English veta

ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி

Diploma in English

A/L பரீட்சையின் பின் பல்கலைக்கழகம் செல்ல உள்ளோருக்கு விசேடபிரிவுகள்

ஆங்கிலம் பேசுவதற்கு உத்தரவாதம்

DMI COMPUTER EDUCATION

No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970



SONY SETவிற்பனைக்கு

MODEL NO - MCH - GN 1300D
(DVD, ACD, MP3, PEN DRIVE)உடன்
விற்பனைக்குண்டு
விலை 75000/=

(42522) (12.6) தொடர்பு: 077 491 4196



உதயன் விளம்பர தொடர்புகளுக்கு: 021 5671111
advt@uthayan.com



வீடு விற்பனைக்கு

நவாலி வடக்கு புலவர் வீதியில் உள்ள நிலப் பரப்பு 2ம் வீடும் கிணறும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077514 1162 (42518)(7.6)



# 25 வருட வெள்ளி விழா

## 12.12.2013



கட்டடக் கலையில்
எட்டிட முடியா-புது
யுக்திகள் நாம் கண்டோம்







எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உதவி நல்கிய பொறியியலாளர்கள், விநியோகஸ்தர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், ஒப்பந்தகாரர்கள், தொழில்தருநர்கள் மற்றும் சக நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.





(41094)

ரூலின்ஸ்

பொறியியலாளர்களும் நிர்மாணிகளும்
114/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-2225534
தொலைநகல் : 021-2225534
மின்னஞ்சல்: ruhlins@yahoo.com

“ஒரே விலை சட்ட நிறை
தவறா நிலை எங்கள் மறை”

RUHLINS

**இன்றைய உலகிலே காணப்படுகின்ற எல்லா வித சௌகரியங்களினாலும் பயன் பெறுவது யார்?**

இதற்கு விடை மனிதனேயாகும். ஒவ்வொருவனும் தன்னை 'நான்' என்றே வருணிக்கின்றான். 'நான்' என்பது இல்லாது போனால் உற்பத்தியாளனோ, நுகர்வோனோ இல்லாது போய்விடுவர். அதனால் உற்பத்தியும் தேவையில்லாததாகி விடும்.
ஆகவே எல்லாம் இந்த 'நான்' என்பதை மையமாகக் கொண்டுள்ளது என்பதனால் இந்த உலகில் உள்ள எல்லாச் செல்வங்களிலும் பெறுமதி வாய்ந்தது மனிதனேயாகும்.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

**சாயி சிந்தனை**

# இதய அஞ்சலி



மாவை கொல்லங்கலட்டி
வீரகத்தி விநாயகர் ஆலய
ஆதீன கர்த்தாவும், அறங்காவலருமான
**சுப்பிரமணியசாமி ஐயா**
**சிவஷண்முகானந்தக் குருக்கள்**

அவர்கள் 10.12.2013 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
(42524)(7.6)

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
இராசா சுந்தரராஜன்

# பிறந்தநாள் நினைவு



**மாணிக்கவாசகபிள்ளை கனகசபை**

"கூட்டுறவே நாட்டுயர்வு" எனும்
கூட்டுறவின் பொன்மொழிக்கேற்ப
கூடி வாழ்ந்த கூட்டுறவாளர்
கூட்டுறவு உதவி ஆணையாளர்
கனகசபை அவர்கள் புகழ் ஓங்குக.

இன்று (12.12.2013) வியாழக்கிழமை
அவர் பிறந்த நாளில் அவர் சேவைகளை மறவாத
கூட்டுறவாளர்களும்,
அவர் குடும்பத்தினரும்.
(41000) (7.8.3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி
**பூரணம் மாணிக்கம்**



தோற்றம் 27.01.1927 — மறைவு 13.11.2013

கடந்த 2013.11.13 புதன்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த மற்றும் அனுதாபங்கள் ஆறுதல் தெரிவித்த தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்த மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (2013.12.12) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், நாளை (2013.12.13)வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

முதற்தெரு,
கச்சாய் வீதி, கொடிகாமம்.
குடும்பத்தினர்.

# கலாபூஷண விருதுக்கு தெரிவானோர் விவரம்

இந்து சமய கலாசார அலு வல் கள் திணைக்களத்தினால் வரு டந்தோறும் கலை இலக்கிய கலைஞர்களுக்கு வழங்கப்ப டும் விருதுய்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் வழங் கப்படவுள்ளது.
இலங்கையிலுள்ள கலை, இலக் கியம் சார்ந்த கலைஞர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த விருதுக்காக தெரிவு செய் யப்பட்டுவரும் நிலையில் இந்த வருடம் 70 பேர் தெரிவு செய் யப்பட்டுள்ளனர். அவர்களின் ஒரு தொகுதியினரின் பெயர் விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தன. விருது பெறும் ஏனையோரின் விவரம் வருமாறு:-

**கொழும்பு மாவட்டம்**
சோமாஸ்கந்தசர்மா நடேச சர்மா (ஊடகத்துறை), கிறகரி பஞ்சரெத்தினம் வேதநாயகம் (நாடகம்), சுப்பிரமணியம் கனக ரெத்தினம் (இலக்கியத்துறை, சமய சொற்பொழிவாளர்), திரு மதி தர்மகுலதேவி சிதம்பர நாதன் (பரத நாட்டியம்), பொர வியாபிள்ளை புஷ்பராஜு (இலக் கிய ஊடகத்துறை), சின்னத் தம்பி கந்தையா (நாடகத்துறை).
**மட்டக்களப்பு மாவட்டம்**
கந்தப்பர் கணேசானந்தம் (நாட கம்), காசுபதி நடராசா (இலக் கியம்), ஆறுமுகம் தங்கராசா (இலக்கியம்), மாசிலாமணி திருநாவுக்கரசு (இலக்கியம்), கணபதிப்பிள்ளை சபாரெத் தினம் (பல்துறை), குருனாத பிள்ளை பொன்னம்பலம் (நாட் டுக்கூத்து), திருமதி வத்சலா தேவி சங்கரநாராயணன் (இசைத்துறை).
**திருகோணமலை மாவட்டம்**
சின்னத்துரை நடராஜா துரை ராஜா (இலக் கியம்), பேரம்பலம் கனகரத்தினம் (இலக்கியம், மெல்லிசை), சிதம்பரப்பிள்ளை நவரத்தினம் (இலக்கியம்), தேவசகாயம் சேவியர் (இலக் கியம்) திருமதி கத்தரி வயலற் ஆறுமுகம் சந்திரசேகரம் (இலக் கியம்).
**அம்பாறை மாவட்டம்**
சூசைப்பிள்ளை ஜோன்ராஜன் (ஊடகத்துறை), தம்பிமுத்து மகேந்திரா (புராணபடலம்), பொன்னையா ஏகாம்பரம் (இலக்கியம்), கந்தையா லோக நாதன் குருக்கள் (இலக்கியம்).
**புத்தளம் மாவட்டம்**
பெரியமுத்து வைரன் ஐயம் பெருமாள் (இசைத் துறை).
**கிளிநொச்சி மாவட்டம்**
முருகேசு செல்லத்துரை (நாட் டுக்கூத்து), வல்லிபுரம் ஏழு மலைப்பிள்ளை (நாடகம், சினிமா).
**கேகாலை மாவட்டம்**
சின்னமுத்து பண்டாரம் பிரேம நாதன் (இலக்கியம், ஊடகத் துறை).
**பதுளை மாவட்டம்**
முத்துபிச்சை மாசிலாமணி (இலக்கியம்).
**கண்டி மாவட்டம்**
முத்துக்கருப்பன் சம்பந்தர் (இலக்கியம்).
**நுவரெலியா மாவட்டம்**
செல்வம் விஜயகுமார் (இலக் கியம்).
**மன்னார் மாவட்டம்**
அலேசு மரியதாஸ் (இலக்கியம் - கவிதை, சிறுகதை). (ந-14)

# சுனாமி ஒத்திகை

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கு அமைய தேசிய ரீதியாக சுனாமிக்கான ஒத்திகை நிகழ்வு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரி விலுள்ள அல்வாய் வட மேற்கு ஜே/397 கிராம அலுவலர் பிரிவில் இன்று வியாழக்கி ழமை பிற் பகல் 3 மணிக்கு இடம் பெறவுள்ளது. எனவே இது தொடர்பில் பொது மக்கள் குழப்ப மடையத் தேவையில்லை என்றும் இது ஒத்திகைச் செயற்பாடு என்பதால் அமைதியாக இருக்குமாறும் யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (வ)

## பரிசளிப்பு விழா

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபை நூலகங்களால் நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு கொக்குவில் வளர்மதி சன சமூக நிலையத்தில் இன்றுவியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது: நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ கலந்து கொள்வார். (வ)

# மோ.சைக்கிளை திருடிய பிடியாணைக் குற்றவாளி

யாழ்ப்பாணம்,டிசெ.12
பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நீதி மன்றால் பிடியாணை பிறப்பிக்கப் பட்ட நபர் மோட்டார் சைக்கிளைத் திருடி தன்வசம் வைத்திருந்த போது பொலிஸாரால் கைது செய்யப் பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதி மன்று உத்தரவிட்டுள்ளது.
அல்வாயில் கடந்த 3 ஆம் திகதி 84 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார்சைக்கிள் ஒன்றுதிருட்டுப்போனது. வீட்டின் முன்புற கேற்றூணை உடைத்து வீட்டுக்குள் புகுந்து அது திருடப்பட்டிருந்தது.
அது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் பருத்தித்துறைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்டபோது அவர் வசம் இருந்த மோட்டார் சைக்கிள் மீட்கப் பட்டது. இதேவேளை அவர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புகுற்றச்சாட்டில் ஏற்கெனவே நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

# அபராதம்

கசிப்பு வைத்திருந்த சரசாலை தெற்கு வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸா ருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்தனர்.
சந்தேக நபரை நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (வ-9)

# கண்ணீர் அஞ்சலி



சு.சசிதரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் -
நிதி, வட மாகாண சபை)அவர்களின் அன்புத் தந்தை
**வைத்தியநாதன் சுவாமிநாதன்**
(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்)
அவர்கள் (10.12.2013) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவாது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(41100)(7.6.3)
ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் நிதி, வட மாகாண சபை.

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
10.07.1924
உதிர்வு
11.12.2005
திதி; கார்த்திகை பூர்வபக்க ஏகாதசி

**அமரர் சுப்பையா செல்லத்துரை**

ஐயா! நீங்கள் வற்றாத நீர் ஊற்று வானத்தின் சுடர் விளக்கு
மாறாத புன் சிரிப்பு மகிழ்வான அரவணைப்பு
பாசம் உங்கள் உயிர் மூச்சு பண்பான உபசரிப்பு
பரிதவிப்பில் எமை விடுத்து நீங்கள் பரலோகு சென்றாலும்
அகலாது எம் மனதில் நிலையாக உள்ளீர்கள்
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.
(42516) (2.6)
நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**தம்பையா இராஜேந்திரம்**
(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர் - கல்வி அமைச்சு வடமாகாணம்)



அன்னையின் மடியில் 1946.11.28 — இறைவன் அடியில் 2013.11.13

யாழ்ப்பாணம், வடமராட்சி இரும்பு மதவடி,
வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும்,
"அவராமினா", இல.48, உடுப்பிட்டி வீதி,
வதிரி கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட
தம்பையா இராஜேந்திரம் அவர்கள் இறைபதம்
எய்திய செய்தி அறிந்து ஓடோடி வந்து உடனிருந்து ஆறுதல் கூறி உதவிகள் பல புரிந்து,
அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து
கொண்டவர்களுக்கும் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம்
துயர்பகிர்ந்து கொண்டோருக்கும் எமது
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.12.2013) வியாழக்கிழமை காலை கீரிமலையில் நடைபெறும். நாளை (13.12.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப்பிரார்த்தனை நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து நண்பகல் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
எமது ஞாபகசக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் யாருக்காவது அழைப்பு செய்யத் தவறியிருந்தால் பெருமனதுடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

"அவராமினா"
இல.48, உடுப்பிட்டி வீதி,
வதிரி, கரவெட்டி. 0212263085
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புனிதவதி பஞ்சலிங்கம்

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா பூந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி பஞ்சலிங்கம் 11.12.2013 அதிகாலை காலமானார்.

அன்னார் பஞ்சலிங்கம் (முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்) அவர்களின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (40593) (7.6)

இல. 190, முதலாம் ஒழுங்கை,
கல்வியியற் கல்லூரி வீதி,
பூந்தோட்டம், வவுனியா.

தகவல்:
க.பஞ்சலிங்கம்.
024 490 6460, 077 691 1666

## வைத்தியநாதன் சுவாமிநாதன்

(ஓய்வுநிலை நிர்வாக அலுவலர், கல்வித்திணைக்களம், திருகோணமலை)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், இல.18, யாழ்.வீதியை வதிவிடமாகவும் கொண்ட வைத்தியநாதன் சுவாமிநாதன் செவ்வாய்க்கிழமை 10.12.2013 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினராசா-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகனும், ஜெயகௌரி தேவியின் பாசமிகு கணவரும், முதளீதரன் (நோர்வே), சுவர்ணா (லண்டன்), சசீதரன் (பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம்), சஞ்சுதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாரதி, துஷ்யந்தன், நதியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அகில்குமார், பவித்திரன் (கணியன்), தாரகி ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சீறீபற்பநாதன், தனலட்சுமி, குணநாதன், விஜயலட்சுமி, ஜெகநாதன், பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், புலவர் A.W அரியநாயகம் அவர்களின் உடன்பிறவாச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், பாஸ்கரன் மற்றும் சந்திரவதனி, கமலாசினி (வவி), கோசலாதேவி, பாலராசா, காலஞ்சென்ற சுந்தரேசன் (சுரேஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.18, யாழ்.வீதி,
சிறாம்பியடி,
யாழ்ப்பாணம். (42517) (12)(6)

தகவல்:
குடும்பத்தினர்,
0776057324/0265680250


## நன்றி செலுத்தும் வழிபாடு

வடமராட்சி, டிசெ.12

புனரமைப்புச் செய்யப்பட்டு, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெல்லியடி மெதடிஸ்த திருச்சபை தேவாலயத்தின் பிரதிட்டை வழிபாடும் நன்றி செலுத்தும் வழிபாடும், ஆண்டு விழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் பேரருட்திரு கலாநிதி ஏ.டபிள்யூ ஜெபநேசன் கலந்து கொள்வார். (வ-8)

## சிறுவர் சஞ்சிகை வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், டிசெ.12

சுகவாழ்வு நிலையம் நடத்தும் 'தேடும் சிட்டுக்கள்' சிறுவர் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில், சுகவாழ்வு நிலையத்தின் இயக்குநர் அ.ம.தி அருட்பணி மி.செபமாலை பெரோ தலைமையில் இடம்பெறவுள்ளன.

பிரதம விருந்தினராக அலமரித் தியாகிகள் சபையின் வடமாகாண முதல்வர் அருட்பணி ம.போல் நட்சத்திரமும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபனும் கலந்து கொள்வர். (வ-23)

## வலி.மேற்குப் பகுதியில் மலேரியா பரிசோதனை

யாழ்ப்பாணம், டிசெ.12

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வட்டு.மேற்கில் உள்ள அனைத்துக் குடும்பங்களினதும் உறுப்பினர்களது இரத்த மாதிரி எடுக்கப்பட்டு மலேரியா நோய் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

நுளம்பால் அதிக தாக்கமுறும் பிரிவினர் என இனம் காணப்பட்ட 100 குடும்பங்களுக்கு மருந்து விசிறப்பட்ட நுளம்பு வலைகள் உடனடியாக வழங்கப்பட்டன.

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த சிரேஷ்ட சுகாதார பரிசோதகர்கள். சுகாதார பரிசோதகர்கள் இணைந்து இந்த முயற்சியில் ஈடுபட்டனர். இதேவேளை, இரத்த மாதிரி பரிசோதனைமுடிவுக்குஇணங்க மேலும் ஒரு தொகுதியினருக்கு நுளம்பு வலைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (வ-50)


# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் குருசாமி

(ஓய்வு பெற்ற அதிபர் யா/கோண்டாவில் தமிழ் வித்தியாலயம், யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)



புங்குடுதீவு பெருங்காட்டை பிறப்பிடமாகவும் சங்கானை, கொக்குவில், கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டவருமான ஆறுமுகம் குருசாமி 10.12.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேல்முருகு-சின்னஆச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் உதயகுரு, பிருந்தினி, உதாகரன் ஆகியோரின் தந்தையும் மிலிண்டா, தயாபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருஷ்ணவேணி, சங்கவி, நிகிதா ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென் றவர்களான கந்தசாமி, சிவகாமி, பெரியநாயகி, பர்வதவர்த்தினி, பாலசுந்தரம், சுபத்திரை, இலட்சுமி, சாந்தலிங்கம் ஆகியோரது இளைய சகோ தரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் காலிவீதி கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இன்று (12.12.2013) வியாழக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 1.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 3.00 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(சி/14197) (7.6) உதாகரன் (மகன்) 011 259 1302

# கண்ணீர் அஞ்சலி



அம்பிகை களஞ்சியம்,
ராம்சுப்பர் சிற்றி, நியூ மெடிகெயர்-
சாவகச்சேரி ஆகியவற்றின்
உரிமையாளர் த.குகநேசன் அவர்களின்
அன்பு மாமனார்

## சுப்பிரமணியம் சிவப்பிரகாசம்

அவர்கள் 11.12.2013 அன்று காலமான செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளரும், பணியாளர்களும்.
ராம் சுப்பர் சிற்றி (சி/14359)(7.6.3)

# கண்ணீர் அஞ்சலி

நியூமெடிக் கெயர் வைத்தியசாலை
கச்சாய் வீதி, சாவகச்சேரி
எமது வைத்தியசாலை உரிமையாளர்
தம்பிராசா குகனேசன் அவர்களின் அன்பு மாமனார்

## சுப்பிரமணியம் சிவப்பிரகாசம்

(கண்டுவில் லேன், சாவகச்சேரி)



அவர்கள் நேற்று (11.12.2013) புதன்கிழமை காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துறருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(33036)(7.6.3) வைத்தியர்கள், பணியாளர்கள்.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சிவப்பிரகாசம்



யாழ்ப்பாணம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், சாவச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவப்பிரகாசம் நேற்று (11.12.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -நாகம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதியினரின் மருமகனும், பாக்கியத்தின் அன்புக் கணவரும், வசந்தராணி, ரஞ்சி (ஜேர்மனி), கௌரி, சத்தியசீலன், ரவீந்திரன் (உரிமையாளர்கள் ஆனந்தா ஸ்ரோர்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகுமார், தியாகராசா, குகனேசன் (உரிமையாளர் அம்பிகா களஞ்சியம் - யாழ், New Medicare Hospital Service, சாவகச்சேரி) (சன்றைஸ்), சுமதி, குணாழினி ஆகியோரின் அன்பு மாமனாரும், டேனார்சன், திவ்வியா, கிஷோர், ரமேஸ், சுரேஸ், கானுஜா, மிதுலா, வர்சிகா, மிதுலன், கோகுலன், பிரதாப், துஷானா, ஷஞ்ஜய், லோஜித் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், அரியரத்தினம் மற்றும் மகேஸ்வரன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மதியம் 12.00 மணியளவில் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்டுவில் வீதி,
சாவகச்சேரி. (41096) (7.6.3)

தகவல்:
S. ரவீந்திரன் (மகன்)
077 772 5064, 077 841 2094

# VACANCIES

## VAVUNIYA CAMPUS, UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications upto **10.01.2014** from qualified persons for the under mentioned posts.

**1. Instructor (Female) in Physical Education Grade II**

2. **English Language Teaching Unit**
Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in **English Language Teaching**

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Lecturer Grade I Rs.45,545 | – 7x1050 – 52,895/- p.m. |
| Senior Lecturer Grade II Rs.39,755 | – 11x790 – 48,445/- p.m. |
| Lecturer (Probationary) Rs.27,775 | – 10x645 – 34,225/- p.m. |
| Instructor in Physical Education Grade II | – Rs. 24,930-19x360-31,770/- p.m. |

**Note:**

In addition to the above salary, the following allowances will also be paid for academic staff:

i. Academic allowance – Senior Lecturer Gr. I/Gr. II – 80% of the basic salary
Lecturer (Probationary) – 60% of the basic salary

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

The following allowances will also be paid for permanent post:

ii. Special allowance - 20% of basic salary
iii. Cost of living allowance - Rs.6,600/-p.m.

**Statutory benefits:**

I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
III. Gratuity payments
IV. Employees' Trust Fund benefits.
V. Free Medical Services.

Applications for the above posts shall be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR,**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA.**
**11.12.2013**

(C/14360)(2.6)

## பிரயாணப்படி விவரத்தை அனுப்புமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிசெ.12
வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தில் பணியாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான பிரயாணப்படி தொடர்பான விவரங்கள் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனால் திணைக்கள நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அலுவலர்களின் ஆகக்கூடிய பிரயாண தூரமும் அதற்கான பயணப்படியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர், குடும்ப நல சேவையாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதார குடும்ப உத்தியோகத்தர், தெளிகருவி இயக்குநர், தடுப்பு மருந்து வழங்குபவர், மன நோய் சமூக உதவியாளர் உள்ளிட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் பாவனைக்கு பயணப்படி வழங்குவதற்கான கட்டண விகிதமும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## ஆன்மிக விழிப்பூட்டல்

யாழ்ப்பாணம், டிசெ.12
யாழ்.சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான ஆன்மிக விழிப்பூட்டல் மற்றும் உளச் சார்பான நிகழ்வுகள் தொடர்பான பயிற்சி முகாம் நாளை வியாழக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 4 தினங்கள் காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. அனைத்துச் சிறுவர்களையும் ஒன்றிணைத்து கலந்துரையாடுவதற்கான பயிற்சி முகாம்சின்மயா மிஷனின் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக் ரத சைத்தன்யா தலைமையில் நடைபெறவுள்ளது.
(வ- 14)



## மரண அறிவித்தல்

### தங்கவேல் மனோகரன் (மணி)



இல. 86/90, செம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

பொம்மை வெளியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேல் மனோகரன் (மணி) நேற்று (11.12.2013) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா பொன்னையா

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கல்விளானை வசிப்பிடமாகவும் தற்போது மல்லாவியில் வசித்தவருமான திருமதி நாகம்மா பொன்னையா நேற்று (11.12.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், மகேஸ்வரி (வவுனியா), காலஞ்சென்ற வரதராசா (கல்விளான்) மற்றும் கேதீஸ்வரன் (லண்டன்), தனலட்சுமி (சுவிஸ்), கோணேஸ்வரன் (மல்லாவி), நகுலேஸ்வரன் (சுவிஸ்), மங்களேஸ்வரி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு தாயும், நவரத்தினராசா (சுவிஸ்), குமுதா (லண்டன்), புவ னேஸ்வரன் (சுவிஸ்), விஜினா (மல்லாவி), அருந்ததி (சுவிஸ்), விஜயன் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவ்ரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: விஜயன்
(மருமகன்-கிளிநொச்சி).

(29707) (10.6)

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு பரமநாதன்



கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், துர்க்காபுரம் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு பரமநாதன் (துரை) நேற்று (11.12.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-லட்சுமிபிள்ளை தம்பதியினரின் மருமகனும், சிறீகாந்தன், தவமணிதேவி, பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, அம்பிகாவதி ஆகியோரின் சகோதரனும், சாவித்திரி, ராசபூபதி, சோதிமலர், கதிர்காமநாதன் ஆகியோரின் மைத்துனரும் கேதீஸ்வரன் (கமல்-மலேசியா), சுசிகரன் (விமல்), துஸ்யந்தன் (குட்டி), மைதிலி ஆகியோரின் தகப்பனாரும், றஞ்சினிதேவி, ஜெனனி (ஜெனா) ஆகியோரின் மாமனாரும், றஞ்சன் (லண்டன்), றஞ்சினி (லண்டன்), றாகினி (லண்டன்), சந்திரன் (ஒஸ்ரியா), பொவிற்றா ஆகியோரின் சிறிய தந்தையும், குருபரன், துவாரகன், துளசிகா, அமிதரன், வைஸ்ணவி, சிறிராம் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் சுட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

(42525)(7.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிவரத்தினம் தில்லைநடேசன்



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிட மாகவும் கொண்ட சிவரத்தினதம் தில்லைநடேசன் நேற்று (11.12.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்காளான சிவரத்தினம்-மகேஸ்வரி தம்பதியாரின் அன்பு மகனும், ஜெயதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அற்புதரட்ணம்-எமிலிபூரணம் தம்பதி யரின் அன்பு மருமகனும், சிவஞானசுந்தரம், சிவத்திரு. சண்முக வடிவேல், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், திருஞானச் செல்வம், லட்சுமிகாந்தன், சறோஜினிதேவி, சாரதா தேவி, கமல நாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கேதீஸ்வர நாதன், தர்மப் பிரியா (ஜேர்மனி), சோபிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், மதி வதனி, தயானந்தமூர்த்தி, பாலவண்ணன், ஆகியோரின் பாசமிகு மாம னும், கேதாயினி, பிரவினா, ஜனார்த்தன், துர்க்கா, துர்சிகன், லக் ஷியா, தக்ஷகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2013) வெள்ளிக் கிழமை மு.ப. 10.30 மணியளவில் உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடுவில் மகளிர் பாடசாலை மேற்கு வீதி, உடுவில்.

தகவல்: குடும்பத்தினர்.

# இன்று தங்கத்தைவிட தண்ணீருக்கே மதிப்பு

## புலிகள்கூட இராணுவ முகாம்களைத் தாக்குவதற்கு முன்னர் நீர்த்தாங்கிகளையே அழித்தனர் என்கிறார் பீலிக்ஸ் பெரேரா



கொழும்பு,டிசெ.12
தங்கத்தைவிட இன்று தண் ணீருக்குத் தான் அதிகம் மதிப் புள்ளது. ஏன் விடு தலைப் புலி கள் கூட இராணுவ முகாம் களைத் தாக்குவதற்கு முன் னர் நீர்த் தாங்கிகளையே தாக்கி அழித்தனர்.
அந்தளவுக்கு நீர் முக்கிய மானதாகும் என்று சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நடைபெற்ற நீர்வழங் கல், வடிகாலமைப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதத் தில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரி வித்தார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்த தாவது-
விவசாய உற்பத்திகளுக்கு உரம், இரசா யனம், கிருமிநா சினி ஆகியவற்றைக் கூடுதலாகப் பயன்படுத்துவதும் சிறு நீரக நோய் அதிகரிப்புக்குக் காரணமாக அமைகிறது.
எனவே, இது தொடர்பில் விவ சாயிக ளுக்குத் தெளிவுபடுத்து வதற்காக விசேட குழுவொ ன்று நியமிக்கப்படவேண்டும்.
அரபுநாடுகளில் எண்ணெய் வளம் இருந் தாலும் அங்கு நீர் பற்றாக்குறை நிலவு வதால் மக்கள் மென்பானங் களையே அருந்துகின்றனர். எனவே, இந்த நிலைமை யைக் கட்டுப்படுத் துவதற்கு விவசாயிகளுக்குத் தெளிவுப டுத்தல் அவசியம். அதற்காக ஒரு குழு நிய மிக் கப்படல் அவசியமாகும் - என்றார். (கு-சி)

# பாம்பு தீண்டி சிறுவன் சாவு

மட்டக்களப்பு,டிசெ.12
பற்றைக் காட்டுக்குள் 'மாபிள்' தேடிய சிறுவனின் கையில் பாம்பு தீண்டிய தால் அச்சிறுவன் உயிரிழந்துள்ளான்.
இந்தச் சம்பவம் வெருகல் பிரதேச செய லர் பிரிவிலுள்ள பூநகரில் செவ்வாய்க் கிழமை மாலை இடம் பெற்றுள் ளது.
உயிரிழந்த சிறுவன் பூ நகரைச் சேர்ந்த அன்பழ கன் கதீஸ் (வயது- 8) என்று அடை யாளம் காணப்பட்டுள்ளார்.
நேற்று முன்தினம் மாலை சிறுவன் நண்பர் களுடன் சேர்ந்து 'மாபிள்' விளையாடிக் கொண்டு நின்றபோது 'மாபிள்' அருகிலி ருந்த பற்றைக் காட்டுக்குள் போய் விழுந்துள்ளது. விழுந்த மாபிளைப் பற்றைக் காட்டுக்குள் சிறு வன் கையை விட்டுத் தேடியபோது அதற்குள் இருந்த பாம்பு சிறு வனைத் தீண்டியுள்ளது.
இதைப் பொருட்படுத்தா மல் விளையாடி முடிந்து வீடு வந்து சேர்ந்த போது சிறுவன் மயங்கி விழுந் துள்ளான்.
உடனடியாக பெற்றோர் அலி ஒலுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல் லும் வழியிலேயே சிறுவன் உயிரிழந் துள்ளான் என்று உறவினர்கள் தெரி வித்தனர். (ச)


**கொள்வனவு**

சகலவிதமான நெல் வகைகளும் கொள்முதல் செய்யப்படும்.

(45551) (12.6) தொடர்பு: 077 772 2215



**விற்பனைக்கு**

ஐஸ்கிறீம் விற்பனை செய்யும் வாகனம் விற்பனைக்குண்டு. (45551) (14.17)

தொடர்பு: 077 5277784


# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை வழங்குநர்களைப் பதிவு செய்தல் -2014

01.01.2014 தொடக்கம் 31.12.2014 வரை கீழ்க்காணும் பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்காகப் பச்சி லைப்பள்ளி பிரதேச சபையுடன் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்காணும் ஒவ்வொரு பொருள்களுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல்" 2014 எனக் குறிப்பிடப்பட்டு தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை என்ற முகவரிக்கு 27.12.2013 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது நேரில் சமர்ப்பிக்க வேண்டும்.

| தொ இல. | வழங்கள் | மீளளிக்கப் படாத பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01. | காகிதாதிகள் எழுது பொருள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள் | 1,500.00 |
| 02. | அலுவலக உபகரணங்கள், பைலிங் கபினட்டுகள், உருக்குக் கபினட்டுகள், கணினி இயந்திரங்கள், கணினி உபகரணங்கள் | 1,500.00 |
| 03. | தளபாடங்கள் | 1,500.00 |
| 04. | மலசலகூடத் தொட்டி வேலை, களஞ்சியப்பொருள் (தும்புத்தடி), பிரம்புக் கூடைகள், ஈர்க்குத்தடிகள், கிருமிநாசினிகள், தெளிகருவிகள், குளோரின், சவர்க்காரம்,கையுறை | 1,500.00 |
| 05. | அச்சடித்தல் | 1,500.00 |
| 06. | இரும்புப் பொருள்கள், தீந்தைகள், (எல்லா வகையான இரும்புப் பொருள்கள், தீந்தைகள்) | 1,500.00 |
| 07. | கட்டட வீதிவேலைகளுக்கான பொருள்கள் (ஆற்றுமணல், கிறவல், சரளைக் கற்கள், செங்கற்கள், ஓடுகள், களிமண்) | 1,500.00 |
| 08. | நீர் விநியோகப் பொருள்கள் (பி.வி.சி பைப்புகள், குழாய்கள், பொருத்துக்கள் என்பன) | 1,500.00 |
| 09. | மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் (வாகனங்களுக்கான பற்றரி, ரயர், ரியூப், உதிரிப்பாகங்கள்) | 1,500.00 |
| 10. | நீர் இறைக்கும் இயந்திரங்கள், ஏனைய இயந்திரங்கள் | 1,500.00 |
| 11. | வாகனங்கள் | 1,500.00 |
| 12. | மின்சாரப் பொருள்கள் (வயர்,மின்குமிழ்,சுவிச், மின் இணைப்பு உபகரணங்கள் | 1,500.00 |
| 13. | நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் | 1,500.00 |
| 14. | சித்த மருத்துவப் பொருள்கள் | 1,500.00 |
| தொ இல. | சேவைகள் | |
| 01. | கட்டடங்கள் பழுதுபார்த்தலும், பேணலும் | 1,500.00 |
| 02. | மோட்டார் வாகனங்களை பழுதுபார்த்தலும், சேவிஸ் இடுதலும் | 1,500.00 |
| 03. | தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் பழுதுபார்த்தல் | 1,500.00 |
| 04. | இலத்திரனியல் இயந்திரங்கள் பழுதுபார்த்தலும், சேவிஸ் இடுதலும் | 1,500.00 |
| 05. | படவரைஞர்கள், கட்டட ஒப்பந்தகாரர்கள் (கிராமிய அபிவிருத்திச்சங்கங்கள்உட்பட) | 1,500.00 |

மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு இலக்கங்களுக்கும் எதிராக குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணங்கள் காசாக அல்லது காசுக்கட்டளையாக "தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை. பளை" என்று எழுதப்பட்டு பதிவு செய்வதற்கான விண்ணப்பத்துடன் வியாபார அனுமதிச் சான்றிதழின் பிரதியினையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள், ஒப்பந்தாகரரிடம் இருந்து கூறுவிலை கோரப்படும். ஆனால் அவசியம் ஏற்பட்டால் ஏனைய வழங்குநர்களிடமிருந்து கூறுவிலை கோரவும் கொள்வனவு செய்யவும் தவிசாளருக்கு உரிமை யுண்டு. குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத்தவறும் அல்லது கட்டளை பிறப்பிக் கப்பட்டு உரிய காலத்தினுள் நிறைவேற்றத் தவறும் அல்லது வழங்கப்பட்ட சேவைகள் பொருள்கள் கோரப்பட்ட தரத்துக்கும் வழங் கப்பட்ட விவரக் கூற்றுக்களுக்கும் ஏற்ப அமையத் தவறும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்களின் பெயர்கள் அறிவித்தல் இன்றி பதிவேட்டில் இருந்து நீக்கப்படும். ஏற்கனவே தவறிழைத்த வழங்குநர்களிட மிருந் தும் ஒப்பந்தகாரர்களிட மிருந்தும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

**ப.டொ. அன்ரன்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.** (சி/7603)(10.14) **12.12.2013**

# நீல நிற காற்சட்டையை மாணவர் அணியலாம்

*இரத்தானது உத்தரவு*

கொழும்பு,டிசெ.12
வட மத்திய மாகாண பாட சாலை களில் கனிஷ்ட பிரிவு மாணவர்கள் அடுத்தவருடத்தில்இருந்துவெள்ளை நிற அரைக் காற்சட்டை அணிய வேண்டும் என்று பிறப்பிக் கப்பட்ட உத்தரவு ரத்துச் செய்யப்பட்டுள் ளது. அதனால் மாணவர்கள் நீல நிற அரைக் காற்சட்டை அணிந்து பாடசாலைக்கு சமூக மளிக்க முடி யும் என்று வட மத்திய மாகாண கல்வி அமைச்சர் கே.டபிள்யு. நந்த சேன தெரிவித்தார்.

**"-"**

**வெள்ளை நிற அரைக் காற்சட்டையை ஒரு நாளைக்கு மேல் தூய்மை யானதாக அணிய முடி யாது என்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

வெள்ளை நிற அரைக் காற் சட் டையை ஒரு நாளைக்கு மேல் தூய் மையானதாக அணிய முடியாது என்பதால் இந்தத் தீர்மானம் எடுக் கப்பட்டுள்ளது.
அடுத்த வருடம் தொடக்கம் கனிஷ்ட பிரிவு மாணவர்கள் வெள்ளை நிறப் பாதணி அணிய வேண்டும் என்று பிறப்பிக் கப்பட்டிருந்த உத்தரவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)

# மரண அறித்தல்

## சரவணமுத்து பொன்னம்பலம்

கிளிநொச்சி முன்னாள் பட்டினசபை உபதலைவரும் சமாதான நீதிவானும், கிளி சித்தி பேக்கரி உரிமையாளரும், மஞ்சுளா பேக்கரி உரிமையாளரும்)



சூளானை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாக வும், தில்லைகட்டியை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து பொன்னம்பலம் நேற்று (11.12. 2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவண முத்து- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பூமணியின் அன்புக் கணவரும், அண்ணமுத்து, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தங்கமுத்து, சரஸ்வதி (கனடா), மனோன் மணி, பூமணி ஆகியோரின் அன்பு சகோதரனும் மகேஸ்வரியின் மைத்துனரும், மாலா (ஜேர்மனி), றஞ்சன் (கனடா), ரஜி கலா (ஜேர்மனி), அனுரா (டிலக்ஸ்), விஜி (பிரான்ஸ்), ராஜி ஆகியோ ரின் பாசமிகு தந்தையும், சிறி (ஜேர்மனி), சசி (கனடா), காந்தன் (ஜேர் மனி), வதனா, பாஸ்கரன் (பிரான்ஸ்), ரவீந்திரன் (அதிபர்-சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமனும், அஜந்தன், யுவிந்தன், கவிந்தன் (ஜேர்மனி), மிதுஷா, துஷாந் (கனடா), டிலக்ஷன், டிலக்ஷிகா (ஜேர்மனி), டிவேந்தன், மேகதீபன், மேகதீசன், பிரிஜந்தன், பிரிந்திகன், தர்மிகா (பிரான்ஸ்), பனோஜன் ஆகியோரின் அன்பு பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2013) நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரி யைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தில்லைகட்டி, சுன்னாகம். (42565)(10.14) தகவல்: அனுரா (டிலக்ஸ்-மகன்).

# மரண அறிவித்தல்



## திருமதி யமுனா (வவா) குணநாயகம் (குணசிங்கம்)

வாகீஸ்வரி, கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் , பலாலிவீதி, உரும் பிராய் மேற்கு, உரும்பிராயை (கோண்டாவில் டிப்போ அருகில்) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யமுனா (வவா) குணநாயகம் நேற்று (11.12. 2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சீனியர் குணநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் ருக்குமணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற வர்களான சினியர்- லட்சுமி (புன்னாலை கட்டுவன்) தம்பதியரின் அன்பு மருமக ளும், மாக்சனா, வோரினா (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்திய சாலை), கபேஸ் (ஊடகவியலாளர் இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம்), றொமினா ஆகியோரின் அன்புத் தாயும், கோகுலரமணனின் (லண்டன்) அன்பு மாமியும், பிரேமராணி, ரஞ்சன், ராதாம்பாள் (ஜேர்மனி), வசந்தன் (லண்டன்), சுதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, தர்மகுல சிங்கம் (கந்தையா- கனடா), நவரத்தினராசா, புஸ்பமலர், பூமலர், இரதத்தினம்மா (வெள்ளை), காலஞ்சென்ற பவானி, சிவசேகரன் (சேகர் அல்வாய்), ஞானேஸ் வரன், வசந்தி, சந்திரபாலா (ஜேர்மனி), மேரி (லண்டன்), ஜெகதா ஆகியோரின் மைத்துனியும், பாலசிங்கம், காலஞ்சென்ற யோகம்மா, நடராசா, பாலசுப் பிரமணியம், ரதிப்பிரியா ஆகியோரின் பாசமிகு சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.12.2013) வியாழக்கிழமை அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
(கோண்டாவில் டிப்போவில் இருந்து 300M தொலைவில்)

தகவல்: குடும்பத்தினர்.

# கருத்தடை செய்த தாயாரின் உயிரிழப்புக்கு சுகாதார வளப் பற்றாக்குறையும் காரணம்

## மாகாண சுகாதார அமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 12

கிளிநொச்சியில் கருத்தடை செய்து கொண்ட தாயார் ஒருவர் உயிரிழந்த சம்பவத்துக்கு எங்களது வளப்பற்றாக்குறையும் ஒரு காரணமாக இருப்பதாகத் தெரிவித்த சுகாதார அமைச்சர், இது தொடர்பில் கிளிநொச்சி சுகாதாரப் பணிமனையின் முழுமையான அறிக்கை கிடைத்த பின்னர் விளக்கம் அளிப்பதாகக் கூறினார்.

வடக்கு மாகாணசபையின் வரவு - செலவுத் திட்டத்தின் சுகாதார அமைச்சு மீதான விவாதத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> **"சிறுநீர்ப் பரிசோதனை செய்யாமலா கருத்தடை செய்து கொள்ளப்பட்டது என்று சிலர் என்னிடம் கேட்டார்கள். எங்களிடம் வளங்கள் பற்றாக் குறையாக இருக்கின்றன. இதனால் அது செய்யப்படவில்லை**

கிளிநொச்சியில் கருத்தடை செய்து கொண்ட 50 தாய்மார்களில் கடந்த மாதம் 26 வயதான தயார் ஒருவர் உயிரிழந்திருந்தார். அவர் கர்ப்பந்தரித்த நிலையில் கருத்தடை செய்யப்பட்டமை இதன் பின்னர் தெரியவந்தது.

குறித்த தாயாரின் பதிவுகள் தவறாக இருக்கின்றன. கருத்தடை செய்வதற்கு முன்பாக அவருடன் மருத்துவ மாது கதைத்த போது, கடைசியாக மாதவிடாய் வந்த திகதி ஒகஸ்ட் 28 ஆம் திகதி என்று கூறியுள்ளார். 9 ஆவது நாள் அவர் கருத்தடை செய்துள்ளார். இதில் எந்தப் பிழையும் இல்லை.

ஆனால் இதன் பின்னர் அவர் வைத்தியசாலைக்கு வயிற்றுநோ காரணமாகச் சென்றுள்ளார். இதன்போது அவர் ஸ்கான் செய்யப்பட்ட போது வயிற்றில் கரு இருந்தது தெரியவந்தது. அவர் கர்ப்பிணி என்று அறிந்த பின்னர் கர்ப்பிணிகள் சேவை நிலையத்தில் பதிவுகள் செய்துள்ளார். அப்போது அவர் கடைசியாக மாதவிடாய் வந்த திகதி ஜூலை மாதம் 28 ஆம் திகதி என்று குறிப்பிட்டுள்ளார். இதனை வைத்துப் பார்க்கும் போது கர்ப்பகாலம் சரியாகப் பொருந்துகின்றது. தவறுக்கு உயிரிழந்த அந்தப் பெண்ணும் பொறுப்பு.

சிறுநீர்ப் பரிசோதனை செய்யாமலா கருத்தடை செய்து கொள்ளப்பட்டது என்று சிலர் என்னிடம் கேட்டார்கள். எங்களிடம் வளங்கள் பற்றாக் குறையாக இருக்கின்றன. இதனால் அது செய்யப்படவில்லை.

இதனை விட உயிரிழந்த அந்த தாயார் முன்னரும் கருத்தடை மாத்திரை பயன்படுத்தி வருபவர். அவர் அதனை ஒழுங்காகப் பயன்படுத்தாமையினாலேயே கருத்தரித்துள்ளார். எனவே அவருக்குக் கருத்தடை ஒன்றும் புதிதல்ல. இருப்பினும் நாம் கிளிநொச்சி சுகாதார சேவைகள் திணைக்களத்திடம் விளக்கம் கோரியுள்ளோம். அவை கிடைத்த பின்னர் அதனை இந்தச் சபைக்குத் தெரியப்படுத்துவோம் - என்றார். (த-5)

# மேற்குலகத்தை குறை கூறாமல் தவறுகளைத் திருத்த வேண்டும்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு



"மேற்குலக நாடுகளைக் குறை கூறுவதால் எந்தப் பயனுமில்லை. நாட்டின் தவறுகளை நாமே திருத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சர்வதேச ரீதியில் இலங்கை அவப்பெயருக்கு உள்ளாகும்" என்று கொழும்பு பேராயர் வணக்கத்திற்குரிய கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆயர்கள் சம்மேளனத்தின் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசு உடனடியாக நடைமுறை படுத்த வேண்டும். இதனை செய்யாது மேற்குலக நாடுகள் மீது குறைக் கூறுவதில் பயனில்லை. எமது தவறுகளை நாமே திருத்திக்கொள்ள வேண்டும். அரசமைப்புச் சட்டத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி மாற்றங்களைச் செய்யக் கூடாது.

மாறாக, செய்ய போகும் மாற்றங்களை முன்வைத்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அதிரடி

பனவற்றை உள்ளடக்கிய மீண்டுவரும் செலவினமாக 6 ஆயிரத்து 424 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மாகாண கல்வி அமைச்சுக்கு 206 மில்லியன் ரூபாவும், மாகாண கல்வித் திணைக்களத்துக்கு 6 ஆயிரத்து 182 மில்லியன் ரூபாவும், விளையாட்டுத் திணைக்களத்திற்கு 36 மில்லியன் ரூபாவும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மூலதன செலவினத்தில் மாகாண கல்வி அமைச்சுக்கு 200 மில்லியன் ரூபாவும், விளையாட்டுத் திணைக்களத்திற்கு 14 மில்லியன் ரூபாவும், கலாசாரப் பிரிவிற்கு 4 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள்:

தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பில் முதலமைச்சருடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. நிறைவான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அது முன்னெடுக்கப்படும். உதவி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மீண்டும் கொடுப்பனவு.

மாகாணமட்ட கண்காட்சி, கலைவிழா, கோட்ட மட்ட, மாவட்ட மட்ட விளையாட்டு விழாக்கள், ஆசிரியர்களுக்கான பயிற்சி, முன்பள்ளி முகாமைத்துவ குழுக்களுக்கான வலுவூட்டல் செயலமர்வுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

வடக்கில் உள்ள 34 பிரதேச செயலகங்களிலும் கலாசார வேலைத்திட்டத்திற்காக தலா 5 லட்சம் ரூபா வழங்கப்படும்.

கலைஞர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 50 கலைஞர்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா. கலைத்துறையில் தேசிய மட்டத்தில் சிறப்பான அடைவு மட்டத்தினைப் பெறும் மாணவர்கள், சிறப்பான முறையில் கலைத்துறைக்கு பங்காற்றி வரும் ஆசிரியர்களுக்கான இந்திய கல்விச் சுற்றுலா.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் குறைந்த வருமானம் உடைய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் 4 ஆயிரத்து 500 பேருக்கு தலா 500 ரூபா மாதாந்தக் கொடுப்பனவு.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளக விளையாட்டரங்கின் முதலாம் கட்ட வேலை, வவுனியா மாவட்டத்தில் கடி விளையாட்டிற்கான மைதானம் மறுசீரமைப்பு. மன்னார் மாவட்டத்தில் பொது மைதான உள்ளக விளையாட்டரங்கின் மிகுதி வேலைகள், யாழ்ப்பாண மாவட்டத்தின் உள்ளக விளையாட்டு அரங்கின் வேலைத் திட்டங்கள் என்பவற்றிற்காக 14 மில்லியன் ஒதுக்கீடு.

கிளிநொச்சி மாவட்டத்தில் கலாசார மண்டபம் அமைப்பதற்கான முதல் கட்ட வேலைகளுக்காக 4 மில்லியன் ஒதுக்கீடு.

**போதாத ஒதுக்கீடுகளும் முன்மொழிவுகளும்**

பாடசாலைகளில் சிறு திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு 42 மில்லியன் ரூபா ஒதுக்கீடு. (ஆனால் 200 மில்லியன் ரூபா தேவை.)

பாடசாலைகளின் மின் கொடுப்பனவுகளுக்காக 10.8 மில்லியன் ரூபா ஒதுக்கீடு. இதன் இரு மடங்கு தேவை.

ஆசிரியர்களின் சம்பள நிலுவைக்கு 100 மில்லியன் ரூபா தேவை.

ஆசிரியர் இடர் கடன் கொடுப்பனவுகளை மேற்கொள்ள 100 மில்லியன் தேவை.

12 கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் வகுப்பறைக் கட்டடங்களின் நிர்மாணம் மற்றும் மறுசீரமைப்புக்கும் ஆசிரிய விடுதி அமைத்தல் போன்ற அவசிய வேலைகளுக்கும் மேலும் 500 மில்லியன் ரூபா தேவை.

விளையாட்டு மைதானங்களின் புனரமைப்பு, விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் போன்ற வேலைத் திட்டங்களுக்காக மேலும் 100 மில்லியன் தேவை.

கலாசார மண்டபம் அமைத்தல், அரும்பொருட் காட்சியகத்தினை உருவாக்குதல் போன்றவற்றிற்கு 100 மில்லியன் ரூபா தேவை. (உ-5)

### கல்விச்

கின்றோம் என்றார் அமைச்சர்.

கல்வியில் வடக்கு மாகாணம் அடைந்துள்ள பின்னடைவில் இருந்து அதனை மீட்டெடுக்கும் வழிவகைகளை ஆராய்வதற்காகவே அடுத்த மார்ச் மாதம் கல்வி மாநாட்டை நடத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். புலம்பெயர்ந்து வாழும் தமிழ் அறிஞர்களும் வேறு மாகாணங்களிலுள்ள அறிஞர்களும் மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் காணப்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு மாகாணமட்டத்தில் சகலரையும் உள்ளடக்கிய ஒரு குழு அமைக்கப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார். அதனூடாகச் சரியான முறையில் ஆசிரிய இடமாற்றம் மற்றும் ஆசிரியப் பங்கீடுகள் மேற்கொள்ளப்படும்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் கல்வி அபிவிருத்தி வேலைகளுக்காக வெறும் 5 சதவீத நிதியே ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

முன்பள்ளிகளை அமைச்சின் கீழ் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அதன் மூலம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சீரான கொடுப்பனவை வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

எமது கல்வி நிலையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும். எதிர்காலத்தில் 21 வயதில் ஒரு மாணவன் பட்டதாரியாக வரவேண்டும். அதற்கேற்றால் போல் முன்பள்ளி கல்வி மற்றும் முதலாம், இரண்டாம் நிலைக் கல்விகளின் வயதெல்லைகள் மாற்றப்பட வேண்டும்" என்றார் அமைச்சர்.

பிரதேச செயலகங்கள் நடத்தும் கலாசார நிகழ்வுகளுக்கு அரசியல்வாதிகளை அல்லது அந்தப் பிரதேசத்தின் அரச அதிகாரிகளை விடவும் ஊரில் தமிழ் புலவர்களை மூத்த கலைஞர்களை விருந்தினர்களாக அழைத்து மதிப்பளிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

மாவட்டந்தோறும் அரும் பொருள் காட்சிச் சாலைகளை அமைக்கத் திட்டமிடப்படுவதாகவும் கூறிய அமைச்சர் இந்த மண்ணில் உள்ள அரும் பொருள்கள் அனைத்தும் வெளியே கொண்டு செல்லப்பட்ட நிலையில் அரும்பொருட் காட்சியகங்களில் நாம் அம்மியையும், ஆட்டுக் கல்லையும் வைக்கப் போகின்றோமா என்பதைச் சிந்திக்க வேண்டும் என்றார்.

வட இலங்கை சங்கீத சபை 2020 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகமாக்கக்கூடிய வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார் அமைச்சர்.

எங்களது விளையாட்டு வீரர்களுக்கு மதிப்பளிக்கும் வர்ண இரவு நிகழ்வு அண்மையில் நடந்தது. இதில் கல்வி அமைச்சின் செயலாளர் தவிர வேறு எந்த அதிகாரியும் பங்கெடுக்கவில்லை. எல்லோருக்கும் கௌரவமான முறையில் அழைப்பிதழ்கள் அனுப்பினோம், ஆனால் யாரும் வரவில்லை. இதே வர்ண இரவு நிகழ்வுகள் கடந்த காலங்களில் இடம்பெற்ற போது சகல அதிகாரிகளும் பங்கெடுத்திருந்தனர். நாங்கள் நடத்தியபோது மட்டும் அவர்கள் பங்கெடுக்கவில்லை. இனிமேலாவது அரச அதிகாரிகள் இவ்வாறு நடந்து கொள்ளாமல் எங்களோடு கை கோர்த்துச் செயற்பட முன்வர வேண்டும் - எனத் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் அமைச்சர். (உ-5)

### வங்கக் கடலில்

இதன் காரணமாக தென் கரையோரப் பகுதிகளில் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யும் என வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கரையோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பு காணப்படும் எனவும் காற்றின் வேகம் மணிக்கு 50-60 கிலோ மீற்றர் வரை வீசும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது. (த-400)

### இலங்கை

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சுஜாதா சிங் பொது நலவாய மாநாட்டுக்காக இலங்கை வந்திருந்தபோது தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு இரு தரப்பு மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண அவசியமானதெனவும் அவர் கூறினார்.

இலங்கையில் 88 இந்திய மீனவர்களும் இந்தியாவில் 120 இலங்கை மீனவர்களும் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

### சுகாதார

பட்டு வருவதாக அமைச்சர் அப்போது குறிப்பிட்டார். சுகாதார வசதிகள் முன்னேற்றம், தாய் - சேய் நலன், போசாக்கு முன்னேற்றம், தொற்று நோய் தடுப்பும் பாதுகாப்பும், தொற்றா நோய் தடுப்பும் பாதுகாப்பும், விசேட தேவையுள்ளோருக்கான சேவை என்பன அவற்றுள் முக்கியமாக உள்ளடக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சுக்கான ஒதுக்கீட்டில் மீண்டு வரும் செலவினமாக 3 ஆயிரத்து 532 மில்லியனும், மூலதன செலவினமாக 422 மில்லியனும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரமாண அடிப்படையிலான நன்கொடையாக 12.5 மில்லியனும், மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடையாக 228 மில்லியனும், எச்.எஸ்.டி.பி நிதியாக 180 மில்லியனும், யுனிசெப் நிதியாக 9 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் மாகாண அமைச்சுக்கு மீண்டெழும் செலவாக 57 மில்லியனும், மூலதன செலவீனமாக 5 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மாகாண நிர்வாகத்திற்கு மீண்டெழும் செலவாக 30 மில்லியனும், வைத்திய சேவைகளுக்கு மீண்டெழும் செலவாக 247 மில்லியனும், மக்கள் சுகாதார சேவைகளுக்கு மீண்டெழும் செலவாக 2 ஆயிரத்து 575 மில்லியனும், பொதுச் சுகாதார சேவைகளுக்கு மீண்டெழும் செலவாக 460 மில்லியனும் இவற்றுக்கான மூலதன செலவாக 389 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுதேச மருத்துவத் திணைக்களத்தின் மாகாண நிர்வாகத்திற்கு மீண்டெழும் செலவாக 19 மில்லியனும், சுதேச வைத்தியத்துறைக்கு 141 மில்லியனும் இவற்றுக்கான மூலதன செலவாக 28 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. (உ-5)

### மண்டேலாவின்

நல்லிணக்கச் செயல்முறையை, இலங்கை பின்பற்ற வேண்டும். இலங்கை அரசு போரினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு நெல்சன் மண்டேலாவின் வழிமுறையைப் பின்பற்ற வேண்டும்

வன்முறை, மோதல்களில் சிக்கியுள்ள சமூகங்களுக்கு, அமைதியையும், உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கு, நெல்சன் மண்டேலாவின் நல்லிணக்கம், மன்னித்தல் ஆகியவை முக்கியமான எடுத்துக் காட்டுகளாக இருக்கும் - என்றார். (த)

### இன்றும்

விருத்தி, சமூக சேவைகள், புனர்வாழ்வளித்தல், மகளிர் விவகாரம், தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், உணவு வழங்கலும் விநியோகம் மீதான விவாதம் இடம்பெற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

நேற்றைய இரண்டாவது நாளில், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் மீதான விவாதம் காலையில் இடம்பெற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது. மாலையில், சுகாதார மற்றும் சுதேச சேவைகள் அமைச்சின் மீதான விவாதமும் இடம்பெற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

இன்று மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு மற்றும், விவசாயம், கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. (த-5)

# அன்ரனிஸ், மேரிஸ், விண்மீன் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், டிசெ.12
நெஸ்லே லங்கா பிறைவேட் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்படும் மைலோ கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று புதன்கிழமை துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதியாட்டங்களில் பாஷையூர் சென்.அன்ரனிஸ், நாவாந்துறை சென்.மேரிஸ், விண்மீன் விளையாட்டுக் கழகங்கள் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.



முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண் டது.
இதில் இரண்டு அணியினரும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி, தோல்வி தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
அவையும் சமநிலையானதால் மேலதிகமாக ஒவ்வொரு உதை வழங்கப்பட்டது.
இதனை நாவாந்துறை சென்.மேரிஸ் அணி கோலாக்கியது. டைமன்ஸ் அணி இந்தச் சந்தர்ப்பத்தை தவற விட்டது.
இதனால் ஆட்ட முடிவில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
ஆட்ட நேர முடிவில் விண்மீன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணிக்கும், கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெறவிருந்த ஆட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று இடம் பெறவில்லை. (த-23)

"-"

ஆலயங்களில் பூசை வழிபாடுகள் நடத்தாமல் விடும் பட்சத்தில் ஏற்படக் கூடிய விளைவுகள் தொடர்பாக இந்து சமய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## உடுவிலில் தாச்சிப் போட்டி

வலி.வடக்கு, டிசெ.12
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் மின்னொளியில் இளைஞர் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் தொடரில் இன்று வியாழக் கிழமை இரவு 7.30 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

- பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழகம் எதிர் மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக் கழகம்.
- தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் மயிலிட்டி பாரதி விளையாட்டுக் கழகம். (த-86)



மைலோ கிண்ணத்துக்காக யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் பரபரப்பாக மோதும் அணிகள். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.12
நெஸ்லே லங்கா பிறைவேட் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்படும் 'மைலோ' வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் காலிறுதியாட்டங்கள், அரையிறுதியாட்டங்கள் ஆகியவற்றில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**காலை 9.30 மணி (காலிறுதியாட்டம்)**
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம்.

**முற்பகல் 10.30 மணி (அரையிறுதியாட்டம்)**
பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் விண்மீன் விளையாட்டுக் கழகம். (த-23)

## அராலி உதைபந்தாட்டம்; முடிவுகள் சில

யாழ்ப்பாணம், டிசெ.12
அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளையொட்டி நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த திங்கட் கிழமை மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நியூ செனிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற மற்றைய ஆட்டத்தில் அண்ணா விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக 'பி' அணி மோதிக் கொண்டது.
இதில் அண்ணா விளை யாட்டுக் கழக 'பி' அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23-86)

## அசத்தியது சென்.யூட்

முல்லைத்தீவு, டிசெ.12
முல்லைத்தீவு 591 ஆவது இராணுவப் படைப்பிரிவு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த திங்கட் கிழமை உடுப்புக்குளம் அலைஓசை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது.



இதில் சென்.யூட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் சென்.யூட் விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# மின்னொளிக் கிரிக்கெட்டில் வெற்றியீட்டிய வவுனியா அணிகள்


யாழ்ப்பாணம்,டிசெ.12
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் மின்னொளியிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இதுவரையில் இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் காமாட்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஐ.எஸ்.ஏ விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி விளையாட்டுக் கழக 'பி' அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்கை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் தாஸ் 12 ஓட்டங்களையும், செல்ரன், பகி ஆகியோர் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஐ.எஸ்.ஏ விளை யாட்டுக்கழக அணி சார்பில் முரளி, சக்தி ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
47 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஐ.எஸ்.ஏ அணி 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 39 ஓட்டங்களை மட்டும் பெற்றது.
இதில் சக்தி 21 ஓட்டங்களையும், முரளி 12 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் காமாட்சி விளையாட்டுக் கழக அணி சார்பில் தாஸ்,செல்ரன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். காமாட்சி விளையாட்டுக்கழக அணி 7 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
காமாட்சி விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் பகலவன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி விளையாட்டுக்கழக 'ஏ' அணி 5பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் ஜெயறூபன் 20 ஓட்டங்களையும், அருள் 9 ஓட்டங்களையும், நிசா 6 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் பகலவன் விளையாட்டுக்கழக அணி சார்பில் குமணேஸ், சுரேன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.



43 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பகலவன் அணி 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 31 ஓட்டங்களை மட்டும் பெற்றது.
இதில் கிசா 16 ஓட்டங்களையும், குமணேஸ் 6 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் காமாட்சி விளையாட்டுக்கழக அணிசார்பில் அருள், சிந்துஜன், ஜெயறூபன் ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். காமாட்சி விளையாட்டுக்கழக 'ஏ' அணி 11 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.
சுப்பர்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும், யங்பைட் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யங்பைட் விளையாட்டுக் கழக அணி 5பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் அச்சுதன் 16 ஓட்டங்களையும், சுரேன் 10 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் சுப்பர்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் நதீஸ்,பாஸ்கர், தலா 2 இலக்குகளையும், தியாகராஜா ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள்.
44 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுப்பர்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சகல இலக்குகளையும் இழந்து 31 ஓட்டங்களை மட்டும் பெற்றது.
இதில் பாஸ்கர் 15 ஓட்டங்களையும், தியாகராஜா 16 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் யங்பைட் விளையாட்டுக்கழக அணிசார்பில் அச்சுதன், முகுந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், தமிழ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
யங்பைட் விளையாட்டுக்கழகம் 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (த-23)

"-"

இந்த மூன்று ஆட்டங்களிலும் முதலில் துடுப் பெடுத்தாடிய அணியே வெற்றி பெற்றது.




# இந்திய அணிக்கு தொடரும் சோகம்

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் முதல் இரு போட்டிகளில் படுதோல்வி அடைந்து தொடரை இழந்தது.
இதற்கு அணியின் நடுவரிசை வீரர்கள் யுவராஜ் சிங், ரெய்னாவின் நிலையற்ற துடுப்பாட்டமும் ஒரு காரணம்.
யுவராஜ் சிங் இந்த ஆண்டு பங்கேற்ற 17 ஒருநாள் போட்டிகளில் 274 ஓட்டங்கள் (2 அரைச் சதம்) தான் எடுத்துள்ளார். சராசரி 19.71 ஓட்டங்கள். தென்னாபிரிக்க மண்ணில் விளையாடிய 11 போட்டிகளில் 211 ஓட்டங்கள் (23.44) எடுத்தார்.
ரெய்னா இவரைவிடப் பரவாயில்லை. கடைசியாக விளையாடிய 33 போட்டிகளில் 770 ஓட்டங்கள் (சராசரி 35.00) எடுத்துள்ளார்.
இது குறித்து இந்திய அணியின் அணித்தலைவர் டோனி கூறுகையில், கடந்த சில தொடர்களாக நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் சொதப்புகின்றனர். இது அணிக்கு நெருக்கடியாக அமைகிறது. மொத்தத்தில் சில போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கலாம். சில போட்டிகளில் தோல்வியடைந்து இருக்கலாம். இதில் இருந்து என்ன கற்றுக் கொண்டோம் என்பது தான் முக்கியம்.
முதல் போட்டியில் பந்து வீச்சு சரியில்லை. அடுத்த முறை துடுப்பாட்டத்தில் ஏமாற்றம் கிடைத்தது. எனினும் அடுத்த போட்டியில் வெற்றிக்கு முயற்சிப்போம் எனவும் கூறினார்.
தென்னாபிரிக்க மண் ணில் கடந்த 21 ஆண்டுகளாக இந்திய அணி, ஒருநாள் தொடரை வென்றதில்லை. இம்முறை உலக சாம்பியன் மற்றும் முதல் நிலை அந்தஸ்துடன் சென்ற இந்திய அணிக்கு மீண்டும் ஏமாற்றம் கிடைத்தது.
தென்னாபிரிக்காவில் நடைபெற்ற 19 போட்டிகளில் 4 போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது, 14 போட்டிகளில் தோல்வி, 1 போட்டிக்கு முடிவு இல்லை.
டெஸ்ட் தொடரில் பங்கேற்க இந்திய அணி ஐந்து முறை தென்னாபிரிக்கா சென்றது. இதில் நான்கு முறை (1992-93, 96-97, 2001, 06-07) தொடரை இழந்தது. ஒரு முறை (2010-11) சமநிலை ஆனது. (த)

# இலங்கைக் கிரிக்கெட் அணிக்கான பயிற்சியாளர் போட்டியில் மூவர்

இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவிக்கான போட்டியில் தற்போது மூவர் களத்தில் உள்ளனர். ஏற்கனவே காணப்பட்ட இருவரோடு, மூன்றாமவராக போல் பப்றேஸூம் இணைந்துள்ளார். இலங்கை அணியின் முன்னாள் உதவிப் பயிற்றுவிப்பாளரான போல் பப்றேஸ், யோர்க்ஸயர் அணியின் இரண்டாவது பதினொருவர் அணியின் பயிற்றுவிப்பாளராகச் செயற்பட்டுள்ளார்.
ஆரம்பத்தில் இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்த 11 பேரில் போல் பப்றேஸூம் ஒருவர் என்ற போதிலும், அதன் பின்னர் அவர் அதிலிருந்து விலகியிருந்தார். எனினும், மீண்டும் தனது விருப்பத்தை அவர் வெளிப்படுத்தியிருந்தார்.
இதன் காரணமாக அவர் தனது முதலாவது நேர்முகத் தேர்வில் பங்குபற்றியுள்ளார். இந்த நேர்முகத் தேர்வு சிறப்பானதாக அமைந்ததாக அறிவிக்கப்படுகிறது. அடுத்த நேர்முகத் தேர்வு விரைவில் இடம்பெறும் என இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்தார்.
ஏற்கனவே மார்வன் அத்தப்பத்து, மார்க் டேவிஸ் இருவரும் பயிற்றுவிப்பாளர் பதவிக்கான இறுதிக்கப்பட்டப் போட்டியாளர்களாகக் காணப்பட்ட நிலையில், போல் ஃபப்றேஸ் தற்போது புதிதாக இணைந்துள்ளதுடன், இன்னும் புதியவர்கள் விண்ணப்பித்தால் அவர்களையும் கருத்திற் கொள்ளத் தயார் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (த)





# ஸ்வன்சீ, ஹள் சிற்றி போட்டி சமநிலையில்

இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் ஸ்வன்சீ அணிக்கும், ஹள் சிற்றி அணிக்குமிடையிலான போட்டி சமநிலையில் நிறைவடைந்துள்ளது.
லிபேர்ட்டி மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்று சமநிலை முடிவைப் பெற்றுக்கொண்டன.
போட்டியின் ஆரம்பத்திலேயே, 9ஆவது நிமிடத்தில் ஹள் சிற்றி அணியின் டானியல் கிரஹம் கோலொன்றினைப் பெற்று ஹள் சிற்றி அணிக்கு முன்னிலையைப் பெற்றுக் கொடுத்தார். முதற் பாதியில் மேலதிக கோல்கள் பெறப்படாத நிலையில், ஹள் சிற்றி அணி 1:0 என்ற கணக்கில் முன் னிலை வகித்தது.
இரண்டாவது பாதியில் சிறப்பான ஆட்டத்தை ஸ்வன்சீ அணி வெளிப்படுத்தியிருந்தது. போட்டியின் 60ஆவது நிமிடத்தில் ஸ்வன்சீ அணியின் சிக்கோ கோலொன்றினைப் பெற்றுக் கொடுக்க, இரு அணிகளின் கோல் எண்ணிக்கையும் 1:1 என்ற கணக்கில் சமப்பட்டது.
அதன் பின்னர் மேலதிக கோல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காத நிலையில், இப்போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.
இதேவேளை, இங்கிலாந்து எப்.ஏ கிண்ணப் போட்டிகளில் ஒக்ஸ்போர்ட் யுனைட்டட் அணிக்கும், றெக்ஹம் அணிக்குமிடையிலான போட்டியில் ஒக்ஸ்போர்ட் யுனைட்டட் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றிருந்தது. (த)



# தென்னாபிரிக்க டெஸ்ட் அணி அறிவிப்பு




தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான தென்னாபிரிக்க டெஸ்ட் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.
கிறேம் ஸ்மித் தலைமையிலான 15 பேர் கொண்ட குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது.
தென்னாபிரிக்க அணி அண்மையில் ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடித்துக்கொண்ட போதிலும், கடந்த ஒன்றரை வருட காலத்தில் அவ்வணி 13 போட்டிகளில் பாகிஸ்தானுக்கெதிரான ஒரு போட்டியில் மாத்திரம் தோல்வியடைந்த நிலையில், அந்த வீரர்கள் மீது நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி, பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் குழாமுக்காக அறிவிக்கப்பட்ட குழாமே இந்தியாவுக்கெதிரான இந்தத் தொடருக்காகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
2 போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடர் டிசெம்பர் 18ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
அறிவிக்கப்பட்டுள்ள குழாம்: கிறேம் ஸ்மித், ஹசிம் அம்லா, ஏபி.டி.வில்லியர்ஸ், ஜே.பி. டுமினி, பப் டு பிளெஸிஸ், டீன் எல்கர், இம்ரான் தாஹிர், ஜக்ஸ் கலிஸ், றோறி கிளெய்ன்வெல்ட்ற், மோர்னி மோர்க்கல், அல்விறோ பீற்றர்சன், றொபின் பீற்றர்சன், வேர்ணன் பிலாந்தர், டேல் ஸ்ரெய்ன், தமி சொலக்கிலே. (த)

> ”பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் குழாமுக்காக அறிவிக்கப்பட்ட குழாமே இந்தியாவுக்கெதிரான இந்தத் தொடருக்காகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# K-AIMS உடன் இணைந்து ACCA- U.K கற்கைநெறியில்

[சான்றிதல் அளிக்கப்பட்ட பட்டையக்கணக்காளர் சம்மேளனம்- U.K]

## Rs 35,000/=

பெறுமதியான புலமைப்பரீசிலை பெறுவதற்கு அரிய வாய்ப்பு

**ஏன் ACCA**

- உலகளாவிய ரீதியில் வேலை வாய்ப்பு
- எந்த நாட்டிலும் ACCA கல்வியை தொடரலாம்
- உலகளாவிய ரீதியில் அங்கீகாரம்

**எங்கே ACCA கற்கைநெறியை ஆரம்பிப்பது**

- கொழும்பிலும் யாழ் நகரிலும் இயங்கும் GOLD Approval அங்கீகாரம் பெற்ற நிறுவனமான K-AIMS

**ACCA மூன்று நிலைகளை கொண்டது**

Diploma 6 Months + Degree 1 year + ACCA 1 year

**ஏன் K-AIMS ஐ தெரிவு செய்யவேண்டும்**

- GOLD Approval
- 30 மாணவர்களை மட்டுமே உள்ளடக்கக்கூடிய வகுப்பறைகள்
- ஒவ்வொரு மாணவரும் விரிவுரையாளாரின் நேரடி கண்காணிப்பில் கற்கும் வாய்ப்பு
- வித்தியாசமான கற்பிக்கும் முறைமையை கொண்ட உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் பெற்ற கல்விதகமையை கொண்ட விரிவுரையாளர்கள்
- யாழ் குடாநாட்டில் எங்கு இருந்தும் இலகுவாக சென்றடையக் கூடிய வகையில் யாழ் நகரின் மத்தியில் அமைந்துள்ள நிறுவனம்

புதிய பிரிவுகள் December 15ம் திகதி ஆரம்பமாகின்றன

பதிவுகளை December 12ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்

ALP - STUDENT TUITION ACCA GOLD 1/4/2013 - 31/3/2014

K-AIMS
We Make You Progress Everyday..

Colombo
35-1/1, Upatissa Road
Bambalapitiya
0772 555 814 /0770 780 678

JAFFNA
147-2/2, K.K.S Road
[DFCC வங்கிக்கு மேலாக ]
0773 722 104


# ஏலம் போனது அரிய ஒலிம்பிக் பதக்கம்




மிகவும் சர்ச்சைக்குரிய பேர்ளின் ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கதடகள வீரர் ஜெஸ்ஸி ஓவன்ஸ் வென்ற ஒரு தங்கப் பதக்கம் சுமார் ஒன்றரை மில்லியன் டொலருக்கு ஏலம் போயுள்ளது.

1936 ஆம் ஆண்டு, ஜேர்மனி, ஹிட்லரின் ஆட்சியின் கீழ் இருந்தபோது, நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் கறுப்பின அமெரிக்கரான ஜெஸ்ஸி ஓவென்ஸ் நான்கு தங்கப் பதக்கங்களை வென்றார்.

அந்த ஒலிம்பிக் போட்டியில் அவர் ஆடவருக்கான 100, 200 மீற்றர் ஓட்டங்களில் மட்டுமல்லாமல், 400 மீற்றர் தொடரோட்டம் மற்றும் நீளம் தாண்டுதல் ஆகியவற்றிலும் தங்கப் பதக்கம் வென்றார். அந்தப் பிரிவுகளில் ஜேர்மன் வீரர்கள் வெள்ளிப் பதக்கமே பெற முடிந்தது.

ஒரு தனி மனிதராக, ஆரிய மேலாதிக்கத்தை அவர் தகர்த்தெறிந்தது ஹிட்லரை பெரிதும் கோபாவேசத்துக்கு உள்ளாக்கியது.

பேர்ளின் ஒலிம்பிக் போட்டியில் ஓவன்ஸ் நான்கு தங்கப் பதக்கங்களை வெல்வதற்கு முன்னர், வேறு எவரும் அப்படியொரு சாதனையை படைத்தது இல்லை. அவ்வகையில் அந்தச் சாதனை 1984 ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சலஸ் ஒலிம்பிக் போட்டியில் கார்ல் லீவிஸ் சமன் செய்யும் வரை தனிப்பெரும் ஒரு சாதனையாகத் திகழ்ந்தது.

இணையதளத்தின் மூலம் விற்பனையான இந்தப் பதக்கம் மட்டுமே அவர் பெற்ற நான்கில் இப்போது எஞ்சியிருந்ததாகும். எனினும் இப்போது விற்பனையாகியுள்ள அந்தப் பதக்கத்தை அவர் எந்தப் போட்டியில் வென்றார் என்பது தெரியவில்லை.

நிலக்குத்தகைதாரரின் மகனும், ஒரு அடிமையின் பேரனுமான அவர் 1936 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் நான்கு தங்கப் பதக்கத்தை வென்ற பின் நாடு திரும்பிய போதும், நிறவெறிக் கொள்கை காரணமாக புறக்கணிக்கப்படுவதும், வேலைக்காக சிரமப்படும் நிலையும் ஏற்பட்டது.

அந்த ஒலிம்பிக் போட்டிகளில் நான்கு தங்கப் பதக்கங்களை வென்று நாடு திரும்பினாலும், அடுத்த மூன்றாண்டுகளில் தான் கடனாளி என்று அவர் அறிவிக்கும் நிலை ஏற்பட்டது.

அவர் மிகுந்த சிரமத்தில் இருந்தபோது அவரை ஆதரித்த தனது நெருங்கிய நண்பரும் நடனக் கலைஞருமான பில் போஜாங்கில்ஸ் றொபின்சனுக்கு பதக்கங்களில் ஒன்றை அன்பளிப்பாக கொடுத் தார்.

அந்தப் பதக்கமே இப்போது கலிபோர்னியாவில் ஏலம் போயுள்ளது. ஒலிம்பிக் போட்டிகள் தொடர்பான ஒரு நினைவுப் பொருள் இந்த அளவுக்கு அதிக தொகைக்கு இதுவரை ஏலத் தில் சென்றதில்லை. (த)

# மேற்கிந்திய வீரர்களுக்கு சிக்கல்




ஐ.சி.சி., விதிப்படி பந்து வீச்சு சோதனையில் ஈடுபடாத மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சாளர்கள் ஷில்லிங்போர்ட், சாமுவேல்ஸ் ஆகியோருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பகுதிநேரப் பந்துவீச்சாளர் சாமுவேல்ஸ், பந்தை எறிவதாக நிரூபிக்கப்பட்டதால் 2008 முதல் பந்து வீசவில்லை. இதே காரணத்துக்காகச் சுழற்பந்து வீச்சாளர் ஷில்லிங்போர்ட்டுக்கு 2010 முதல் தடை விதிக்கப்பட்டது. இதில் இருந்து மீண்ட இவர்கள். இந்தியாவுக்கெதிரான மும்பை டெஸ்டில் (கடந்த நவம்பர் 14-16ஆம் திகதி), மீண்டும் பந்தை எறிவதாக புகார் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள், நியூசிலாந்து செல்லும் வழியில் ஆஸ்திரேலியா சென்று சோதனையில் பங்கேற்க வேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) தெரிவித்தது. இந்த அறிக்கை 14 நாள்களுக்குள் ஐ.சி.சி. யிடம் தரப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, நியூசிலாந்து சென்ற மேற்கிந்திய தீவுகள் அணி, டுனிடினில்நடந்த முதல் டெஸ்ட் போட்டியை சமநிலை செய்தது.

இப்போட்டியின் 3ஆவது நாளில், ஐ.சி.சியின் 14 நாள் கால அவகாசம் முடிந்தது.

இவர்கள் மீதான நடவடிக்கை குறித்து இன்னும் ஒரு சில நாள்களுக்குள் தெரியவரும் என்பதால் இன்று தொடங்கும் இரண்டாவது டெஸ்டில் பங்கேற்பது சிக்கல் ஆகியுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பயிற்சியாளர் ஓடிஸ் கிப்சன் கூறுகையில், ஐ.சி.சியிடம் இருந்து இதுவரை எவ்வித கடிதமும் வரவில்லை. ஒருவேளை இன்று போட்டி தொடங்கும் வரை கடிதம் வரவில்லை எனில், தொடர்ந்து விளையாடுவர் என்றும் இதனைவிடுத்து, தொடரின் இடையில் வீரர்கள் குறித்து அறிவிப்பு வெளியிடுவது ஐ.சி.சிக்கு அழகல்ல எனவும் கூறினார். (த)


## சந்தன மரக்கன்றுகள் விற்பனைக்கு

மீண்டும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பிரதேசங்களில் உங்கள் சொந்தக் காணிகளில் பெறு மதிமிக்க சந்தன மரங்களை நட்டு பலன் பெற்றுக் கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பம்.

சந்தன மரங்கள் உங்கள் காணிகளுக்கு அதிக பெறுமதியை பெற்றுக் கொடுப்பதுடன், 12-15 வருடங்களில் ஒரு மரத்தின் பெறுமதி சுமார் ரூபா 5 இலட்சமாக மதிப்பிடப்படும்.

சந்தன மரங்களை நட்டு பராமரிப்பதற்கான சகல ஆலோசனைகளுடன் இம்மாதம் 17,18,19ஆம் திகதிகளில் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் முற் . பதிவு செய்வோருக்கு கன்றுகள் விநியோகிக்கப் படும்.

**ஒரு கன்றின் விலை ரூபா 1000/= மட்டுமே.**

Genesis Forestry ventures

பதிவுகளுக்கு:
077 343 6927,
077 897 9990

## வீடும் கடையும் விற்பனைக்கு

யாழ். பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் சந்தியில் மூன்று பரப்பு காணியில் 45 அடி நீளம் கொண்ட மூன்று கடைகளும் மேல் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 783 6878 (சி/14334) (7.6.3)

## டென்மார்க்கில் படிக்க உழைக்க

2பேருக்கு மட்டும் இவ் வாய்ப்பு

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9016

## நியூசிலாந்தில் படிக்க உழைக்க

★ 2 வருடத்தில் PR உறுதியாகக் கிடைக்கும்
★ O/L மட்டும் போதும்
28 வயதுக்குள்
முடிவு 25/12/2013

திசைகாட்டி (பிறைவேற்)லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.